பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 1 சனிக்கிழமை (15.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 170

# குடாநாட்டின் அமைதிக்கு மேலும் கடும் நடவடிக்கை

## சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் படைத்தளபதி



யாழ்ப்பாணம் மே15

**குடாநாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் வன்செயல் தொடர்ந்து இடம்பெறும் பட்சத்தில்-தேவைப்படும் பட்சத்தில் மேலும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். யாழ்ப்பாண மக்கள் பீதியும் அச்சமுமின்றி வாழ வசதியாக கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு முடிவு செய்துள்ளது.**

யாழ். பிராந்திய படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் சட்டத்தரணிகளுடன் நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவும் கலந்துகொண்டார்.

மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க நேற்றைய சந்திப்பில் மேலும் கூறியவை வருமாறு:-

குடாநாட்டில் தொடரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அரசு உறுதிபூண்டுள்ளது. இச்சம்பவங்களுக்கு காரணமான சூத்திரதாரிகள் பலரை நாம் கைதுசெய்துள்ளோம். தொடர்ந்தும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். வன்செயல்களுக்குப் பின்னணியில் இருப்பவர்களைக் கண்டுபிடித்து, சட்டம் ஒழுங்கைப் பேணி, மக்களின் பீதியையும் அச்சத்தையும் நீக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குடாநாட்டில் சாவகச்சேரி மாணவனின் கொலையுடன் தொடங்கி பல்வேறு வன்செயல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த வன்செயல்களால் மக்கள் பீதியும், அச்சமும் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(24 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. மறுசீரமைப்புக் குழுவுடன் ரணில் பேச்சு

கொழும்பு,மே 15

ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு குழுவிற்கும் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் நேற்று மாலை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான கேம்ரிஜ் டெரஸிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக மறுசீரமைப்பு குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் நீதிபதிகளுக்கு முழுப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கினார் பிரதம நீதியரசர்

### நேற்றைய சட்டத்தரணிகளுடனான சந்திப்பின்போது

கொழும்பு,மே15

வடக்கில் பணியாற்றும் நீதிபதிகளுக்கு முழுப்பாதுகாப்பு உத்தரவாதமும் வழங்குவதாக பிரதம நீதியரசர் அசோக டி சில்வா யாழ். சட்டத்தரணிகளின் சங்கத்துக்கு உத்தரவாதம் அளித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் சட்டத்தரணிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றுப் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவை கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்புத் தொடர்பாக யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் உதயனுக்குத் தெரிவித்ததாவது :-

பிரதம நீதியரசருடனான சந்திப்பில், சாவகச்சேரி நீதிவானுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக எடுத்துக் கூறினோம்.

நீதிபதி ஒருவருக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்காக சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதை பிரதம நீதியரசர் வரவேற்றார்.

எதிர்காலத்தில் சாவகச்சேரி நீதிவானுக்கு அச்சுறுத்தல், இடையூறுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுவாகவே நீதிபதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பிரதம நீதியரசர் எம்மிடம் தெரிவித்தார்.

பிரதம நீதியரசரின் உத்தரவாதத்தை

(24 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் 2ஆண்டுகளுக்கு நீடித்தது

கொழும்பு,மே15

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் போர் முடிவடைந்து ஒரு வருடத்தைத் தொடவுள்ள நிலையில் இந்திய அரசு புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் நீடித்துள்ளது.

இந்திய உள்துறை அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை நேற்று முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தடை நீடிப்புக்கான காரணத்தை மத்திய அரசு அறிவிக்கவில்லை.

போர் முடிந்துவிட்டது, பிரபாகரன் உள்ளிட்ட புலிகளின் அனைத்து தலைவர்களும் கொல்லப்பட்டுவிட்டனர் என்று கடந்த ஆண்டு மே 18ஆம் திகதி இலங்கை அரசு அறிவித்தது.

பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோரின் மரணங்கள் குறித்து தொடர்ந்து இரு வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. இதற்கேற்றபடி இந்த இருவரின் மரணச் சான்றிதழ்களையும் இதுவரை இலங்கை அரசு இந்தியாவிடம் கையளிக்காமல் உள்ளது.

அத்துடன், புலிகள் இயக்கத்திலிருந்து

(24 ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களை கண்காணிக்கும் இலங்கை அரசு

### அவுஸ்திரேலியப் பத்திரிகை தகவல்

சிட்னி,மே15

புலம்பெயர் தமிழர்களைக் கண்காணிக்கும் புதிய நிகழ்ச்சிநிரல் ஒன்றை இலங்கை அரசு மும்முரமாக முன்னெடுத்து வருகின்றது என்று தனக்குக் கிடைத்த ஆதாரங்களை மேற்கோள்காட்டி 'த அவுஸ்திரேலியன்' என்ற அவுஸ்திரேலியப் பத்திரிகை செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசுத் தேர்தலின் பின் அரசினால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்நடவடிக்கைகள் புலம்பெயர் தமிழர்களைப் பெரிதும் பீதியில் ஆழ்த்தியுள்ளன என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

"நாடு கடந்த தமிழீழ அரசுத் தேர்தலில் வெற்றிபெற்ற பிரதிநிதிகள் கண்காணிக்கப்படுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. அவர்கள் இலங்கை திரும்ப முடியாது என்றும் எச்சரித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசுத் தேர்தலில் கனடா,பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து போன்ற மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் வகைதொகை இன்றிக் கலந்து கொண்டு வாக்களித்திருக்கின்றார்கள். அவர்களே 135 பிரதிநிதிகள் கொண்ட அரசை உருவாக்கியுள்ளனர்.

இந்நிலையில் மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அரசின் 'கண்காணிப்பு' அறிவிப்பை அடுத்துப் பெரிதும் அச்சம் அடைந்துள்ளனர். அதே நேரம், இலங்கைத் தூதரகங்களுக்கு அலுவல்களுக்காகச் செல்கின்றவர்கள் கேள்வி கேட்டுத் துளைக்கப்படுகின்றனர் -- என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கொழும்பு மற்றும் தென்மாவட்டங்களில் நேற்று பரவலாக அடை மழை; தாழ்நிலப் பகுதியில் வெள்ளம்!

கொழும்பு,மே15

நாட்டின் பல பாகங்களிலும் நேற்று அதிகாலை முதல் பெய்துவரும் அடை மழை காரணமாக தலைநகர் கொழும்பு உட்பட பல மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின.


குறிப்பாக கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கம்பஹா உள்ளிட்ட பகுதிகளில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ் நிலப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து அல்லோலகல்லோலப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுக் காலை முதல் கடும் மழை பெய்து வருகின்றது. கடும் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்து வருவதால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பல இடங்களில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டது. களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலேயே அதிகளவு மழை வீழ்ச்சி பதிவானது. புறக்கோட்டையில் 144.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவானது என வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் ஜயசிங்க ஆராய்ச்சி தெரிவித்தார். (24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் கொம்பனித்தெருவில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு,மே15

கொழும்பு கொம்பனித் தெருப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வீடுகளை அகற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம் கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று நடைபெற்றது.

பொலிஸாரின் விசேட பாதுகாப்புக்கு மத்தியில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தால் அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டதோடு பெரும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த சனிக்கிழமை கொம்பனித்தெரு மியூஸ் வீதியில் அமைந்திருந்த 21 வீடுகளை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டவை என்று கூறி நகர அபிவிருத்தி அதிகார சபையினர் அகற்றியிருந்தனர்.இதன்போது 31 குடும்பங்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## திருமண பந்தத்தில் வெள்ளிவிழாக் காணும் தம்பதியினர் -15.05.2010



**இளையபவி சிவலிங்கம்**
(சிவதாஸ் அறிவு ஆலை, சுன்னாகம்)

**சிவலிங்கம் லோகேஸ்வரி**
(ஆசிரியை யா/ ஏழாலை ம.வி.)

வெள்ளி விழாக் காணுகின்றார் - நன்மக்கட்
பேற்றினைப் பெற்றிட்ட இவர்
நல்லறமாம் இல்லறத்தில் பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம் வாழி நீடு.

வாழ்த்துவோர்: இராசலிங்கம் - சந்திரமணி,
பசுபதி - குழந்தைவேல்
மற்றும் பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரர்கள்,மைத்துனிமார், மருமக்கள்.

"இளவரசி இல்லம்"
குராவத்தை
சுன்னாகம். (98264)


## யாழ். - கொடிகாமம் மினிபஸ் சேவை நிறுத்தத்தால் பயணிகள் நேற்றுச் சிரமம்

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணத்துக்கும் கொடிகாமத்துக்கும் இடையேயான மினிபஸ் சேவைகள் நேற்று நிறுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்தப் பாதையில் (769 இலக்க) பயணிகளை வவுனியா பஸ்ஸில் ஏற்றியதால் ஏற்பட்ட சச்சரவை அடுத்தே மினிபஸ் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிக் கைகலப்பில் முடிந்ததாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் விடத்தல்பளையைச் சேர்ந்த ச.சதீஸ், நுணாவில் மேற்கைச் சேர்ந்த அ.அருள்ராஜ் ஆகிய இருவரும் தாக்குதலுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாகவே நேற்று மினிபஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை என்று சிற்றூர்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை, தாக்குதலில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207-131)


## பகுதிநேர ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடம்

(ஆண்டு 1 தொடக்கம் 8 வரையான மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு)

**HOMAC**

ஐக்கியராச்சியத்தை தலைமை அலுவலகமாகக் கொண்ட சிறுவர்களின் கணித அறிவினை சிரமமின்றி மிகக் குறுகிய காலத்துக்குள் உளவியல் சார் அணுகுமுறைகளைக் கையாண்டு மேம்படுத்தும் நிறுவனம். உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீன கற்றல் நுட்ப முறைகளைக் கையாண்டு சிறுவர்களின் கல்வி மேம்பாட்டில் உலகளவில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்ற Homac மிக விரைவில் எமது பிரதேசத்திலும் தனது கிளையினை நிறுவி கல்விச் சேவையினை வழங்க எண்ணியுள்ளது.

இச்சேவையினை எமது பிரதேசத்தில் நடைமுறைப்படுத்த ஆர்வம் உள்ள பகுதிநேர ஆசிரியர்கள் யாழ்.மாவட்ட அனைத்துப் பிரதேசங்களுக்கும் தேவைப்படுகிறார்கள்.

விண்ணப்பிக்கும் தகைமையுடையோர்(தெரிவில் இருபாலாருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படும்)

* பாடசாலை ஆசிரியர்கள்
* தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள்
* மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள்
* வீட்டில் இருந்து அயல்வீட்டுக் குழந்தைகளுக்கு கற்பிற்பவர்கள்

மேற்படி தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் எமது நிறுவனத்தின் தலை சிறந்த விரிவுரையாளர்களால் நடத்தப்பட வுள்ளது. (இப் பயிற்சியின் போது பாடசாலை ஆசிரியர்களின் வசதிக் கேற்ப நேர ஒழுங்கு பேணப்படும்)

எமது நிறுவனத்தில் இணைவதனூடாக நீங்கள் பகுதிநேர வருமானத்தினைப் பெறமுடியும்.

விண்ணப்ப முடிவு திகதி : 22.05.2010

உங்கள் சுயவிவரக் கோவையை விண்ணப்பிக்கவேண்டிய முகவரி : தெ.சத்தியசங்கர், இணைப்பாளர், இல.18/3 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 0775403293

மின் அஞ்சல் comaceducation@yahoo.com


## சாரதி அனுமதிப் பத்திரம்; கிளிநொச்சியில் புதன் எழுத்துப் பரீட்சை

கிளிநொச்சி, மே 15

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம் பெறும் என்று அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கும்போது செயலகத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் அன்று காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-1)

## நீதியே, நீதி வழங்கு என்ற 2010.05.11ஆம் திகதிய பத்திரிகைப் பிரசுரத்திற்கான மறு விளக்கம்

11.05.2010 அன்று உள்ளூர் பத்திரிகைகளில் "நீதியே நீதி வழங்கு" என்ற தலைப்பில் யாழ்ப்பாண மாநகர சபையின் பெயரில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரப் பிரசுரம் ஆனது யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் அல்லது மாநகரசபையின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டு பிரசுரிக்கப்படவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்கு இல. AR228/10 என்ற வழக்கில் 11.05.2010, 12.05.2010 ஆகிய திகதிகளில் மன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கமைய குறித்த பிரசுரமானது நீதித்துறையின் செயற்பாட்டுக்கு அச்சுறுத்தலோ அல்லது அபகீர்த்தியோ ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக எவராவது கருதுவார்களாயின் அதற்காகப் பகிரங்கமாக மனம் வருந்துவதோடு எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் பணிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். ( கி/567675)

## நுணாவில் மேற்கில் துணிகரத் திருட்டு

யாழ்ப்பாணம், மே 15

நுணாவில் மேற்கு தேவாலய வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் பட்டப் பகலில் பத்துப் பவுண் தங்க நகை திருடப்பட்டுள்ளது.

வீட்டுக்காரப் பெண் குசினிக்குள் சமையலில் ஈடுபட்டிருந்த வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடன் அங்கிருந்த நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-207)


## கண்ணீர் அஞ்சலி

12.05.2010 இல் காலமான எமது கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினர் திரு.இ.நாகவேல்ராசாவின் அன்புத் தந்தை

**அமரர் எஸ்.இராசையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு.* (கி/567660)
இணுவில் சைவத் திருநெறிக் கழகம், சிவகாமி அறநெறிப் பாடசாலை.

## இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலி

வலி.மேற்கு பிரதேச சபையின் (சுழிபுரம்) செயலாளர்
உயர்திரு. சுப்பிரமணியம் புத்திசிகாமணி
அவர்களின் அன்புத் தாயார்



**திருமதி இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்கள் 11.05.2010 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம். (98272)

## கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை மரியராசரத்தினம் ஞானேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்



**றோசம்மா மரியராசரத்தினம்**
(மிருசுவில்)

அவர்கள் 08.05.2010 அன்று கனடாவில் இறைபதமடைந்த துயரமான செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தங்களின் சிரித்த முகத்தினை நினைவுகூரும்
மிருசுவில் பங்கு மக்கள். (கி/567669)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா அருணாசலம்

இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த, செல்லையா அருணாசலம் நேற்று (14.05.2010) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி.* (98289)

தகவல் : அ. கிருபாரூபன் (மகன்).

### இராமலிங்கம் சிவபாக்கியநாதன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி - காசாளர்)



பண்ணாகத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சிவபாக்கியநாதன் நேற்று (14.05.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திலகவதியார் (கிராம அலுவலர் - வட்டு.வடக்கு) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற வெற்றிவேலு சின்னையா - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும், புவனேஸ்வரி, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவதர்சினி (லண்டன்), சிவறஞ்சினி (லண்டன்), சிவசொரூபி (பௌதிகவியல்துறை, முதலாம் வருட மாணவி - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதேவா (லண்டன்), சிறிஸ்கந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, சத்தியமூர்த்தி, சோதிநாதன் மற்றும் சி. கனகநாயகம் (தொழிலதிபர், கொழும்பு), காலஞ்சென்ற கோமளாதேவி மற்றும் சி.தயாபரசிவம் (ஓய்வூதியர்), அன்னரத்தினம், வைகுந்தவாசன் (கொழும்பு), வள்ளுவதாசன் (காசாளர்-யாழ். பல்கலைக்கழகம்), கிருஷ்ணமூர்த்தி, சிவசக்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2010) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.* (கி/98290)

தகவல் : மனைவி, பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தூர விலகி நிற்க எச்சரிக்கை!

இலங்கை அரசாங்கத்தை இந்தியா ஒருபோதும் வழி நடத்த முடியாது.அவர்கள் தமது அரசாங்கத்தை ஒழுங்கான முறையில் நடத்தட்டும். இவ்வாறு காரசாரமாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார் - எச்சரித்திருக்கிறார் இந்நாட்டு அமைச்சர்களில் ஒருவரான விமல் வீரவன்ச.

இவர் அரசாங்கத்தோடு இணைந்திருக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமாவார்.முன்னர் ஜனதா விமுத்தி பெரமுனவின் (ஜே.வி.பியின்) மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவராக விளங்கியவர். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பிரிந்து புதிய கட்சியைத் தோற்றுவித்தவர்.

இவர் திடீரென இந்தியாமீது ஏன் எரிந்து விழுகிறார் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழக்கூடியதே. இந்தியாவை தாஜா பண்ணும் அதேவேளை, அதற்குப் பாடம் புகட்டும் விதத்தில் சீனாவையும் அரவணைத்துக் கொள்ளும் தந்திரோபாயத்தில் - இராஜதந்திரத்தில் - கொடி கட்டிப் பறக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் இந்தியாவை எச்சரிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கிறார். இது இந்தியத் தரப்புக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் அதே அளவில் உள்ளூர ஆத்திரத்தையும் உண்டாக் கும்.

இலங்கை அரசோடு கைகோர்த்து, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, வெட்டி வீழ்த்திய பெருமை, இந்திய அரசுக்கு நிரம்பவும் உண்டு. தமிழகத்தின் 6 கோடி மக்களின் உணர்வுகளை கசக்கி எறிந்து விட்டு, சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் அரசியல் நாடகங்களை அரங்கேற்றுவதில் அதிவல்லவரான கருணாநிதியை 'கையில் போட்டுக் கொண்டு' மஹிந்தவுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்த இந்திய அரசுக்கு, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதை ஒருவருட காலத்தில் புகட்டியிருக்கிறார் விமல்வீரவன்ச.

இலங்கை அரசாங்கம் தனது நாட்டின் நலன்களை கருத்தில் கொண்டு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர உள்ளதாக அறிவித்திருக்கும் இவ்வேளையில், அது குறித்து இந்தியா உத்தியோகபூர்வமாக எந்தவித கருத்தையும் வெளியிட்டதாக இல்லை.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், இலங்கை தனக்கு உண்டாகியுள்ள போருக்குப் பிந்திய சவால்களை எதிர்கொள்வதற்கு இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் முதலில் நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று புதுடில்லியில் இந்த வாரம் நடைபெற்ற சுயாதீன ஆய்வு நிறுவனம் ஒன்றின் மாநாட்டை தொடக்கி வைத்து பேசும் போது கருத்து வெளியிட்டிருந்தார். அவ்வளவுதான்.

இவர்கள் யார் எங்கள் விடயத்தில் மூக்கை நுழைப்பதற்கு, புத்திமதி கூறுவதெற்கென்று இலங்கையின் அரச தலைமைப்பீடம் நினைத்திருக்கும். முளையிலேயே கிள்ளிவிட வேண்டும், இந்தியாவின் வாலை ஆரம்பத்திலேயே ஒட்ட நறுக்கவேண்டும் என்று எண்ணி அதனை வீச்சோடு கூறுவதற்கு மிகப் பொருத்தமானவர் புதிதாக அமைச்சரவையில் இடம்பிடித்திருக்கும் விமல் வீரவன்சவே என்று எண்ணி இந்தியாவை மறைமுகமாக சீண்டும் 'சின்னவேலையை' அவரிடம் ஒப்படைத்திருக்கக் கூடும் அரசுத் தலைமை.

- அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கான யோசனைகள் தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

- இப்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைகளை மாற்றி அமைப்பது அரசமைப்புச் சட்டத் திருத்தங்களில் முதலாவது.

- நாடாளுமன்றம் இயற்றும் சட்ட மூலங்களை பரிசீலனை செய்து அங்கீகரிப்பதற்காக மேற்சபை ஒன்றை நிறுவுதல் இரண்டாவது.

சுயாதீன ஆணைக்குழுக்களை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது திருத்தத்தில் மாற்றங்களைக் கொண்டுவருதல் மூன்றாவது.

மேற்படி மூன்று விடயங்களுமே அரசாங்கத்தால் இந்த வாரத்தில் பிரசித்தப்படுத்தப்பட்ட விடயங்கள்.

அத்தோடு ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மூன்று தடவைகளாக அதிகரிப்பது என்பது அரசின் முக்கிய வேட்கைகளில் ஒன்று என்பதும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இவற்றில் இந்தியா அலட்டிக் கொள்ளக் கூடிய, பெயருக்கேனும் அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளத்தக்க, எதுவுமே இல்லை! அவ்வாறிருக்க அமைச்சர் விமல் வீரவன்ச அந்த நாட்டினை எச்சரிக்கும் தொனியில் சீறிப்பாய்ந்திருப்பது ஏன்?

எங்கள் உள்நாட்டு விவகாரத்தில் தேவையற்று நீ தலையிடக் கூடாது. குறிப்பாகத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து எங்களுக்கு அறிவுரையோ, அழுத்தமோ தருவதற்கு எள்ளளவும் எண்ணிப்பார்க்கவும் கூடாது என்று இந்தியாவின் தலையில் குட்டப்பட்டுள்ளதாகக் கொள்ளவேண்டியுள்ளது.

வன்னிப் போரின் பின்னரான வாழ்வாதாரம், அபிவிருத்தி என்று நீங்கள் ஒன்றுக்கு மூன்று தடவைகள் என்ன, நூறு தடவைகள் கோடி கோடியாக உதவிகளை அள்ளித் தந்தாலும், அவற்றைச் சாட்டாக வைத்து இனப்பிரச்சினை தீர்வு குறித்து எமது பக்கம் தலையும் வைத்துப் படுக்கக் கூடாது! இலங்கை அரசுத் தலைவர், அமைச்சர் வீரவன்ச மூலம் விடுக்கும் எச்சரிக்கை இது

இந்தியாவே, இந்திய அரசே உன்னால் என்ன செய்ய முடியும்?

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான உரிமைகளை பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றோம்

### அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் தலைமை அதிகாரி நீற்றா

யாழ்ப்பாணம்,மே 15

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாம் உலகம் முழுவதிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றோம் என அகதிகளுக்கான ஐ.நா தூதரகத் தலைமை அதிகாரி நீற்றா தெரிவித்தார்.

மனித உரிமை பாதுகாவலர் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வும், 2009ஆம் ஆண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது நிறுவனத்திற்குப் பல வெளிநாடுகள் நிதி உதவிகளை வழங்குகின்றன. இந்த உதவிகளின் மூலம் நாம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான பல சேவைகளைச் செய்து வருகின்றோம்.

அதன் ஒரு கட்டமாகவே நாம் மனித உரிமை ஆணைக்குழுவுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இன்று நீங்கள் இப்பயிற்சி நெறியில்இணைந்துள்ளீர்கள். இதன் மூலம் சமுதாயத்தில் உள்ள பிரச்சினை களை அறிந்து எமக்குத் தெரியப்படுத்த வேண்டும். நாங்கள் அப்பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெற்றுத் தருவோம் - என்றார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டத்தின் பிராந்திய செயற்றிட்ட அதிகாரி கே.கார்த்திகா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜாவும், சிறப்பு விருந்தினராக அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் அதிகாரி நீற்றாவும் கலந்து கொண்டனர். (ஒ-16)

# டெங்கு மீண்டும் தலைதூக்கும் அபாயம்; மக்களை எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு,மே15

எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதிக்குள் நாட்டில் டெங்கு நோய் மீண்டும் தீவிரமாகப் பரவக்கூடும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் நாடளாவிய ரீதியில் பரவிய டெங்கு நோய்த் தாக்கத்தினால் 13 ஆயிரத்து 500 பேருக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். 76 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டெங்குநோயைக் கட்டுப்படுத்துவது சிரமமான செயற்பாடு. ஆகையால் சுற்றுச் சூழலைத் துப்புரவாகப் பேணுவதன் மூலம் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்த முடியும். எனவே இந்நோயைக் கட்டுப்படுத்த பொதமக்கள் ஒத்தழைப்பு வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர் கேட்டுள்ளார். (ஒ-6)

## தவறுதலான வெடி விபத்தில் பணியாளர் காயம்

யாழ்ப்பாணம், மே 15

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை "ஹலோ ட்ரஸ்ட்" பணியாளர் ஒருவர் தவறுதலாக மிதிவெடி வெடித்ததில் இரு கைகளிலும் படுகாயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவிலில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்த எஸ்.ஏ.ஐங்கரன் (வயது 29) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஒ-16-78)

### ஸ்கந்தபுரத்தில் இருந்து வந்தவேளை விபத்தில் சிக்கி

# 'ஹலோ ட்ரஸ்ட்' பெண் பணியாளர் 6 பேர் காயமுற்று ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மே 15

மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவிட்டு ஸ்கந்தபுரத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பணியாளர்களை ஏற்றிவந்த, 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தின் 'லாண்ட் றோவர்' வாகனம் தடம்புரண்டதில் பெண் பணியாளர்கள் அறுவர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

'ஹலோ ட்ரஸ்ட்' பணியாளர்களுடன் வந்துகொண்டிருந்தவேளை திடீரென மூன்று சிறுவர்கள் வீதியின் குறுக்கே கடக்க முற்பட்டுள்ளனர். அவ்வேளை சாரதி வாகனத்தை திருப்ப முயன்ற சமயம் அது பள்ளத்தில் வீழ்ந்து தடம்புரண்டது. அப்போதே பணியாளர்கள் அறுவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களின் பெயர், விவரம் வருமாறு-

எஸ்.கிருஸ்ணவேணி(வயது27)- திருநகர், கிளிநொச்சி, எம்.மனோரஞ்சினி(வயது27)- ஐ.டி.பி.முகாம், கே. கௌரி(வயது 24)- விவேகானந்த நகர், எம்.தீபலோஜினி(வயது 26) - ஜெயந்திநகர், கே.கிருஸ்ணவேணி (வயது28) - பெரியபரந்தன், எல். லக்சிகா(வயது18)- திருநகர் (ஒ-16)

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் கணனி வலையமைப்புக்குள்

யாழ்ப்பாணம்,மே 15

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் முழுமையாக கணனி வலையமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோகத்தைத் துரிதப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பெற்றொலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கூட்டுத்தானத்தின் செயற்பாடுகள் கணனி வலையமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதையடுத்து கொள்வனவாளர்கள் எரிபொருள்களுக்குரிய காசுக் கட்டளைகளை இரண்டு வேலை நாள்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணனி வலையமைப்பு நாடு முழுவதும் மிகச்சிறப்பாக இயங்கி வருவதாகவும் எரிபொருள்களைச் சிரமம் இன்றி அனைத்து இடங்களுக்கும் விநியோகிக்க முடிவதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (50-224)

## ஊழியர் சேமலாப நிதிக்கு விண்ணப்பித்தோருக்கு மத்திய வங்கி நடமாடும் சேவையின் மூலம் தீர்வு

யாழ்ப்பாணம்,மே15

ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு கடந்த மார்ச் மாதத்துக்கு முன்னர் விண்ணப்பித்து இதுவரை அந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில் இலங்கை மத்திய வங்கி நடத்தும் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு அதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள் ளது.

தமது ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கடந்த மார்ச் மாதத்துக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களில் இதுவரை அந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள், இந்த நடமாடும் சேவையில் கலந்துகொள்வதன் மூலம் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், ஊழியர் சேமலாப நிதி தொடர்பான ஏனைய பிரச்சினைகளுக்கும் இந்த நடமாடும் சேவையில் தீர்வு காண முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

## சைக்கிள் தரிப்புக்கான கட்டணம் 4 ரூபா

யாழ்ப்பாணம், மே 15

திருநெல்வேலி பொதுச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் அறவிடப்படும் கட்டணம் நான்கு ரூபாவாக சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக்கட்டண நிர்ணயத்தை மீறி மேலதிகமாக அறவிட முயற்சிக்கும் பட்சத்தில் 021 2222700,0213002508 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு பொதுமக்கள் உடனடியாக அறியத் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ)

## ஆனையிறவு உப்பளத்தை மீளச் செயற்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே15

கடந்த பல வருட காலமாக செயற்பாடற்ற நிலையில் இருக்கும் ஆனையிறவு உப்பளத்தை வெகுவிரைவில் மீளச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் மேற்படி உப்பளத்தை மீளச் செயற்படுவதில் உள்ள [illegible] மற்றும் மீளச் செயற்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்கென உயர்மட்டக் குழுவொன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைக்கவுள்ளதாக அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆனையிறவு உப்பளம் மீளச் செயற்படுத்தப்படுவதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நன்மையடைவர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 2 | 16.05.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : திருதியை |
| | பி.இ. 03.52 வரை |
| நட்சத்திரம் | : மிருகசீரிடம் |
| | பி.இ. 01.39 வரை |
| சுபநேரம் | : 08.53 - 10.23 |
| ராகுகாலம் | : 04.23 - 05.53 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு
அறிவித்தல்

**பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்**

1. கலைமாணி
2. வணிகமாணி
3. இசைமாணி
4. நடனமாணி

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக, பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் 30.05.2010 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் 14.05.2007 ஆம் ஆண்டு திகதிக்குப் பின்பும் 02.06.2009 ஆம் திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதால், தகுதி யுடையவர்கள் இம்மாதம் 21.05.2010 திகதிக்கு முன்னர் தங்கள் வேண்டுகோள்களை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வேண்டுகோள் படிவங்களை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் 17.05.2010 (திங்கட்கிழமை) தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
14.05.2010

(சி-567655)



**மாபெரும் இலவச அறிவூட்டல் கருத்தரங்கு**

**European College of Higher Studies**

Management, Law, Nursing, Q.S, Computer Studies, I.T போன்ற துறைகளில் G.C.E. O/L,A/L பட்டதாரிகள் என சகலரும் கல்வி பயின்று ஐரோப்பிய நாடுகளில், (U.K, Canada, Cyprus, Australia, Germany, France) பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் கல்வி பயில அரியவாய்ப்பு... விரும்பிய மாணவர்கள் இலங்கையில் முதல்வருடப் படிப்பை முடித்துக்கொண்டு 2ஆம், 3ஆம் வருடங்களில் வெளிநாடு செல்லலாம்.

* இன்று சனிக்கிழமை 9 am -01pm (பருத்தித்துறை சிவன் கோயில் கல்யாண மண்டபம்)
* இன்று சனிக்கிழமை 02 pm -05pm (சாவகச்சேரி கலாசார மண்டபம்)
* நாளை ஞாயிற்றுக்கிழமை 10 am -04pm (யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

தொடர்புகளுக்கு:

**European College of Higher Studies,**
**315, 1/2, Palaly Road,** (Paramaeswara Junction)
**Thirunelvely, Jaffna.**

Kokulan 0789118733
VINSAN: 0789130859
PRASANTH: 0772478303
Gaffoor: 0717065527
Office: 021 3734747


## கண்ணீர் அஞ்சலி

*யாழ்ப்பாண அரசாங்க அதிபர்*
*உயர்திரு. கணேஸ் ஐயா அவர்களின் அருமை மைத்துனர்*

**அமரர் அம்பலவாணர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்,
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(சி-567666)

## மரண அறிவித்தல்

### *திருமதி றோசம்மா மரியராசரத்தினம்*



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மா மரியராசரத்தினம் 08.05.2010 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வஸ்தியாம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஞானப்பிரகாசம் - சிவகுரு தம்பதியரின் மருமகளும் கொழும்பில் வசிப்பவர்களான ராஜி, குலன் மற்றும் கனடாவில் வசிப்பவர்களான நவம், ரஜனி, தவம் மற்றும் அருட்தந்தை ஞானேந்திரன் (பங்குத் தந்தை, புனித கயித்தார் ஆலயம், மாரீசன் கூடல், இளவாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் மரியதாஸ் (கொழும்பு), வனிதா (கொழும்பு), கனடாவில் வசிப்பவர்களான ரஜி, விக்கி, வாணி ஆகியோரின் மாமியும் றாஜன், றொனால்ட், றொசாணி, கெல்சி, ரியான்சி, நற்றாசா, நிசான் மற்றும் நேசன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் டெல்வினின் (கனடா) பாசமிகு பூட்டியும் காலஞ்சென்றவர்களான நீக் கிலாப்பிள்ளை - பொன்னுத்துரை, மருசலீன், பிரான்சிஸ்கா மற்றும் கனடாவில் வசிப்பவர்களான சீமாம்பிள்ளை , சூசைப்பிள்ளை, செல்வராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று(15.05.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.E. மரியதாஸ்
(மருமகன்)
கொழும்பு.

தொ.பே.: 0112638391,
0777624316

(சி-567670)

## விழிப்புலனற்றோரின் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் விழிப்புலனற் றோர் சங்கங்களுக்கு இடையிலான கிரிக் கெட் போட்டியை இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் விழிப்புலனற்றோர் சங்க விளையாட்டுக்கழகமும் மட்டக்களப்பு பிரிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் அ.பஞ்சலிங்கமும் றோட்டறிக் கழகத் தலைவர் திருமதி நீலா தர்மகுலசிங்கமும் கலந்துகொள்வர். (ஒ-1)

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம், மே 15

சைக்கிளில் சென்ற நபரை மோதிக் காயப்படுத்திவிட்டு அவரது சைக்கிளையும் எடுத்துச் சென்றார்களாம் வாகனத்தில் வந்தவர்கள்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கச்சாயில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் மயங்கிக் கிடந்த இந்த நபரை அவ்வழியே வந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர் என்றும் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கச்சாய் தெற்கைச் சேர்ந்த சி. சற்குணராசா (வயது 37) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஒ-207)

## கலாபூசண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 15

இலங்கை, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் கலாபூசண விருதுக்கான (2010) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை ஆகிய துறைகள் சார்ந்த தகுதி வாய்ந்த கலைஞர்களை இவ்விருதுக்கு விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிவு நாள் எதிர்வரும் 25ஆம் திகதி ஆகும்.

(ஒ)


**நவாலியில் தொலைந்து விட்டது**

நவாலி தெற்கு - களையோடை கண்ணகை அம்மன் வீதியைச் சேர்ந்த கணேசு மயூரபாலன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (NIC 803614385V) சாரதி அடையாள அட்டை (DLA 008097495) ஆகியன நவாலிக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் தொலைந்து விட்டன.

கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.சன்மானம் வழங்கப்படும்.

சரவணன்,
கட்டடப்பொருள் விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டைச் சந்தி,
தொ.பே.: 0771907484

**தொடர்புகொள்ளவும்**

வல்வெட்டித்துறைக்கு பணிப்பெண் வேலைக்கு வருவதாகத் தொடர்புகொண்ட கிளிநொச்சி மஞ்சுளாதேவி என்பவர் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 0771996912, 0212264391

**வாடகைக்கு**

76, இலந்தைக்குளம் வீதி, மாம்பழம் சந்தி அருகில் அரியாலையில் வாகனத் தரிப்பிடமும், களஞ்சியப்படுத்தக் கூடிய வசதியும், சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக் குண்டு.

தொடர்பு: 0774658636

**விற்பனைக்கு**

அச்சுவேலி தெற்கு காளிகோயில் முன்பாக பயன்தரு மரங்களுடனும் வீட்டுடனும் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773565345

**வீடு வாடகைக்குத் தேவை**

நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ். நகருக்கும் அண்மித்ததாக வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0770279582



**ஓர் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்**

நீங்கள் வீணாக்கும் ஒவ்வொரு
வினாடியையும்வியத் தகு முறையில் பணமாக
மாற்றிக்கொள்ள முயற்சியுடையோர்
விரைந்து வாரீர்! வயது ஒரு தடையல்ல.

இடம்:
யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க
கேட்போர் கூடம், யாழ்ப்பாணம்.
இன்று (15.05.2010) சனிக்கிழமை
முற்பகல் 10 மணிக்கு நடைபெறுகிறது.
இவ் விளம்பரம் கொண்டு வரும் முதற்பதிவு
செய்யும் 50 பேருக்கு விசேட சலுகை
வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு

ரவி
Tel: 0716821558

oriflame
natural swedish cosmetics

(சி-567663)


## மரண அறிவித்தல்கள்

### *வேலுப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை*



அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை 12.05.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் கணவரும் அப்பாத்துரை(லண்டன்), நாகரத்தினம் (லண்டன்), ஜெயராசா (லண்டன்), தர்மசௌந்தலாதேவி (லண்டன்), ராசமோகன் (லண்டன்), ராசேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.05.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

616, கண்டி வீதி,
அரியாலை.
தொ.பே.:
00442089301639

தகவல்:
கி.இந்திரா
(பேரமகள்).

(98280)

### *குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்*

(ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம் நேற்று(14.05.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - அம்மாக்கண்ணு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயராணியின் அன்புக் கணவரும் ராகுலனின் (ஆய்வு கூட உதவியாளர், யாழ்.பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும் கனகசபை (மலேசியா), இராஜமணி, விசுவலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம், மாலினி, காலஞ்சென்றவர்களான அழகரெட்ணம், மீனலோசனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-567651)

### *குமாரசாமி பிளோமினா*



கொழும்பைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், மூத்ததம்பி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பிளோமினா நேற்று (14.05.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் தேவன் பெனடிக் (வவுனியா), தேவமனோன்மணி (மானிப்பாய்), மகாதேவன் (மானிப்பாய்), மனோகரன் (கொழும்பு), ராஜேந்திரன் (சுவிஸ்), தேவகுமார் (அவுஸ்திரேலியா), மைக்கல் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் சண்முகநாதன் ஜெனிற்ரா, பிறேமலதா, புஸ்பாவதி, சசி ஆகியோரின் அன்பு மாமியும் ஜீவராணி, சுஜீவன், சஞ்சிவன் ஆகியோரின் அம்மம்மாவும் ஜென்சி, ஆசன், டினாசன், அன் றந்சன், டிலான்சி, யோய்சன், யுவன், யுவேஸ் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் மகேந்திரகுமார் (பிரான்ஸ்), சரண்ஜா (பிரான்ஸ்), அபிஷாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று(15.05.2010) சனிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைக் கோட்டை கத்தோலிக்க சேமக்காலைக்கு (காக்கைதீவு) நல் லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்த தம்பி லேன்,
மானிப்பாய்.

தகவல்:
எஸ். சண்முகநாதன்
(மருமகன்).

(98284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதஉரிமைப் பாதுகாவலர் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று யாழ்.பட்டப்படிப்புகள் கல்லூரியில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதற்படத்திலும்- மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி வசந்தராஜ், அகதிகளுக்கான ஐ.நா.தூரகத்தின் தலைமை அதிகாரி நீற்றா ஆகியோர் உரையாற்றுவதை முறையே இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த மாணவி ஒருவருக்கு நீற்றா சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் இறுதி இருபடங்களிலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

# புனிதமான இடத்தில் நட்சத்திர ஹோட்டல் அமைவது ஆலய வழிபாட்டு ஆசார முறைகள் சீரழிய வாய்ப்பளிக்கும்

## மாநகர முதல்வருக்கு இந்து அமைப்புக்களின் ஒன்றியம் கடிதம்

யாழ்ப்பாணம்,மே15

புனிதமான இடத்தில் ஒரு நட்சத்திரக் ஹோட்டல் அமைந்தால் ஆலய வழிபாட்டு ஆசார முறைகள் மேலும் சீரழிய வாய்ப்புக்கள் உண்டு.

எனவே நல்லூரைத் தவிர்ந்த வேறு ஏதாவது குடிசனப் பரம்பல் குறைந்த இடத்தில் இந்தக் ஹோட்டலை அமைப்பதே பொருத்தமானதாக இருக்கும் என இந்து அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் யாழ்.மாநகர முதல்வருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

நல்லூர் முத்திரைச் சந்தைக்கு அண்மித்ததாக பருத்தித்துறை வீதியில் 80 அறைகள் கொண்ட ஒரு 3 நட்சத்திர ஹோட்டல் அமைக்கப்படவுள்ள திட்டத்திற்கு, எமது கருத்துக்களையும் முன்வைக்க விரும்புகிறோம்.

இந்த ஹோட்டல் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் ஆட்சி பீடம் மற்றும் அரண்மனைகள் அமைந்திருந்த மையப் பகுதி என்பதுடன், யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் கடைசி மன்னனின் பெயர் கொண்ட சங்கிலியன்தோப்பு என அழைக் கப்படுவதாகும். இது ஏற்கனவே தொல்பொருள் ஆய்வுக்காக பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலைச் சுற்றியுள்ள பிரதேசம், யாழ்ப்பாண வரலாற்றுடன் ஆழமாக தொடர்புடைய ஒன்று என்பதுடன், அது சைவத்தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு மேன்மைகளின் பாதுகாப்புமையக் குடியிருப்பாக இருந்து வருகிறது.

இப்படியான ஓர் இடத்தில் ஒரு ஹோட்டல் அமைந்தால் ஆலய வழிபாட்டு ஆசார முறைகள் மேலும் சீரழிய வாய்ப்புக்கள் உண்டு.

இப்பொழுதே முறைப்படி ஸ்நானம் செய்யாதவர்களும், மச்சமாமிசம் உட்கொண்டவர்களும் தங்குதடையின்றி ஆலயத்துக்குள் சென்றுவருதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தநிலை மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியங்கள் இந்த உல்லாச விடுதி அமைவின் மூலம் ஏற்படும்.

எனவே இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதை தவிர்க்குமாறு மாநகரசபையையும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்கள தலைவர்களையும் வேண்டிக் கொள்கிறோம்- என்றுள்ளது. (50)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில், தற்செயல் நிவாரணங்கள்

நவாலி,மே 15

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் நிவாரணம், தற்செயல் நிவாரணம் என்பவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த பின்வருவோரின் கொடுப்பனவுக்கான காசோலைகள் சமூக சேவைத் திணைக்களத்தினால் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களை உடன்வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தகர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

சுயதொழில் நிவாரணம்

த.மகேஸ்வரி (பண்டத்தரிப்பு), அ.திருவிளங்கம் (சுதுமலை தெற்கு), சி.மனோரஞ்சிதம் (பண்டத்தரிப்பு),அ. தர்மிளா (மானிப்பாய்), கருணா தேவி(சில்லாலை), அ.அருள்மணி (உயரப்புலம்), சி.கைலகுமாரி (மானிப்பாய்), இ.சசிகலா (சுதுமலை வடக்கு), எம்.ரஜீதா (மானிப்பாய்).

தற்செயல் நிவாரணம்

மா.ஆனந்தராசா (மானிப்பாய்), அ.சுசிலாதேவி (நவாலி வடக்கு), ம.வசந்தகுமாரி (சண்டிலிப்பாய்), சி.இலங்கேஸ்வரன் (காக்கைதீவு). (50-100)

# கடற்கரை வீதிப் பாலங்களின் புனரமைப்பு நிறைவடையும் நிலை

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.கடற்கரை வீதியில் உள்ள பாலங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

இந்தப் பாலங்களின் புனரமைப்புப் பணிகள் காரணமாகக் கடற்கரை வீதியூடான வாகனப் போக்குவரத்து மாற்றுப்பாதையூடாக இடம்பெற்று வருகின்றது.

புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளமையால் இவ்வீதியூடான போக்குவரத்துக்கள் விரைவில் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# புதிதாக ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டோருக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை

யாழ்ப்பாணம்,மே15

வடக்கு மாகாண திணைக்களங்களில் கடந்த 2005ஆம் ஆண்டு பட்டதாரி வேலைத் திட்டத்தின்கீழ் ஆள்சேர்ப்பு செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மனிதவளம், நிதி, தொழில்நுட்பம், விவசாயம், கால்நடை அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், பொது அபிவிருத்தி நிலப் பயன்பாடு, உள்ளூராட்சித் திணைக்களம், மக்கள் தொடர்பாடல், சட்டம், உளவியல், சூழல், கல்வி, புள்ளிவிவரம், மொழிபெயர்ப்பு, கடற்றொழில், சுகாதாரமும் சத்துணவும், மகளிர் சிறுவர், சுதேச மருத்துவம் ஆகிய பதவிகளுக்கு நியமனஞ் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கே பரீட்சை நடத்தப்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (50-207)

# வடமாகாணத்தில் உள்ள தபாலகங்களை புனரமைப்புச் செய்வதற்கு 36 மில்லியன் ரூபா

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே 15

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வடமாகாணத்தில் உள்ள தபாலகங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு 36 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு இத்தகவலைத் தெரிவித்தார்.

பிரதி அஞ்சல் மா அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணத்தில் சேதமடைந்த, அனைத்து தபாலகங்களையும் விரைவில் மீளக் கட்டியெழுப்புவதற்கான ஏற்பாடுகள் மேகொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தில் இருந்து 36 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்டப்பட்டு அரைகுறையில் இருக்கும் தபாலகக் கட்டடங்களும் இந்த நிதி மூலம் முழுமையாகக் கட்டி முடிக்கப்படவுள்ளன.

அதனை விட வன்னியில் போரினால் சேதமடைந்தும், முழுமையாக அழிவடைந்தும் உள்ள தபாலகக் கட்டடங்களும் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன- என்றார். (50-244)

# பொலிஸாரின் கடிதத்தைப் பெறுவதில் சிரமம்; நஷ்டஈட்டுக்கு விண்ணப்பிக்க முடியாதநிலை

## வன்னிப் பகுதி வர்த்தகர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 15

வன்னிப் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு நஷ்டஈடுகோரி விண்ணப்பிப்பவர்கள் பொலிஸாரின் உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் தமது நிறுவனம் போரின்போது பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது என்பதை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவேண்டும். அந்த முறைப்பாட்டைப் பதிவுசெய்ததன் பின்னர் அது தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்றைப் பொலிஸார் கடை உரிமையாளர்களுக்கு வழங்குவார்கள்.

இந்த உறுதிப்படுத்தல் கடிதம் பொலிஸாரிடம் இருந்து கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப்பங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாகப் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாமதத்தையடுத்துப் பாதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி இம்மாத இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வணிக, கைத்தொழில், வேளாண் ஒன்றியத்தின் தகவல் முகாமையாளர் கே.கோகுலன் அறிவித்துள்ளார். (50-224)

# குடி தண்ணீரும் மின்சாரமும் இன்றி அவஸ்தைப்படும் செட்டிபுலம் மக்கள்

வேலணை,மே 15

வேலணை, செட்டிபுலம் மக்கள் குடிதண்ணீர், மின்சாரம் என்பன இல்லாமையால் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவந்துள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த செட்டிபுலம் மக்கள் சாட்டியிலிருந்து குடிதண்ணீரைப் பெறுவதற்காக தினமும் கால்நடையாக இரண்டு கிலோ மீற்றர் தூரம் அலைய வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர். அத்துடன், இவர்களுக்கு இதுவரை மின்சாரமும் வழங்கப்படவில்லை. இதனால் குப்பி விளக்கின் வெளிச்சத்திலேயே இவர்கள் இரவைக் கழிக்கின்றனர்.

எனவே வேலணையின் ஏனைய பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதைப் போன்று தமக்கும் வழங்குமாறும், ஏனைய பகுதிகளைப் போன்று மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர், அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னைத் தானே வெட்டி காயப்படுத்திய சிறைக்கைதி

யாழ்ப்பாணம், மே 15

சிறைச்சாலைக் கைதியொருவர் தன்னைத்தானே வெட்டிக் காயப்படுத்திய நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் யாழ்.சிறைச்சாலை யைச் சேர்ந்த கைதியான எம்.இலங்கேஸ்வரன் (வயது-38) என்பவரே படுகாயம டைந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (50-16)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் கூட்டுறவுத்துறையின் சேவைகளை வழி நடத்திய கூட்டுறவு அபி. உதவி ஆணையாளராக சேவையாற்றி பதவி உயர்வு பெற்று தலைமை அலுவலகத்திற்கு மாற்றலாகிச் செல்லும்

**திரு.பொ.சிவலிங்கம்**

அவர்களின் பதவி உயர்வைப் பாராட்டுவதுடன், எமது யாழ்.மாவட்ட கூட்டுறவு அபி. உதவி ஆணையாளராகப் பதவிப் பொறுப்புக்களை ஏற்றுள்ள

**திரு.வி.கே.அருந்தவநாதன்**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.



## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் 7000+உணவு.
தொடர்புகளுக்கு:
0212264591



## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு 3 ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் 3 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770711512
0776081693, 0777419161



## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள P-4 Computers, Monitor மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவா தத்துடன் உடன் விற்பனைக்குண்டு.
(விலை 14750/= மட்டுமே)
தொடர்பு: Sky Computers System
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417



## தவறிவிட்டது

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை என்னும் முகவரியை சேர்ந்த சுந்தரலிங்கம் ரஞ்சன் என்பவரின் தேசிய அ.அட்டையும் [871971765V] மற்றும் மத்திய வீதி, பாரதிபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த சூரியகலா - ரஞ்சன் [826394730V] என்பவருடைய தேசிய அ.அட்டையும் மற்றும் இராணுவத் தேசிய அ.அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அல்லது தொலை பேசியின் மூலம் தொடர்புகொள்ளவும்.
சுந்தரலிங்கம் ரஞ்சன், ஏழாலை மத்தி, ஏழாலை, சுன்னாகம். T.P.0776691523, 0772051371



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 647 திகதி 13-05-2010

வெற்றி எண்கள்

07 10 30 58 O (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 19,234,960/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 19,234,960/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 336 | 1,000/= | 336,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 538 | 1,000/= | 538,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14195 | 60/= | 851,700/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6734 | 40/= | 269,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 168376 | 20/= | 3,367,520/= |
| | | மொத்தம் ரூ. | 6.194.580/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்
S. சிறிவர்தன பிரசாத் - ஊருபொக்க.
M.H. அப்துல் ஜலீல் - பொத்துவில்.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 700023698-3-46 |
| யாழ்ப்பாணம் | 700027628-3-26 |
| புத்தளம் | 700030808-3-42 |
| களுத்துறை | 700022836-3-40 |
| திருகோணமலை | 700023043-3-27 |
| கண்டி | 700020699-3-34 |
| நுவரேலியா | 700035546-3-27 |
| மட்டக்களப்பு | 700028979-3-00 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,594,580/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 19,691,230/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மே 17 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## வளமுடன் வாழ்க

திருமண வெள்ளி விழா (25 ஆம் ஆண்டு)



யேசுதாசன் - ஜெஸிலின் பத்மராணி
தம்பதிகள்

15.05.1985 - 15.05.2010

நறுமணம் கமழ் இல்லறப் பூங்காவில்
இருகரம் இணைந்த வெள்ளிவிழா நாளில்
அருமை சேர் அன்பு தம்பதிகாள் நீரும்
வருங்காலம் வளமுற்று இனிதே வாழ
பெருமகன் இயேசுவின் நிறைவரம் வேண்டி
ஒரு மனதாய் வழங்கும் பல கோடி வாழ்த்துக்கள்

125/2, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
கூட்டுறவுசார் நண்பர்கள்.


## வட்டுக்கோட்டையில் மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,மே 15

வட்டுக்கோட்டை ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி ஸ்ரீ காலபைரவர் ஆலய அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 7.45 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி, ஸ்ரீ காலபைரவர் விக்கிரங்கள்பிரதிஷ்டைசெய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

ஆலய மஹா கும்பாபிஷேகம் சென்னை, சோழியங்க நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி ஆலயத்தின் ஸ்தாபகத் தலைவர் சாக்த ஸ்ரீப்ரத்யங்கிரா ஸ்வாமிகள் தலைமையில்வைதீக கிரக பக்தியுடன் நடைபெறும். (ஒ-10)

## வர்த்தக நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், மே15

மண்டைதீவில் உள்ளவர்த்தகநிலையம் ஒன்றில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள், பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இந்தச் திருட்டுச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மண்டைதீவு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்தின் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்கள் மற்றும் பணம் போன்றவற்றை களவாடிச் சென்றுள்ளனர். (50-224)


## பாராட்டி வாழ்த்துவதில் மனமகிழ்ச்சி அடைகின்றோம்

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சராக மக்களின் அன்றாட பிரச்சினை முதல் தொட்டு, மக்களின் தேவைகளை நேரடியாக கேட்டறிந்து சேவையாற்றி 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி மீண்டும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்ற



பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர்

**உயர்திரு.முருகேசு சந்திரகுமார்**

அவர்களையும்



நாடாளுமன்ற உறுப்பினர்

**உயர்திரு.சில்வேஸ்திரி அலன்டின்பூட்**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் மனமகிழ்ச்சி அடைவதோடு மேலும் இவர்களின் மக்கள் நலன்சார்ந்த பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவன் ஆசிபுரிய வேண்டுகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(அ/567650)



## 25 ஆம் வருட நினைவில் எங்களின் அப்பா



**அமரர் நாகமணி பாலசுப்பிரமணியம்**

எங்களால் மறக்கமுடியாத மே 15

| கடவுள் படைப்பு | எதிரிகளின் அழிப்பு |
|---|---|
| 19★12★1931 | 15★05★1985 |

அவனியில் நீங்கள் அவதரித்த நாள்முதலே
பெற்றவர்கள் பெயர் பேணி
மற்றவர்க்காய் வாழ்ந்தீர்கள். ஆலமரம்போல
அகலவிரிந்த குடும்பத்தின்
நடுமரமாய் சுமைதாங்கி அரை நூற்றாண்டு
கடந்தபின்னர்
கடமையிலிருந்து நீங்கள் இளைப்பாற
நினைத்தபோது
உங்களை காவு கொண்டனரோ?
ஓ..... காலன் கண்வைத்து கால்நூற்றாண்டானதுவோ?
இல்லையில்லை... எல்லா நிகழ்வுகளும் எங்கள்
கண்முன்னால் சற்று முன்னர்
நடந்ததுபோல் ஈர நினைவுகளாய் இதயம்
கனக்கிறதே
உங்களின் ஆத்மா எங்களுடன் என்றும் நிஜமாய்
வாழும்

அன்னை இல்லம்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

நினைவுடன்:
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

16.05.2010 16.05.2010

## தங்கம் வாங்கப் பொருத்தமான நாள் சித்திரை மாதத்து அக்ஷயத் திருதியை என்பது இந்து மதத்தவரின் அசையாத நம்பிக்கை



அக்ஷயம் என்றால், வளருதல் என்று பொருள் சித்திரை மாதம், வளர்பிறையில் வரும் திருதியை நாள் அக்ஷய திருதியை. இந்த நாளில் எந்தப் பொருள் வாங்கினாலும் சிறப்புதான். அன்று, தான தர்மம், புதுக்கணக்கு ஆரம்பம், வித்தியாரம்பம், விரதம், தெய்வ வழிபாடு ஆகியவற்றை மேற்கொள்வது உத்தமம். இப்படிப்பட்ட அக்ஷய திருதியைப் பற்றி புராணக்கதைகள் பல உண்டு.

ஏழ்மையில் வாடிய ஸ்ரீ கிருஷ்ணரின் நண்பர் குசேலர், ஒரு படி அவலை எடுத்துத் தனது கிழிந்த மேலாடையில் முடிந்து கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரை சந்திக்கச் சென்றார். குசேலரை வரவேற்று உபசரித்த கண்ணன், அந்த அவலை எடுத்துச் சாப்பிட்டபடி, "அக்ஷயம்" என்றார். உடனே, குசேலரின் குடிசை, மாளிகை ஆனது; குசேலர் குபேர சம்பத்து பெற்றார். குசேலருக்கு, கண்ணன் அருள் புரிந்தது அக்ஷயத் திருதியை திருநாள் ஆகும்.

சாகல் என்ற நகரில் தர்மம் என்ற ஏழை வணிகன் ஒருவன் இருந்தான். தெய்வ பக்தி மிகுந்தவன். அவன், வருடம் தோறும் அக்ஷய திருதியையின் போது புனித நதியில் நீராடி, இயன்றளவு தான தர்மங்கள் செய்தான். இதனால் மறுபிறவியில் அரசனாகப் பிறந்தான். ஒவ்வொரு அக்ஷயத் திருதியைத் திருநாளிலும் தான தர்மங்கள், யாகம் ஆகியவற்றைச் செய்து மேன்மேலும் சிறப்பு பெற்றான் என்பது கர்ண பரம்பரையான தொரு கதை. உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள், அக்ஷய திருதியை அன்று புனித நதியில் நீராடி, தான தர்மங்கள் செய்தால் உடல் பிணிகள் நீங்கும் என்பது நம்பிக்கை.

இந்த நன்னாளில் சிவபார்வதி, ஸ்ரீமன் நாராயணன், ஸ்ரீலட்சுமி ஆகியோரை பூஜித்தால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். அன்று பக்தர்களுக்கும், மறைந்த முன்னோருக்கும் சிரார்த்தம், பூஜை செய்தால் பாவ விமோசனம் பெறலாம்.

ஸ்ரீ பரசுராமர் அவதரித்ததும், கிருத யுகம் தோன்றியதும் இந்த அக்ஷய திருதியை திருநாளில்தான். அக்ஷய திருதியை அன்று ஏழைக்கு ஆடை, தானம் அளித்தால் மறுபிறவியில் ராஜ வாழ்வு கிட்டும், என்பது நம்பிக்கை.

தயிர்சாதம் தானம் செய்தால், ஆயுள் பெருகும். இனிப்புப் பொருள்கள் தானம்

கொள்வனவு செய்வதால் தமது வாழ்வும் வளமும் சிறக்கும் என நம்புவதில் தவறேதும் காண இயலாதல்லவா?

தீபாவளி பண்டிகையின் சிறப்பு அம்சங்களில் ஒன்று புத்தாடை அணிதலாகும். இந்து மதத்தவர் மத்தியில் ஆண்டாண்டு காலமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வரும் வழக்கங்களில் இதுவுமொன்று. அதே யோன்று சித்திரை மாதத்து அக்ஷய திருதியை நாளன்று தங்கம் வாங்குவது, அது சிறியதோ பெரியதோ ஏதாவதொரு தங்கநகை வாங்குவது அந்த ஆண்டு முழுவதும் தமது குடும்பத்துக்கு தன லாபத்தையும், மகிழ்ச்சியான வாழ்க்கையையும் தரும் என்பதும் இந்து மதத்தவர்களது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

அந்த வகையில் நமது

( 18 ஆம் பக்கம் பார்க்க)

யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்





எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று ராசியான அக்ஷயதிருதியையை முன்னிட்டு விஷேட கழிவுகளுடன் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

மு.குறிப்பு: தங்க நகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.
தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயம் பரிசில்களாக வழங்கப்படும்.

தொ.பே: 0213212399

அக்ஷய திருதியை தங்கத் திருநாள்



அக்ஷய திருதியை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16.05.2010) அன்று எமது நிறுவனத்தில் சிறப்பு விலைக்கழிவுடன் நகைகளைப் பெற்றிடுங்கள்.

அக்ஷய திருதியை அன்று பவுண் கொள்வனவு செய்பவர்களிற்கு சிறப்பு விலைக்கழிவுடன் அன்பளிப்புப் பொருள்களும் காத்திருக்கின்றன.

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

தங்கப் பவுண் நகை வியாபாரம் உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் நகைகளைப் பெற்றிடச் சிறந்த ஸ்தாபனம்.

உதயா ஜுவல்லர்ஸ்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அக்ஷய திருதியை தங்கத் திருவிழா



மே 16 தங்கம் வாங்குவதற்கு சிறந்தநாள்.
ஐஸ்வர்யம் நிறைந்த தங்கத் திருநாளில் நீங்கள் தங்க நகைகளைக் கொள்வனவுசெய்யும்போது தங்க ஐஸ்வர்யம் உங்களுடன் நிரந்தரமாக நிலைத்திருக்கும்
அனைவரும் வருக தங்க ஐஸ்வர்யம் பெறுக

மைதிலி நகைமாடம்

Yarl Maithily Jewellers

Ymj தங்க நகை வியாபாரி யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்

89 V, Kasthuriyar Road, Jaffna. T.P:021 222 7902 Sea Street Colombo -11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

16.05.2010 16.05.2010

## விக்னேஸ்வரா நகைப்பூங்கா

அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 16 ஞாயிறு தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள் ஆகிய இத்தினத்தில் எம்மிடம் தங்கம் வாங்கும் உங்களுக்காக விசேட விலைக் கழிவுகளும் பரிசுப்பொருள்களும் வழங்கப்படும். அக்ஷய தினத்தன்று

விக்னேஸ்வரா நகைப்பூங்கா 01. 205/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
02. 34 D கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.
காலை 8 மணி தொடக்கம் மாலை 6மணி வரை திறந்திருக்கும்

வெளிநாடுகளிலுள்ள உங்கள் உறவுகளுக்கு பொருள்களை
அனுப்ப நம்பிக்கையான ஒரே இடம்
விக்னேஸ்வரா நகைப்பூங்கா

## அக்ஷய திருதியை தங்கத் திருநாள்



மே 16 தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள்
ஐஸ்வர்யம் நிறைந்த தங்கத்திருநாளில் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும்போது தங்க ஐஸ்வர்யம் உங்களுடன் நிரந்தரமாக நிறைந்திருக்கும்.
இத்தினத்தில் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

### சிறீ மீனாட்சி தங்க மாளிகை

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 6109

## அக்ஷய திருதியை தங்கத்திருநாள்

சங்கானை நகரில்...

### புதிய வினோ நகை மாடம்

அக்ஷய திருதியை தங்கத் திருநாளினை முன்னிட்டு எம்மிடம் ஒரு பவுண் பெறுமதியான தங்க நகைகளை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பெறுமதி மிக்க தங்க நாணயம் அன்பளிப்பாக வழங்கப்படுவதுடன் அனைத்து வாடிக்கையாளருக்கும் விலைக்கழிவு வழங்கப்படும்.

புதிய வினோ நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை.

இணை நிறுவனம்:
வீமாலைபல் பிளாஷா
பிரதான வீதி, சங்கானை.



ஐஸ்வர்யம் உங்கள் இல்லத்தில் நிலைத்திட
அட்ஷய திருதியையான நாளைய தினம் (ஞாயிறு 16.05 2010)
தங்க நகைகளை வாங்கிச் சென்று
மேலும் உங்கள் செல்வம் அள்ள, அள்ள குறையாத
அட்ஷய பாத்திரமாகி விடும் வகையில் தங்க நகைகளை வாங்கிச் சென்றிட
கைராசியானதும் நம்பகமானதுமான ராசியான நகைக்கடை

### சாருகா நகைமாடம்

200G , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அக்ஷய திருதியை
16.05.2010
ஞாயிற்றுக்கிழமை
அன்று தங்கப்பவுண்
வாங்குவதற்கு விசேச
தினமாகும். அன்று
எமது தாபனத்திலும்
விசேட
அன்பளிப்புக்கள்
வழங்கப்படும் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு
அன்புடன் அறியத்தருகின்றோம்.
யாழ்நகரில் தங்கநகைக்கு
தனித்துவமான தாபனம்

### அலங்கார்

நகை மாளிகை

21/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். TP:021 2222920

வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றது



## சிறி நதியா



நகை மாளிகை

## அட்சய திருதியை



**16.05.2010 ஞாயிற்றுக்கிழமை** அன்று
தங்கப்பவுண் வாங்கும் விசேட தினமாகும்.
அன்றைய தினம் தங்கநகைகள்
வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு
எமது நிறுவனங்களில் விசேடமாக
அன்பளிப்புகள் வழங்கப்படும் என்பதை
மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்
தருகின்றோம்.





அழகிற்கு அழகு செய்யும் தங்க நகைகளுக்கு
மிகச்சிறந்ததும் கைராசியானதுமான நிறுவனம்

### சிறி நதியா நகை மாளிகை

01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222709

கிளை 56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2226744


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் மீள்குடியேற்றத்தோடு புதிய இடத்தில் மீண்டும் முளை கொள்கிறது கிளிநொச்சி சந்தை

கிளிநொச்சி நகரத்தின் புறநகர்ப் பக்கமாக உள்ள அம்பாள்குளம் என்ற இடத்தில் கிளிநொச்சியின் முன்மொழியப்பட்ட சந்தை களைக்கட்டிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது மதியநேரம் நலிவடைந்த அந்தக் குரல்கள் பொருள்களை விற்பனை செய்ய கூவிக் கொண்டிருக்கின்றன. அந்த வியாபாரிகளில் அநேகம் பேரை முன்பு பழைய சந்தையில் பார்த்திருக்கிறேன். பல புதிய முகங்களும் குரல்களும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

கிளிநொச்சியின் பழைய சந்தை டிப்போச் சந்தியில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த முறிப்பு வீதியின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அப்போது களைகட்டிய சந்தைதான் எனக்கு ஞாபகங்களாக வந்து கொண்டிருக்கின்றன. கிளிநொச்சியிலும் அண்டிய பிரதேசங்களிலும் மக்கள் அண்மைக்காலமாக குடியேற்றப்பட்டு வருகிற சூழலில் அங்காங்கே மக்கள் சந்தைகளுக்குரிய கடைகளை அமைத்து சிறிய வியாபாரங்களைத் தொடக்கியிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் அனைவரும் அம்பாள்குளம் பகுதியில் ஒன்றினைக்கப்பட்டு புதிய சந்தைக்கான கட்டடங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பழைய முகங்கள் பலவற்றை பார்த்தபொழுது எனக்கு ஏமாற்றமும் வலியும்தான் மிஞ்சியது. அவர்களிடம் இப்பொழுது கடைகள் இல்லை. முதல் இல்லை. துணைகள் இல்லை. தர்சன் என்ற வியாபாரி மரக்கறிக் கடை ஒன்றை பெரியளவில் நடத்தி வந்திருந்தார். இப்பொழுது அவர் ஒரு கடையில் கூலியாக நிற்பதாகக் குறிப்பிட்டார். கூட்டாக வியாபாரத்தில் ஈடுபட்ட பல பழைய முகங்கள் கடையில் இருந்த துணைகளை இழந்து போயிருக்கிறார்கள். இங்கு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு அம்மா யுத்தத்தில் தன் கணவரை இழந்து போயிருக்கிறார்.



அவர்கள் இருவரும் பழங்களை வியாபாரம் செய்து வந்து கொண்டிருந்தார்கள். அந்த வயது முதிர்ந்த ஐய்யாவின் புன்னகையாலும் சத்தத்தாலும் அவர்களது கடை எப்பொழுதும் கலகலப்பாக இருந்திருக்கிறது. அவர்களின் பழக்கடைக்கு என்றே தனிக்கூட்டம் வந்து போய்க்கொண்டிருக்கும். நோய்வாய்ப்பட்டவர்களுக்குரிய பழங்கள் என்று பழங்கள் வாங்குவதற்கு நம்பிக்கை மிக்க கடையாக பலரது மனதை அந்தக்கடை வென்றிருந்தது. இப்பொழுது அந்த அம்மா வார்த்தைகள் உதிர்க்க முடியாத துயரத்துடன் பழங்களை கூவி விற்க முடியாத நிலையில் கொஞ்சப் பழங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த சந்தையில் பல புதிய முகங்களையும் பார்த்தேன். அவர்கள் யுத்தத்தின் முன்பு பெரும் கடைகளை நடத்தியவர்களாகவும் வயல் முதலிய விவசாயங்களை பாரிய அளவில் செய்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். இப்பொழுது மிகச் சிறியளவில் தொடங்கியிருக்கும் வியாபாரத்தை நம்பி இந்த வெறும் காணியில் அமர்ந்திருக்கிறார்கள். இந்தச் சந்தை தொடங்கி இன்றுடன் மூன்று நாள்கள் மட்டுமே ஆகின்றன. ஆனால் பல கடைகள் வேகமாக எழும்பிக் கொண்டிருக்கின்றன. பலர் பாதியாய் கட்டப்பட்ட கடைகளில் மண் திட்டுக்களில் மரங்களின் கீழாக என்று பொருள்களை விற்பனை செய்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

யுத்தத்தின் பொழுது தனது கணவரை இழந்த ஒரு இளம்பெண் சில பொருள்களை வைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு பக்கத்தில் அவரின் கடைசி மகள் இருக்கிறாள். நகரத்தின் மையத்தில் வீழ்த்தப்பட்ட தண்ணீர் தாங்கி அமைந்திருக்கும் இடத்தில்தான் தனது வியாபாரத்தைத் தொடங்கியதாக அவர் குறிப்பட்டார். தொடர்ந்து தனது வார்த்தைகளை என்னுடன் அந்தப் பெண் இப்படி பகிருகிறார்.

நாங்கள் ஆனந்தகுமாரசாமி முகாமில் இருந்து கடந்த பத்தாம் மாதமே விடுதலையாகி வந்து விட்டோம். நகரத்தின் மைய்த்தில் வீழ்த்தப்பட்ட தண்ணீர் தாங்கி அமைந்திருக்கும் இடத்தில் எங்கள் வியாபாரத்தைத் தொடங்கியபோது இராணுவம் அதை அனுமதிக்கவில்லை. பிறகு சந்தையில் ஒரு வாய்க்கால் பகுதியில்தான் கடையைத் திறந்தோம். பிறகு எங்களுக்கு ஒரு கடை தேவை என்பதால் பிரதேச சபையில் பதிவினை மேற்கொண்டு இங்கு ஒரு கடையை அமைக்க அனுமதி பெற்றிருக்கிறோம். எங்கள் சொந்த இடம் புளியம்பொக்கனை. எங்கள் இடத்தில் இன்னும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. அதனால் மிக அவசரமாகவே இந்தக் கடையைத் திறந்திருக்கிறோம். எங்களிடம் கடை கட்டும் வசதி என்று ஒன்றுமில்லை. இடம் எடுத்துக் கட்டாதவர்களுக்கு கடையில்லை என்பதால், (நகரத்தின் மையத்தில் வீழ்த்தப்பட்ட தண்ணீர் தாங்கியடியில் ) அங்கிருந்த பொருள்களைத் தூக்கிக்கொண்டு வந்து இங்கு போட்டிருக்கிறோம்

சரி கடையில் சில பொருள்கள்தானே இருக்கின்றன. இவற்றை எப்படி வாங்கினீர்கள் அல்லது இதற்கான முதல் எப்படி கிடைத்தது என்று அவரிடம் கேட்டேன். இதில் இருந்துவரும் வருமானம் போதுமானதாக இருக்கிறதா என்றும் கேட்டேன். தனக்குப் பக்கதில் உள்ள பொருள்களை கைகளால் தடவியபடி அதைக்குறித்தும் அவர் சொல்லத் தொடங்குகிறார்.

இந்தக் கடையை தொடங்கும் பொழுது 566 ரூபாவிற்கு வெற்றிலை, பாக்கு, சீவல் என்பன வாங்கி காட்போட்டு பெட்டியை கவிழ்த்து வைத்து விட்டு அதில் அடிக்கித்தான் வியாபாரத்தை தொடங்கினேன். எனக்கு கடன் கொடுத்தவரிற்கு பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து விட்டு இப்பொழுதும் அவரிடம்தான் கடன் வாங்கித்தான் விற்பனை செய்கிறேன். இதில் உள்ளவை எனது முதல் இல்லை. அவரிடம் கடன் வாங்கிய பொருள்கள்தான். அவருக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரம் ரூபாப்படி செலுத்தி வருகிறேன். இப்பொழுது வியாபாரம் குறைவாக உள்ளது. இன்று வியாபாரமே இல்லை. வருமானமாய் கிடைத்த ஐம்பது ரூபாவை வரியாகச் செலுத்திவிட்டு இருக்கிறேன்

இவரது மகனும் இந்தக் கடையில் பாடசாலை விடுமுறை நேரங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டாலும் அது சட்டத்திற்கு விரோதமானது என்பதால் மகனைக் கடையில் நிறுத்துவதில்லை என்று அவர் குறிப்பட்டார். முன்பு அந்த மகன் பொருள்களைப் பேருந்துகளில் விற்பதுடன் நடந்து பாதைகளில் விற்பனை செய்வதாகவும் அது மிகுந்த இலாபத்தைத் தருவதாகவும் சொல்லும் அவர் தன் மகன் இன்று பாடசாலை சென்றிருப்பதாகப் புன்னகைத்தபடி குறிப்படுகின்றார்.


மகன் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் படிக்கிறான். மாலை இரண்டு மணியின் பின்னர் வந்து வெற்றிலைக்கூறு, கச்சான் போன்றவற்றை கொண்டுசென்று வைத்தியசாலைகளிலும் சனங்கள் பேருந்துகளால் இறங்கும் இடங்களிலும் விற்பனை செய்வான். அவன் வீடி, சிகரட் போன்ற பொருள்களை ஒரு நாள் கொண்டு சென்றதால் அதை இராணுவம் தடை செய்துவிட்டது. அத்தோடு 18 வயதுக்குள் வியாபாரத்தில் ஈடுபட வேண்டாம் என்றும் அவர்கள் சொல்லியுள்ளார்கள். எங்களுக்கு நாளாந்தம் வியாபாரம் எதாவது செய்தால்தான் சாப்பிட முடியும் என்றநிலையில் இருக்கிறோம். இப்ப எடுக்கும் பொருள்களை இங்கு விற்றால்தான் எதாவது கிடைக்கும், மேலதிகமாக எதையும் எடுத்து விற்பனை செய்யமுடியவில்லை. அதனால் அவன் இப்பொழுது வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை.

உங்கள் பழைய வாழ்க்கையை நீங்கள் நினைவு கொள்ளுறீர்களா? இப்பொழுது எதை இழந்த மாதிரி உள்ளது. அன்றைய வாழ்வும் இன்றைய வாழ்வும் எப்படி வேறுபடுகின்றது என்று அவரைக் கேட்டேன். அது ஒரு காலம் என்று தன் மூச்செறிந்தபடி தொடர்ந்து அவர் பேசுகிறார்.

இடம்பெயர முதல் நாங்கள் வயல் விதைப்புதான் செய்து கொண்டிருந்தோம். அத்தோடு பெரிய கடை ஒன்றும் வைத்திருந்தோம். யுத்தத்தில் அவை எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். நானும் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியிருக்கிறேன். எனது கணவரை பலி கொடுத்திருக்கிறேன். நாளைய தினம் எங்கள் சொந்த இடத்திற்கு எங்களை மீள் குடியமர விடுகிறார்கள். ஆனால் இப்பொழுது இந்தநிலையில் இந்தக் கடையை விட்டுச் சென்று நான் அங்கு சென்று என்ன செய்வது? கடையை மூடிவிட்டுச் சென்றால் எனக்கு பெரிய பாதிப்பு வரும். மீள்குடியேற்றத்திற்குரிய தகரங்கள், சீமெந்துகளைத்தான் வைத்துதான் இங்கு பலர் கடைகளைக் கட்டியிருக்கிறார்கள்

நீங்கள் எங்கு இப்பொழுது தங்கியிருக்கிறீர்கள். உங்கள் சொந்த இடத்திற்கு செல்ல விருப்பம் இல்லையா? உங்களுக்கு என்று ஒரு வீடு வேண்டுமல்லவா என்று கேட்டபொழுது அவர் தந்த பதில்கள் அதிர்ச்சியளித்தன.

நாங்கள் இந்த இடத்தில்தான் இப்பொழுது தங்கியிருக்கிறோம். இரவில் நாங்கள் இந்தக் கடையில் காவலாளிகளாகக் கிடக்கிறோம். நானும் எனது இரண்டு பிள்ளைகளும் இதிலேதான்



கிடக்கிறோம். இந்தக் கடைக்காக இதில்தான் கிடக்கிறோம். இதில்தான் சமைத்துச் சாப்பிடுகிறோம். வரும் 15 நாள்களின் பின்னர் இதில் இரவில் தங்க முடியாது. அப்படி என்றால் ஒவ்வொரு நாளும் புளியம்பொக்கனையில் இருந்துதான் வரவேண்டும்

யாழ்ப்பாணத்தில் உள்ள சகோதரர்கள் கொடுத்த பணத்தை வைத்து மரக்கறிப்பொருள்களை வாங்கிவிட்டு, கடனாக உருவாக்கித் தரப்பட்ட கட்டடத்தில் வியாபாரத்தை தொடங்கியிருக்கும் இன்னொரு வியாப்பாரியுடன் பேசினேன்.

இழந்தவைகள் நிறைய உள்ளன. அவற்றைக் கணக்கிட முடியவில்லை. இந்த வியாபாரத்தை செய்ய முடியாத இழப்பைச் சந்தித்துள்ளேன். எங்களுக்கு பிரதேச சபைதான் கடைகளை அமைத்துத் தந்திருக்க வேண்டும் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஆனால் வியாபாரம் தொடங்க முதல் வரிப் பணத்திற்கு வருகிறார்கள். சகோதரர்கள் தந்த பத்தாயிரத்தில்தான் இந்த மரக்கறிகளை வாங்கி வைத்திருக்கிறேன். இவற்றை இங்கிருந்து (கிளிநொச்சியிலிருந்து) இறக்கும்தி செய்வதில்லை. யாழ்ப்பாணம், தம்புள்ள போன்ற இடங்களில் இருந்தே வாங்குகிறோம். சிலவேளை இவற்றை விற்ற பின்னர்தான் பணம் கொடுக்கிறோம்

இப்பொழுது மாலை நேரம் ஆகிவிட்டது. ஒரு பெட்டியில் கொஞ்சப் பாலைப்பழங்களுடன் நிற்கும் ஒரு வியாபாரியிடம் யாரோ ஒருவர் பாலைப்பழம் வாங்கிக் கொண்டிருக்கிறார். அவரது பெட்டியினுள் இப்பொழுது கொஞ்சப் பாலைப்பழங்களே இருக்கின்றன. தனது வாழ்வாதாரத் தொழிலாக இன்றைய நாள்களில் இதைத்தான் நம்பியிருப்பதாக அவர் குறிப்படுகிறார்.

நான் பரந்தன் காஞ்சிபுரத்தில் இருந்து இந்த பாலைப்பழங்களைக் கொண்டு வருகிறேன். இருப் பத்தைந்து ரூபாவிற்கு அங்கு வாங்கி வந்து முப்பது ரூபாவிற்கு விற்கீறேன். ஒரு நாளைக்கு ஒருமுறை தான் இப்படி வருகிறேன். மாலைவரை நின்று விற்க வேண்டும். இதனால் ஒரு நாளுக்கு 500 ரூபா வரு மானம் வருகிறது. ஒரு கூலித் தொழிலாளிக்குரிய சம்பளம் கிடைக்கின்றது. இதை விற்றுவிட்டு மரக்கறி, தேங்காய் போன்ற தேவையான பொருள்களை வாங்கிக்கொண்டு போகிறேன். நான் முன்பு கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தேன். இப்பொழுது அந்த தொழிலில் ஈடுபடும் வசதிகள் இல்லாததினால்தான் இப்படி எனது நாள்களை நகர்த்த வேண்டியுள்ளது

இப்படித்தான் கிளிநொச்சியின் நவீன சந்தை இயங்கத் தொடங்கியுள்ளது. முன்பு விளையாட்டு மைதானமாயிருந்த வெளியில் இப்படி பலர் தங்கள் வியாபாரத்தை நடத்தி இரவுகளைக் கழிக்கிறார்கள். பல முகங்களுடன் பேசமுடியாத வலியும் வெளித் தெரிகின்றது. அவர்களைக் குறித்து அருகிலிருக்கும் வியாபாரிகள் துக்கப்படுகிறார்கள். நாங்கள் பழைய நிலையை எட்டக் கடுமையாக உழைப்போம், எந்த இடத்தில் சந்தையை அமைத்தாலும், எந்தப் புழுதி வெளியில் அமைத்தாலும் அழகான ஒரு சந்தையாக அதை மாற்றுவோம் என்று ஒரு இளம் வியாபாரி என்னிடம் பகிர்ந்ததைதான் முடிவாக உங்களுக்குச் சொல்ல நினைக்கிறேன். *

**தீபச்செல்வன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்


தெய்வ அருளால் சில காரியங்கள் நடந்ததாகக் கூறி பெருமை கொள்வீர்கள். அயலாருடன் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நன்மை தரும். மனைவி வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

### இடபம்


சிரமம் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் நாள். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்களில் அலைச்சல் இருக்குமே அன்றி ஆதாயம் கிடைப்பது கடினம். புதிய தொழில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ள முற்படுவீர்கள்

### மிதுனம்


கோவில் வழிபாடுகளுக்காக கணிசமான தொகையைச் செலவு செய்வீர்கள். பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியை கேட்கலாம். இருக்கும் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்து விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். வேலையில் கடுமை காணப்படும். உடல் சோர்வு, உள்ளச் சோர்வு ஆட்கொள்ளும் நாள்.

### கடகம்


எந்தக் காரியத்தையும் குழப்பம் இல்லாமல் தெளிவாக செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் நினைத்தது நடப்பது கடினமே. லாபகரமான பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. பழைய நண்பர் மூலம் புதிய நண்பர் அறிமுகம் கிடைக்கும்.

### சிங்கம்


நிதி நிலைமையில் முன்னேற்றம் காணும் நாள். தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக செயள்பட்டவர்கள் விலகுவர். பெண்கள் வகையில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். உங்களை முன்னர் விமர்சித்த ஒருவர் இன்று பாராட்டலாம். குடும்பத்தில் சந்தோஷம், குதூகலம் அதிகரிக்கும். உதிரி வரவுகளைப் பெறலாம்.

### கன்னி


சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்குப் பெறும் நாள். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். தாயின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் செய்யும் வேலை ஒன்றால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். பல நாட்களாக சந்திக்காத நண்பர் ஒருவரைச் சந்திப்பீர்கள்.

### துலாம்


சேமிப்புகள் கரையும் அளவுக்கு திடீர் செலவு ஏற்படலாம். முகவர் தொழில் புரிவோர் சிரமங்களைச் சந்திக்கலாம். பணவரவு ஒன்றை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். குடும்பத்தில் உள்ளவர்களே உங்களின் முயற்சிகளுக்கு தடை போடலாம். சிலீ விஷயங்களில் நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் அமையும்.

### விருச்சிகம்


எப்படி ஆகுமோ என பயந்த காரியம் ஒன்று நல்ல விதமாக முடிவுக்கு வரும். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய செய்திகள் வந்து சேரலாம். நெடுநாட்களாக கொடுக்க வேண்டிய கடன் மிகுதி ஒன்றைக் கொடுத்துத் தீர்ப்பீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு.

### தனுசு


திடீர் பணவரவுகளைப் பெறலாம். பிரச்சினைகளை தைரியமாக எதிர்கொண்டு சாதனை படைப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் மகிழ்ச்சி, சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். மதிப்பு, கௌரவத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். புதிய அனுபவம் பெறலாம்.

### மகரம்


உடல் நலத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள். கண்ட இடத்தில் சாப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சக ஊழியர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வீண் பயம் உண்டாகும்.

### கும்பம்


சொந்த பந்தங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உழைப்புக்கு ஏற்ற மதிப்பு, மரியாதை உண்டு. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நண்பர்களை அடையாளம் கண்டு ஒதுங்கிக் கொள்வீர்கள். தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆட்படலாம். வெளியூர் பயணங்கள் செல்ல முன்னேற்பாடு செய்வீர்கள். கோபம், பதற்றம் உண்டாகும்.

### மீனம்


புதிய வரவுகளால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் மனஸ்தாபங்களுக்கு ஆட்படாமல் இருக்க அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு மேல் அதிகாரிகளிடம் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள்.

---

## பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் கோயில் பெரிய பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தியும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் (17.05.2010 திங்கட்கிழமை)

மேற்படி கூட்டமானது ஆலயத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெற உள்ளது என்பதை சகல சைவ மக்களுக்கும் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். பரிபாலன சபை யாப்புத் திருத்தம் செய்யவுள்ளோம்.

க.நாகேந்திரம்
(செயலாளர்)

(சீ/567628)

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 818 திகதி: 13.05.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| L | 07 | 35 | 56 | 63 | 02 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 15,273,173.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 287 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 13637 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 190204 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **8,241,780.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை **15,518,521.50**

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



டக்ளஸ் தேவானந்தா



உதயன்



அசோக்

தமிழ் மக்கள் துன்பப்பட்டபோது அவர்களது துயர்துடைத்து தொடர்ந்தும் தமிழ்மக்களுக்காக அயராது உழைக்கின்ற எமது பெருமதிப்புக்குரிய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களான தோழர் உதயன், தோழர் அசோக் அவர்களையும் பாராட்டி நீண்டகாலம் மக்களுக்காக சிறப்பான சேவைகளை ஆற்ற வாழ்த்துவதுடன் புதிதாக யாழ்.மாவட்டப் பொறுப்பாளராகப் பதவிஏற்ற தோழர் கமல் அவர்களையும் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

புங்குடுதீவு - நயினாதீவு, ப.நோ.கூ.சங்கம்.
(சீ/567637)

தலைவர், பணிப்பாளர்கள், பணியாள[illegible]

## யப்பான் ரேடர்ஸ்

நம்பிக்கை நாணயம் | உறுதி உத்தரவாதம்

எமது நிறுவனத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு ரூபா 6500/ விசேட விலைக்குறைப்பு



இச்சலுகை இம்மாத இறுதிவரை மட்டுமே

புதிய அறிமுகம் Sport ELECTRIC BIKES

அறிமுக விலை: 84,500/- மட்டுமே



யப்பான் தொழில்நுட்ப மின்சார மோட்டார் சைக்கிள்கள்

- ★ எரிபொருள் தேவையில்லை.
- ★ சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை.

இரண்டு வருட உத்தரவாதம்

★ பெற்றோல் மோ.சைக்கிள் ஒரு லீற்றர் பெற்றோலிற்கு 40-70 km. செலவு-119 ரூபா

★ மின்சார மோ.சைக்கிள் ஒருதடவை மின்னேற்றத்திற்கு 40-70 km. செலவு-13 ரூபா

சேமிப்பு- 106 ரூபா

யாழ்.மாவட்டத்துக்கு பிராந்திய முகவர்கள் தேவை.

யாழ்.மாவட்ட அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்:

JAPAN TRADERS

இல.10-14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். HOTLINE: 0770868079.

(விவேகானந்தா அச்சகக் கட்டடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை நிர்ணயம் என்ற நஞ்சு விதையால் இன உறவைச் சீர் குலைக்காதீர்கள்!

## அம்பாறை மாவட்ட எம்.பி. பியசேன விசனம்

அம்பாறை, மே. 15

''எல்லை நிர்ணயம் என்ற பெயரில் இன உறவைச் சீர்குலைக்க வேண்டாம். கடந்த பல ஆண்டுகளாக ஒற்றுமையாக வாழ்ந்து வரும் தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் தொடர்ந்து அதே உறவுடன் வாழ வேண்டும்.''

-இவ்வாறு தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமூகநேயன் பொ. பியசேன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

காலாகாலமாக பிட்டும், தேங்காய்ப்பூவும் போல பின்னிப் பிணைந்து வாழ்ந்து வந்த இவ்விரு சமூகங்களும் இடையில் கிளம்பிய அரசி யல் சகதிக்குள் அகப்பட்டு முட்டி மோதிக் கொண்டன.

விளைவு இரு சமூகங்களும் பாரிய இழப்பைச் சந்தித்தன, அதன்பிறகு இனிமேல் அப்படியொரு துன்பியல் இடம்பெறக் கூடாதென்று எண்ணி மிகவும் அன்னியோன்யமாக இரு சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றன.

இந் நிலையில் தற்போது மற்றுமொரு சதி எல்லை நிர்ணயம் என்ற பெயரில் உருவாகி வருகின்றது. எல்லை நிர்ணயத்தை அரசே பார்த்துக்கொள்ள வேண்டும். அதனை பொது மக்களின் கைகளில் பாரப்படுத்தினால் அது விபரீதமாகவே முடியும்.

கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைகளை எப்படி நிர்ணயித்தார்கள்? என்பதனை யாரும் அறியாமல் இல்லை அவை நடந்தவை. ஆனால், இனியும் அதற்கு அனுமதிக்க முடியாது, எனவே எல்லை நிர்ணயம் எனும் இனவாத நச்சு விதையை விதைத்து சமூகங்களைப் பிரிக்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறோம். மழை விட்டும் இடி, மின்னல் விடாத கதை போல யுத்தம் முடிந்த பிற்பாடும். சிலபல செயற் பாடுகள் தொடர்ந்து கொண்டே போகின்றன.

அன்று ஒருமொழி இருநாடு அன்றேல் இருமொழி ஒரு நாடு என்றார்கள். இன்று நான் கூறுகிறேன். மூவினம் ஒருநாடு இன்றேல் ஓரினம் மூன்று நாடு என்று. புத்தன் பிறந்த நம் உலகில் இரத்த ஆறு ஓட இன்னும் அனுமதிக்க முடியாது. மக்கள் அப்பாவிகள். தலைவன் என்றி ருந்து இயக்குபவர் நிதானமாக சிந்தித்துச் செயற்பட வேண்டியவர். நிதானம் தவறினால் நிலைமை மோசமாகும். அந்நிலைக்கு யாரும் இட்டுச் செல்லக் கூடாது -என்றார். (ளி)

# கிழக்கு மாகாண தமிழ்த் தினப் போட்டியை கல்முனையில் நடத்த ஏற்பாடு!

கிழக்கு மாகாண மட்ட அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டிகளை இவ் வருடம் கல்முனை நகரில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம். நிசாம் மேற்கொண்டுள்ளார்.

சமாதான சூழல் நிலவும் இக்காலப் பகுதியில் கல்முனையில் விழா மற்றும் போட்டிகள் நடைபெறுவது குறித்து புத்திஜீவிகள் தமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

கல்வி மாவட்டப் போட்டிகளில் தடம் பதித்த மாணவர்கள் மாகாணமட்டப் போட்டிகளில் களமிறங்கவுள்ளனர்.

தமிழ்மொழித்துறையில் தேர்ச்சிபெற்ற தமிழ்மொழித்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் ஆலோசகர்களைக் கொண்ட குழுவொன்றும் இதற்கு நியமிக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் மாகாணப் போட்டிகள் வாகரையில் இடம்பெற்றமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# ஏறாவூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஒன்பது பேர்கொண்ட இயக்குநர் சபை தெரிவு

மட்டக்களப்பு, மே. 15

ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிதாக ஒன்பது பேர் கொண்ட இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தின்போது வாக்களிப்பின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டதாக சங்கத்தின் பொது முகாமையாளர் எம்.எல். அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எட்டு கிளைகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. முதற்கட்டமாக கடந்த வாரம் கிளைக் குழுக்களுக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

கிளை அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக 100 பேரைக் கொண்ட பொதுச் சபை தெரிவு செய்யப்பட்டு பொதுச்சபை உறுப் பினர்களில் இருந்து இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து வரும்மூன்றுவருடங்களுக்குபதவி வகிக்கும் விதத்தில் பின்வருவோர் இயக்குநர் சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எம்.பி.எம். சக்கூர், ஏ.எஸ். இஸ்ஸதீன், எஸ்.ஏ.சி. கலீல் றகுமான், கே.எம். அலி சப்ரி, வி. றாசிக் பரீட், எம். இர்ஸானா, எம். ஐ. ஜாயிஸா ஆகியோரா வர். எதிர்வரும் மூன்று வருட காலப் பகுதிக் குள் பல்வேறு புதிய வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப் படவுள்ளதாக ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் குறிப்பிட்டார். (ளி)

# கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜவாத்தை மீண்டும் மு.காங்கிரஸில் இணைக்குக!

## 'எஸ்டோ' அமைப்பு வேண்டுகோள்

மட்டக்களப்பு, மே 15

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அப்துல் ஜவாத்தை மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதி உயர் பீடத்தில் இணைத்துக்கொள்ள வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் பாலமுனை 'எஸ்டோ' அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

'எஸ்டோ' அமைப்பின் தலைவர் ஏ. எல். அலியார் கையொப்பமிட்டு மு.கா. தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தி லேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரப்பின் வழிகாட்டுதலில் மு.காங்கிரஸின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட முதன்மைப் போராளி அப்துல் ஜவாத்.

இன்று ஜவாத் மு.காங்கிரஸ் கட்சியின் அதி உயர்பீட உறுப்பினர் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத கவலைக்குரிய விடயமாகும்.

ஒரு சில விடயங்களுக்காக இவ்வாறானதொரு நடவடிக்கையை மு.காங்கிரஸ் தலை வர் எடுத்திருக்கக் கூடாதென கட்சி ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருகின்ற நிலையில் ஜவாத் போன்ற மக்கள் அபிமானம் பெற்றவர்கள் கட்சி யிலிருந்து விலகுவார்களாயின் மு.காங்கிரஸ் பாரிய அழிவைச் சந்திக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கட்சியும் மாகாண சபை உறுப்பினர் ஜவாத் தும் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்து இந்த விடயத்தில் சமரசம் ஏற்பட வேண்டுமென எமது அமைப்பு விரும்புகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் உள்ள சில சுயநலவாதிகள் மாகாணசபை உறுப்பினர் ஜவாத்தை கட்சியிலிருந்து விலக்க வேண்டுமென சதி செய்வதையும், இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். எனவே, மாகாண சபை உறுப்பினர் ஜவாத்தை மீண்டும் அதி உயர் பீடத்தில் இணைத்து அவருடைய செயற்பாட்டிற்கு வழி செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ளி)

# கிராமசேவையாளர் பிரிவுகளை சாய்ந்தமருது பகுதியில் அதிகரிக்குக!

## எல்லை நிர்ணயக் குழுவிடம் வலியுறுத்தல்

அம்பாறை, மே 15

சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிக்குமாறு கோரும் முன்மொழிவுகள் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் எல்லை நிர்ணயக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது மறுமலர்ச்சி மன்றம், ஜும்ஆப் பள்ளிவாசல், வர்த்தக சங்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் இம்முன் மொழிவுப் பிரேரணைகளை அனுப்பி வைத்துள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் அண்மையில் பிரதேச செயலாளர் ஏ.எல். எம்.சலீம் தலைமையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் தற்போது செயற்பட்டு வருகின்ற 17கிராம சேவையாளர் பிரிவுகளில் சனத்தொகை கூடிய ஐந்து பிரிவுகளை தலா இரண்டு பிரிவுகளாகப் பிரித்து மேலும் ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளை உருவாக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்காகக் கரைவாகு வயல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வெலிவேரியன் சிற்றி வீடமைப்புத் திட்டப் பகுதிக்கென இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவ்வமைப்புகள் கோரியுள்ளன.

இம்முன்மொழிவுகளின் பிரகாரம் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவு 24 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டனவாக நிர்வகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, சாய்ந்தமருது பிரதேச செய லகப் பிரிவின் தெற்கு எல்லைப் பிரச் சினைக்கு நியாயமான தீர்வைக் கோரும் பிரேரணைகளும் மேற்படி எல்லை நிர்ணயக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் என.

புதிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கும் தற்போது நடைமுறையிலுள்ள எல்லைகளை மாற்றியமைப்பதற்கும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் எச்.பி.திஸாநாயக்க தலைமையில் எல்லை நிர்ணயக் குழுவொன்றை அமைத்துள்ளமை தெரிந்ததே. (ளி)




# அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு நிரந்தரமான செயலாளரை நியமிக்குக

## உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, மே. 15

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு நிரந்தரமான ஒரு செயலாளரை நியமிக்குமாறு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் தமீம் ஆப்தீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் தமீம் ஆப்தீன் கையெழுத்திட்டு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அட்டாளைச்சேனை பிரதேச சபை அட்டாளைச் சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாவி, திராய்க்கேணி, ஆலம்குளம், அஸ்ரப்நகர், சம்புநகர், மீலாதநகர், மீனோடைக்கட்டு, தைக்காநகர் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கியதாகும்.

இவ்வாறு பரந்த பிரதேசங்களை உள்ளடக்கிய அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு நிரந்தரமான ஒரு செயலாளர் இல்லாததனால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரதேசத்தில், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்விக் கல்லூரி, கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்விக் கூடங்கள் அமையப்பெற்றுள்ள நிலையில் பாரிய அபிவிருத்தி காண வேண்டிய தேவை இங்குள்ளது.

எனவே, பொருத்தமான தகுதியுள்ள ஒரு செயலாளரை அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு நியமித்து இப் பிரதேச மக்களின் சிறந்த செயற்பாட்டிற்கு ஆதரவளிக்குமாறு கோருவதுடன், இந்த விடயத்தில் கடந்த கால எனது வேண்டுகோள்களையும் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் -என்றுள்ளது. (ளி)

# கடற்றொழில், விவசாய தொழிற்சாலைகளை அம்பாறையில் ஆரம்பிப்பதன் மூலம் இளைஞர், யுவதிகள் பயனடைவர்!

அம்பாறை, மே. 15

அம்பாறை மாவட்டத்திலுள்ள விவசாய மற்றும் கடற்றொழில் வளங்களைப் பயன்படுத்தி இங்கு பாரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு நல்ல தொழில் வாய்ப்புக்கள் கிட்டும் என தொரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அச்சமற்ற இன்றைய சூழ்நிலையில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில், இங்கு தாராளமாகக் கிடைக்கும் விவசாய மற்றும் கடற்றொழில் வளங்களைப் பயன்படுத்தி தொழிற்சாலை களை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இளைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கல்விக்குப் பின்னர் பல தரப்பட்ட தொழிற்பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்துள்ள தாம் அப் பயிற்சிகளுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புக்கள் இன்றி வருமானத்திற்காக எதையாவது செய்தேயாக வேண்டும் என்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் இப் பிராந்தியத்தில் நிலவிய பாதுகாப்பு வசதியின்மையைக் காரணங்காட்டி பாரிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்ததுடன் தற்பொழுது இந்நிலை மாறியிருப்பதால் பாரிய தொழில் முயற்சிகள் செய்யும் சூழலும் தோன்றியிருக்கிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் அம்பாறை மாவட்டத்தில் பாரிய தொழிற்சாலை வசதிகளை ஏற்படுத்தி இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இம் மாவட்டத்தின் தனிநபர் வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இங்கு முறையான நல்ல வருமானம் ஈட்டக் கூடிய தொழில் வாய்ப்புக்கள் தாராளமாகக் கிடைக்கப்பெறும் பட்சத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை நாடிச் செல்வது குறையும் எனவும், நாட்டின் உள்ளூர் உற்பத்திகளும் குறிப்பிடத்தக்களவு விருத்தியடையும் எனவும் தொரிவிக்கப்படுகிறது.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மேடையேறிய காளிதாசரின் அபிஞ்ஞானசகுந்தலா நாட்டிய நாடகம்

இந்திய - இலங்கை நட்புறவுக் கலாசார நிகழ்வாக இம்மாதம் 'மே 5 ஆம் திகதி- மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மிகப் பிரமாண் டமான ரசிகர்கள் கூடியிருக்க காளிதாசரின் அபிஞ்ஞன சகுந்தல நாட்டிய நிகழ்வு மேடையேறியமை நினைவு கூரத்தக்கது. அரு ஸ்ரீ கலையகம், கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் நெறியாள்கையில், புதிய யுத்திகளும்; கற்பனை வளங்களும் கொண்டதாகக் காளிதாசரின் அபிஞ்ஞன சகுந்தலைம் என்னும் கவிதை நாட்டிய நாடகம் வெகு சிறப்பாக மேளவாத்தியங்கள் ஒலிக்க மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

அபிஞ்ஞன சகுந்தலம் என்னும் நாடகம் சமஸ்கிருத மொழியில் அமைந்த காவியம் - கதையின் சாராம்சம்:- தேவலோகத்தில் இந்திரசபையில் இந்திர தேவர்கள், ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை ஆகியோரின் நாட்டியத்தில் மகிழ்ந்திருக்கும் வேளையில் விஸ்வாமித்திரரின் உக்கிரமான தவத்தால் யாகத்தை கலைக்க மேனகை விஸ்வாமித்திரரை மயக்கி யாகத்தைக் குலைக்கின்றாள். ...னிக்கும் தேவலோக மங்கைக்கும் பிறந்த குழந்தையை;



...த அழைத்துச் செல்ல முடியாத மேனகை ...ிட்டுச் செல்கிறாள். ...ந்தலை கன்வரிஷியால் வளர்த்து ...துந்தலை அழகிய பெண்ணாக வளர்கிறாள். ...த மன்னன் சகுந்தலையின் அழகில் மன ...றிகொடுத்தான். இருவரும் காந்தர்வ மணம் ...பிரியும் வேளையில் ஞாபகமாக தனது கணை ...யக் கொடுத்துச் செல்கிறான் துஷ்யந்தன். ...வின் வேதனையால் மனம் கலங்கிய ...நலை துர்வாச முனிவரின் சாபத்திற்கு ...காகிறாள். சாபவிமோசனமாக துர்வாச ...வர் அடையாள ஆபரணத்தைத் துஷ்யந்தன் ...றும் போது சாபவிமோசனம் கிடைக்கும் ...க் கூறிச் செல்கிறார். சகுந்தல புனித ...யில் நீராடியபோது அவள் விரலிலிருந்த ...ணயாழி நதியில் விழுகிறது. மீன் ...யிற்றில் ஒரு மோதிரம் இருப்பதனை கண்ட ...ீன்வத் தலைவன் அதனை எடுத்து விற்கச் ...சென்றபோது அரச காவலாளியால் கண்டு ...வனை ராஜ சபைக்கு இழுத்துச் சென்று ...றயிடுகிறான். கணையாழியைக் கண்ட ...ந்தன் சகுந்தலையின் நினைவு வரவே ...ல் மனம் வெதும்புகிறான். ...யந்த மஹாராஜன் இந்திரனுடன் சென்று ... வேளையில் ஆச்சிரமத்தில் சிறு பையன் ... சிங்கத்துடன் விளையாடிகொண்டு நிற்பதைக் கண்டான் - முனி காசிபரால் சிறுவனின் பாதுகாப்பிற்காக அணியப்பட்ட ரட்சை தந்தை, தாயைத் தவிர வேறு யாராவது தொட்டால் பாம்பாக மாறிக் கொத்திவிடும். துஷ்யந்தனுக்கு ஒரு தீங்கும் நேராததால் இது சிறுவனின் தந்தையாக இருக்கும் என ஊகித்து சகுந்தலையிடம் தெரிவிக்கின்றனர். சகுந்தலையைக் கண்ட துஷ்யந்தன் மனம் உருகி மன்னிப்பு வேண்டுகிறான் - இது தான் கதைச் சுருக்கம்.

துஷ்யந்தனாக நடித்த திரு.பி.என்.விகாஸ் என்பவர் இந்திய கலாச்ஷேத்திராவில் விரிவுரையாளர் கேரளாவைச் சேர்ந்தவர். இவரது அழகும் உடல் தோற்றமும், வசீகரமும் ரசிகர்களை மிகவும் கவரத்தக்கதாக அமைந்தன. மிகச் சிறப்பாக நடித்து பாராட்டினைப் பெற்றார். சகுந்தலையாக நடித்த லக்சுமி சுப்பிரமணிய சர்மா என்பவர் எமது நாட்டினர். இவரது அழகும் மென்மையும் கவர்ச்சிகரமான தோற்றமும் நடிப்பும் மிகவும் சிறப்பானதாக அமைந்தது. இவரது முகபாவங்களும் முத்திரைகளும் வெகு அழகாக இருந்தது. மேனகாவாக அபிராமி காண்டீபன் அவர்களும் சிறப்பாக நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். இந் நாடகத்தில் நடித்த சிங்கள, தமிழ் நடிகர்கள் வெகு சிறப்பாக நடித்து விறுவிறுப்பாக நடைபெற ஆவன செய்தனர். இதில் நாட்டிய நாடகம் இடைவேளையின்றி தொடர்ந்து காட்சிகள் அமைந்தமை பாராட்டத்தக்கது.

இந்நிகழ்வில் பாடிய ஸ்ரீ ஏ.ஆரூரனின் கம்பீரமான இனிய குரல் இசையும் அபர்ணா அருணசலம் என்பவரின் இனிமையான குரலும் நாட்டிய நாடகத்திற்கு வெகு சிறப்பினை வழங்கின. அத்துடன் பக்கவாத்தியக் கலைஞர்களின் மிருதங்க இசை, வயலின் இசை, புல்லாங்குழல் இசை, தபேலா இசை,கீபோட் இசை என்பன அவர்களின் கைவண்ணங்களினால் ஒருங்கே வாசிக்கப்பட்டு நாட்டிய நாடகத்தினை மிகவும் மெருகூட்டிச் சிறப்பாக அமைய காரணமாகின - பக்கவாத்திய கலைஞர்களின் முகங்களினையும் அவர்களின் வாசிப்புத் திறனையும் நேரில் பார்க்க முடியாது போனமை வருந்தத்தக்கது.

இந்நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியவர்கள் எவ்வளவு சிறப்பாகச் செய்த போதும் ஒலி அமைப்பில் தெளிவு இன்மை சில குறைபாடுகளினை ஏற்படுத்தியது. பாடியவர்களின் குரல்கள் தெளிவாகக்



இ.குமாரசாமி சர்மா
வண்ணார்பண்ணை.

கேட்க முடியாத வண்ணம் அதன் ஒலிவாங்கி அமைந்தமை குறைபாடாக இருந்தன.

நிகழ்ச்சியின் ஆரம்பத்தின்போது நாட்டிய நாடகத்தின் கதையின் சுருக்கத்தினை தெரிவித்திருந்தால் ரசிகர்கள் கதையினை முழுமையாகப் பார்த்து அறிய முடிந்திருக்கும்

பல ஆண்டுகளின் பின்னர் இத்தகைய ஒரு சிறப்பான நிகழ்ச்சியினை யாழ்.மக்கள் பெருந்திரளா்க வந்து பார்க்க ஏற்பாடுகள் செய்தவர்களுக்கு மக்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனர்.

# நீங்களுமா கிறிஸ்த...

''இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடி இருக்கிறார்களோ, அங்கே அவர்களின் மத்தியில் நான் இருக்கிறேன் என நான் உறுதியாகக் கூறுகிறேன்'፡ (மத்தேயு 18 ஆம் அதிகாரம், வசனம் 19 - 20).

சரியான திட்டமிடலின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதி அகலிப்பு எனும் அபிவிருத்திச் செயற்பாடுகள் எமது பண்பாட்டு மரபுரிமை இடங்கள் - சொத்துக்களை அழித்தொழிக்கும் தனது வரலாற்றுக் கைங்கரியத்தை ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. எமது வருங்காலச் சந்ததிக்கு எமது பெருமை மிகுந்த பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்கள் எதுவும் மீதமாக இருக்கக் கூடாதென இதில் முனைப்புக் காட்டுபவர்கள் கருதுகிறார்கள் போலும். கடந்த வாரம் கூட ஒரு பல்கலைக்கழக அன்பர் இயற்கை மரபுரிமையான பாரிய - நூற்றாண்டுகள் கடந்த மரங்களின் வீணான கொலைகள் பற்றி எழுதியிருந்தார். எழுதியிருந்தும் என்ன பலன்? தமிழில் 'கெடுகுடி சொற்கேளாது' என ஒரு பழமொழியுண்டு.

பகுதியாகவோ, முழுமையாகவோ இந்த 'அபிவிருத்திச்'(?) செயற்பாடுகளால் அழியப்போகும் பண்பாட்டு வரலாற்று மரபுரிமைச் சொத்துக்களுக்குள் எமது பண்பாட்டு தனித்துவத்தின் ஒரு பகுதியான கிறிஸ்தவப் பண்பாட்டின் பெருமை மிகுந்த கடந்த கால அமைவுகளும் சிக்கியுள்ளன. வண்ணைக் கோயில் நகரமும், நாவலர் இயக்கத்தின் சரித்திரச் சான்றுகளும் வீதி அகலிப்புக்குள்



ம.திருக்குமரன்

சிக்குண்டு அழிய அக்கறை இருப்பத... மௌனவிரதத்தில்...

நீங்களுமா கிறிஸ்தவர்களே? அவ்வாறு மௌன... காக்கிறீர்கள். எமது பண்பாட்டு உருவாக்கத்தின் ஒ... பகுதியான பண்டைய தேவாலயங்களும், கட்டுமானங்களும் இல்லாமற் போவ... நீங்கள் அனுமதிக்கிறீர்களா... என்ன?

கத்தோலிக்க கிறிஸ்தவ பண்பாட்டு மரபுரிமைகளாகட்டு... புரொட்டஸ்தாந்து மரபுசார் பண்பாட்... மரபுரிமைகளாகட்டு... இவையெல்லாம் சேர்ந்து கலந்ததுதா... எமது கிறிஸ்தவப் பண்பாடு - மெதம... அமெரிக்கத் திருச்... யாழ்ப்பாண நிலை... சரித்திரத்தின் சான்... கொடுக்க வேண்ட... களிலிருந்து இன்று... யாழ்ப்பாண கிறிஸ்... சொத்துக்களையும் பன்மைத் தன்மை... செய்த...வோ...

கே....எஸ் ... வீதியில் உள்ள அ... லுள்ள கத்தோலிக்க ... உள்ளாக்கியுள்ள நி... ஒரு மாற்று வழிக்கா...

# அசண்டை + உதாசினம் = பாதிப்பு

அந்தக் கல்லூரியின் வளாகம் பல பாடசாலை மாணவச்சிட்டுக்கள் சிறகடித்துக் கொண்டிருக்கும் வண்ணப் பூங்காவாய் அன்று மிளிர்ச்சி கொண்டிருந்தது.

அதில் பலர் கலைநயம்மிக்க வேடங்களைத் தாங்கியும் சிலர் தாம் வெற்றி வாகை சூட வேண்டும், அந்தப் புகழ் தமது பாடசாலைக்கு சேர வேண்டும் என்ற ஆதங்கத்தை முகத்திலே சூடிய வண்ணம் போட்டியை எதிர்கொள்ள - தாகமாய் - வேகமாய் - நின்று கொண்டிருந்தனர்.




ஆமாம் அது மாவட்ட மட்டத்தமிழ்த்தினப் போட்டிக்காக மாணவர்கள் காத்திருக்கிறார்கள்.

போட்டிக்காக ஒவ்வொருவராய் அழைக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அப்போது யாழ். கல்விவலயத்தைச் சேர்ந்த எழுத்தாக்கப் போட்டியில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி அழைக்கப்படுகிறார்.

பல தடவை அழைக்கப்பட்டும் குறிப்பிட்ட மாணவி அங்கு பிரசன்னமாகவில்லை. ''என்ன டாப்பா எவ்வளவோ கஷ்ரப்பட்டு கோட்டமட்டம், வலயமட்டம் என்றெல்லாம் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெற்று மாவட்ட மட்டத்திற்கு இந்தப் பிள்ளை வரவில்லையே'' என்று எனக்குள்ளே பரிதாபப் பட்டேன்.

ஆனால் அந்த மாணவி போட்டியில் பங்குபற்றவில்லை என்பது உண்மையல்ல குறிப்பிட்ட மாணவி, தாம் வலயமட்டத்தில் மேற்பிரிவில் எழுத்தாக்கப் போட்டியில் முதலிடம் என்று தெரியாததால்தான் பங்குபற்றவில்லையென்று பின்னர்தான் அறியவந்தது.

கவிநேசன்

சம்பந்தப்பட்ட போட்டிகளின் ஏற்பாட்டுக்குழுவினரிடம் அந்த பிரஸ்தாப மாணவியின் நிலை குறித்துக் கேட்டோம். உரிய மாணவி குறிப்பிட்ட போட்டியில் முதலிடம் பெற்றவிடயத்தை பாடசாலைக்கு முற்கூட்டியே அறிவித்தோம் என்றனர் அவர்கள்.

அப்படியானால் அந்தப் பாடசாலை அதிபரிடம் மாணவியின் நிலைகுறித்துக் கேட்டோம்.

குறிப்பிட்ட மாணவி இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதாகவும் அதனால் ''கற்றலுக்கான விடுமுறை''யில் (Study leave) இல் நிற்பதாகவும் அதனால் குறிப்பிட்ட மாணவியிடம் உரிய தகவலைக் கொடுப்பதற்குத் தாமதமாகி விட்டதாகவும் - போட்டித்தினமன்றும் எம்மிடம் தொலை பேசியில் ஏற்பாட்டாளர்கள் தொடர்பு கொண்டு உரிய மாணவியைப் போட்டிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டிருந்தனர். உடனடியாகப் பிள்ளையின் வீட்டுக்கு சக மாணவர்களை அனுப்பினோம். ஆனால் குறிப்பிட்ட மாணவி வீட்டில் இல்லை என்றும் அவர் உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டதாகவும் பதில் வந்தது. அதனால் குறிப்பிட்ட போட்டியில் அந்த மாணவி பங்குபற்றமுடியாமல் போனது என்று அதிபர் சாதரணமாப் பதில் சொன்னார்.



ஏன் இந்தச் சம்பவம் இங்கு சுட்டிக்காட்டப் படுகிறதென்றால் போட்டியில் ஆர்வமாய் பங்கு பற்றிய மாணவிக்கு முடிவுகள் உரிய காலத்தில் தெரியாமல் போனதுதான்.


தெரிவிக்கப்படாமல் போனது என்பது குறிப்பிட்ட பாடசாலை நிர்வாகத்தின் அசண்டையை அச்சொட்டாகக் காட்டுகிறதல்லவா? இத்தகைய செயற்பாடுகள் மாணவர்களின் ஆக்கத்திறனையும் அதன் மேல் அவர்கள் கொண்டிருக்கும் உத்வேகத் தையும் உதாசீனம் செய்வது போலவும் மழுங் கடிப்பது போலவும் அமைகிறதல்லவா?

மாணவர்களின் ஒவ்வொரு நகர்விலும் அதிபர்கள், ஆசிரியர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். சிந்திப்பார்களா? இனிமேலாவது இது போன்ற செயற்பாடுகளைத் தவிர்ப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஸ்தவர்களே?

...ண்டு அழிய இருப்பதுபற்றி யாழ்ப்பாணத்துச் சைவர்களுக்கு
...றை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள்
...னவிரதத்தில் அமர்ந்திருக்கிறார்கள் போலும்...



...ங்களுமா
...ஸ்தவர்களே?
...வாறு மௌனம்
...றீர்கள். எமது
...பாட்டு
...க்கத்தின் ஒரு
...யான
...டைய
...லயங்களும்,
...மானங்களும்
...மற் போவதை
...ள்
...மதிக்கிறீர்களா
...?
...தோலிக்க
...தவ
...பாட்டு
...மைகளாகட்டும்,
...ட்டஸ்தாந்து
...ர் பண்பாட்டு
...மைகளாகட்டும்,
...யெல்லாம்
...து கலந்ததுதான்
...கிறிஸ்தவப்
...ாடு - மெதடிஷ்த சபையினதும், அங்கிலிக்கன் சபையினதும்
...ரிக்கத் திருச்சபையினதும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தினதும்
...பாண நிலைப்பட்ட பண்டைய பேறுகளை நமது
...ரத்தின் சான்றாக எமது எதிர்காலச் சந்ததிக்கு நாம் பேணிக்
...க்க வேண்டாமா? ஏறத்தாழ கி.பி.16 ஆம் நூற்றாண்டு
...ருந்து இன்றுவரை, ஏறத்தாழ 400 வருடங்களுக்கு மேற்பட்ட
...பாண கிறிஸ்தவப் பண்பாட்டு மரபுரிமை இடங்களையும் -
...துக்களையும் பேணுவதன் மூலம் யாழ்ப்பாணப் பண்பாட்டின்
...மத் தன்மையை நிலைநிறுத்தும் கடமையையும் நாங்கள்
...வோ... இல்லையா?
...எஸ் ...தியின் கில்னர் மண்டபம் தொடக்கம் மானிப்பாய்
...ல் உள்ள அமெரிக்க திருச்சபையின் அமைவுகள், கண்டி வீதியி
...கத்தோலிக்க வரலாற்றுச் சின்னங்கள் அனைத்தும் அச்சுறுத்தலுக்கு
...க்கியுள்ள நிலையில் - இவற்றைப் பேணிப் பாதுகாத்தபடிக்கு
...ற்று வழிக்காகக் குரல் கொடுக்க வேண்டிய கடமை நமக்குண்டு.



தொகுப்பு: ஒளண்யன்

# கவிதைமொழி கொண்டு நாடகம் படைத்த ஷேக்ஸ்பியர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாடகமொன்றையும் நடத்தி விருந்தினர்களை மகிழ்விப்பதுண்டு.

எலிஸபெத் மகாராணி கெனில்வேர்த் மாளிகைக்கு விஜயம் செய்த போது லீசெஸ்டர் பிரபு ஒரு நாடகத்தை அங்கு மேடையேற்றினார்; விருந்தினர்களை மிகிழ்விக்க.

### தியேட்டர் (கொட்டகை) எப்படி இருந்தது

எலிஸபெத் காலத்து நாடகக் கொட்டகையானது வட்டவடிவமாக அமைந்திருந்தது. நடுவில் வானம் தெரியும் படி திறந்திருந்தது. அவ்விடத்தில் ஆசனங்கள் கிடையாது. மேடையும் பார்வையாளர்கள் இருக்கும் பகுதியும் மட்டுமே கூரையால் மூடப்பட்டிருந்தது. திறந்த பகுதி ''யார்ட்'' என்று அழைக்கப்பட்டது. இங்கு தரையில் இருந்து பார்ப்பவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஒரு காசிலிருந்து 6 காசுவரை கொடுத்துவிட்டு அவர்கள் உள்நுழைவார்கள். பார்வையாளர்களுக்கான பகுதியில்




அல்லது மேடையில் ஓர் இடம் பெறுவதற்கு ஒரு ஷில்லிங்கிலிருந்து அரை கிரவுண் வரை செலுத்த வேண்டியிருந்தது.

நாடகம் பெரும்பாலும் மாலை மூன்று மணிக்கு ஆரம்பித்து இரண்டு மணிநேரம் அல்லது மூன்று மணி நேரம் வரை நடைபெறுவதுண்டு.

நாடகம் ஆரம்பமாகும் போது கொட்டகைக்கு மேலே அடையாளமாக கொடியொன்று உயர்த்தப்படும்.

மேடையில் அமர்ந்திருப்பவர்கள் மது அருந்துவதிலும், புகைபிடிப்பதிலும் ஈடுபட்டிருப்பார்கள். நாடகம் பார்க்க ஒரு சீமாட்டி வருவாரானால் முகத்தை முக்காடிட்டு மறைத்திருப்பார். தன்னை எவரும் அடையாளம் காணாதிருப்பதற்காக. அவர்களுக்கென்றுள்ள அறைகளில் இருந்து நாடகத்தைப் பார்ப்பார்கள்.

''யார்ட்'' பகுதியில் தொழில் பழகுகிறவர்கள், விற்பனையாளர்கள், மற்றும் மாலுமிகள் காணப்படுவார்கள். இவர்கள் தள்ளுமுள்ளுப்பட்டுக் கொண்டும் கடலை போன்றவற்றைக் கொரித்துக் கொண்டும் கடித்த அப்பிள் துண்டுகளுக்காக இழுபறிப் பட்டுக் கொண்டும் இருப்பார்கள் என்று அக்கால எழுத்தாளர் ஒருவர் எழுதியுள்ளார்.



இதிலிருந்து அக்காலத்து நாடகக் கொட்டகை என்பது கௌரவமான இடமன்று. அதனால் மரியாதைக்குரியவர்களும் சமூகத்தில் உயர்வாகக் கருதப்பட்டவர்களும் நாடகம் பார்க்கப் போவதில்லையென்பது தெரிகின்றது.

### நாடகம் எப்படித் தொடங்கும்

குறிப்பிட்ட நேரம் வந்ததும் குழல் வாத்தியங்கள் (எக்காளம்) முழங்கப்படும். கறுப்பு உடை தரித்த நடிகர் ஒருவர் தோன்றி நடக்கப் போகும் நாடகத்தைப் பற்றி விளக்கமளிப்பார். அதன் பிறகு மீண்டும் வாத்தியம் முழங்கும். திரைகள் உயர்த்தப்பட்டு நாடகம் ஆரம்பமாகும்.

இன்னும் பல விடயங்கள் மிகப் பழமையானவையாகவே இருந்துள்ளன. அதுபற்றி ஒரு பிரபலமான எழுத்தாளர் குறிப்பிட்ட போது, ஷேக்ஸ்பியர் காலத்தில் மேடையானது மிகப் பின்னடைவாக இருந்த போதிலும் அதனை அரசர்களும், பிரபுக்களும் அமர்ந்து பார்க்கும் உன்னத நிலைக்கு உயர்த்தியவர் ஷேக்ஸ்பியர் ஆவார் என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஷேக்ஸ்பியரின் முதல் நாடகம்

ஷேக்ஸ்பியருக்கு 27 வயதாக இருக்கும் போது அவர் தமது முதல் நாடகத்தை எழுதியிருந்தார்.மகிழ்ச்சியும் குதூகலமும் மிக்க அந்த இன்பியல் நாடகத்தின் பெயர் 'லவ்ஸ் லேபர்ஸ் லொஸ்ட்'' என்பதாகும். இந்த நாடகத்தில் அவர் தமக்கு மிகவும் பழக்கமான மலர்கள், பறவைகள் போன்றவற்றை அடிக்கடி குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அழகான இளம் பெண்கள், ஆடம்பரமான பகுதி, பாடசாலை ஆசிரியர்,முட்டாள்தனமான கிராமத்துப் பொலிஸ்காரர் என்று தமது கிராமத்து நிலைமைகளை அவர் அழகாக வர்ணித்துள்ளார்.

தமது 27 வயதிலிருந்து 47 வயது வரை 37 நாடகங்களை அவர் எழுதித்தள்ளினார். அவர் மரணமாகி 300 வருடங்களுக்கு மேலாகிவிட்டன.

கிராமத்தில் பிறந்து வளர்ந்த சிறுவன், பள்ளிப் படிப்பும் அதிகமில்லை.திறமைகளை வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பங்கள் அதிகமில்லாமல் இருந்த ஒருவர் கவிதைத் துறையிலும் நாடகத் துறையிலும் இந்த அளவு திறமைகளை எவ்வாறு வெளிப்படுத்த முடிந்தது என்று யோசிக்கையில் நமக்கு ஆச்சரியமாகவிருக்கிறது.

அவர் ஒரு மேதையாக விளங்கினார் என்பதை நாம் மறந்து விடலாகாது.இம்மாதிரியான திறமை உலகில் ஒரு சிலருக்கே வாய்க்கப்பெறுகின்றது. இவற்றுடன் மனிதர்களில் ஆண்கள், பெண்கள் அனைவரதும் மனங்களிலும், உள்ளங்களிலும் உட்புகுந்து ஊடுருவிப்பார்க்கும் திறமை அவருக்கிருந்துள்ளது. அவர்களின் பேச்சுக்கள் செயற்பாடுகளிலிருந்து அவர்களைப் படித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் இருந்துள்ளது.

நல்லவரோ, கெட்டவரோ, இளைஞரோ, வயதானவரோ, அறிஞரோ அறிவில்லாதவரோ, ஏழையோ, பணக்காரரோ எல்லோருமே அவரிடம் தம் இரகசியங்களை பறிகொடுத்தார்கள். இவ்வாறான மனிதர்கள் பற்றிய ஆழமான அறிவினால்தான் அவரால் தமது நாடக பாத்திரங்களை அவ்வளவு சிறப்பாக உருவாக்க முடிந்தது.

அதனால் தான் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் யாவும் ஒரு சகாப்தத்துக்குரியவையன்று எல்லாகாலங்களுக்குமுரியவை என்று கூறப்படுகின்றது.

'லவ்ஸ் லேபர்ஸ் லொஸ்ட்'' என்ற நாடகத்தின் கதைக்கருவானது ஷேக்ஸ்பியரின் சொந்தக் கருவாகும். ஆனால் அவரது ஏனைய பல கதைகளின் கருக்கள் வரலாறு, பாரம்பரியகதைகள், காதல் கதைகள் மற்றும் எல்லோருக்கும் தெரிந்த பழைய நாடகங்கள் போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்டவையாம். பழைய கதைகளாக மீளவும் எழுதியபோது அவைகளுக்கு மெருகுகொடுத்து புதுமையைப்புகுத்தினார்; அழகுபடுத்தினார். அவைகளில் தனது தனித்துவத்தைப் பதித்தார். அதன் மூலம் அவைகளை தம்முடையதாக்கினார்.

வெகுவிரைவிலேயே ஷேக்ஸ்பியர் சிறந்த நாடக ஆசிரியர் என்ற புகழுக்குரியவரானார். அதனால் சில கீழ்நிலை நடிகர்களையும், எழுத்தாளர்களையும் அவர் மீது பொறாமை கொள்ளச் செய்தது.

### குறை கூறலும் பாராட்டுக்களும்

அவரை இழிவு படுத்திசிலர் புத்தகமும் எழுதினார்கள். ஷேக்ஸ்பியரின் நண்பராக விருந்த பென்ஜோன்சன் என்ற எழுத்தாளரும் கூட அவரைக் குறைகூறும் வார்த்தைகளை வெளியிட்டிருந்தார். ஆனால் இந்த குத்தல் மொழிகளை அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

குறை கூறியவர்களை விட பன்மடங்கு பாராட்டாளர்களும் இரசிகர்களும் இருந்தனர். அவருக்கு அக்காலத்து எழுத்தாளர்கள், நடிகர்கள் மத்தியில் மட்டுமல்ல தனவந்தர்கள், பிரபுக்கள், ஏன் மகாராணியாரும் அவரை மதித்தார்கள்.

அவர் ஆரம்பத்தில் எழுதியிருந்த கவிதை யொன்று எலிஸபெத்மகாராணியாரையும் அவரைக்சார்ந்தவர்களையும் மகிழ்வித்திருந்தது. மகாராணி அவருக்கு அதிகமாகவே சலுகைகள் காட்டியிருந்தார். மகாராணியின் முன்னிலையில் ஒருதரத்துக்கு பல தடவைகள் ஷேக்ஸ்பியர் நடித்துக்காட்டியிருந்தார்.

(இன்னும் வரும்)

# நன்றும் தீதும் பிறன் தர வாரா

நான் சொல்லப்போகும் சம்பவம் நடந்து வருடங்கள் கழிந்து விட்டன. இது ஒரு சாலை விபத்து. நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை போகுவழியில் நடந்தது. நெல்லியடிக்குச் சுமார் ½ மைல் தூரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒரு மாணவியை தமது வாகனம் ஒன்று மோதியதில் மாணவிக்குப் படுகாயம். நான் நாலு நாள்கள் கழித்து மாணவியின் பொலிகண்டி வீட்டைத் தேடிக்கண்டு பிடித்தேன். அவர்கள் வீட்டுப்படலை தெற்கு நோக்கியிருந்தது. வராந்தாவில் மாணவி கிடத்தப்பட்டிருந்தாள். பார்த்து விட்டுத் திரும்பினேன்.

நம்மிடையே சோதிடர்கள் பலர் இருக்கிறார்கள். தெரிந்தோ, தெரியாமலோ சோதிடம் சொல்லிப் பிழைக்கிறார்கள். யாரும் ஒரு சோதிடனின் தராதரம் எப்படி யிருக்கிறது என்று கவலைப்படுவதில்லை. எந்தச் சோதிடனும் சான்றிதழ் வைத்திருப் பதில்லை.

நான் ஒரு சில சோதிடர்களைப் பார்த்திருக்கிறேன். தம்மை விளம்பரப் படுத்திக் கொள்ள சில இளிச்சவாயரிடம் வலியச் சென்று, உங்கள் படலை சற்று இடதுபுறம் இருப்பது நல்லது என்று சொல்வார்கள். அந்த இளிச்சவாயர் களும் குறை எங்கோ இருக்கச் சோதிடர் சொன்னதுதான் சரியென்று படலையை மாற்றியமைத்து மேலும் துன் பப்படுகிறார்கள்.

அனேகமான சோதிடர்கள் மற்ற சோதிடர்களோடு ஆராய்ச்சி செய்ய விரும்புவர்கள். காரணம் சட்டியில் இருந்தாலல்லவோ அகப்பையில் வரும்? இது என் பொன்னான அனுபவம்!

இப்பொழுதெல்லாம் வெளிநாட்டுப் பணம் புழங்குகிறது. சௌகரியங்களைத் தேடி அலைகிறார்கள். இன்னுமொரு செய்தியையும் சொல்லிவைக்க விரும்புகிறேன். பொன்னம்பலத்துக்கு ஓர் ஆசை. அடுப்படிக்கருகில் ஒரு தொட்டி கட்டினார். உடனே மாமியாருக்கு நோய். அவருடைய நண்பனாகிய என்னிடம் தொட்டியைக் காட்டினார். நான் அத்தொட்டி அங்கிருந்தால் வீட்டுப் பெண்களுக்குக்கேடு என்று சொல்லி, தொட்டியை இடித்து விடும்படி சொன்னேன். அதன்படி நடந்து, மாமியாரும் நோய் நீங்கப் பெற்றார்.நாம் தெற்குத் திசை பற்றி உஷாராக இருப்பது நல்லது. தொட்டிகள் கட்டுவது பற்றியும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

வல்வெட்டியில் எனக்கொரு உறவினர் இருந்தார். அவருடைய வீட்டு வெளிவாசல் தெற்கு. எனவே பிரதான வீதியில் (தெற்கில்) படலை வைத்துக் கொண்டார்.வீட்டுக்குக் கிழக்கே ஓர் ஒழுங்கையும் உண்டு. அவரு டைய அக்காவும் பிரதான வீதியில் அமைந்த படலையையே பாவித்தார். அந்த அக்காவிடம் கிழக்கில் படலை திறக்கும்படி சொன்னேன். அக்காவும் குடும்பமும் கிழக்குப் படலையை உபயோகிக்க என் நண்பர் தெற்குப் படலையையே பாவித்தார். கிழக்குப் படலை பாவிக்கத் தொடங்கியதும் தொல்லைகள் குறைந்து விட்டன என்று அக்கா சொன்னார். என் நண்பர் அதீதக் குடியால் ஆஸ்பத்திரியில் (கொழும்பில்) காலமாகிவிட்டார். தெற்குத் திசை, களவு,களத்திர விரோதம், சண்டை, சச்சரவு, கைது என்பன தரும்! இது அனுபவம்.

நான் அதிகம் படித்தவனல்லன். இருப்பினும் சோதிடம் ஆகிய கலைகளில் விருப்பம் கொண்டவன். எதிலும் உண்மையறிவதே எனது நோக்கம். நாம் எந்த மனோநிலையில் வாழ்கிறோம் என்பதை நாமறிய வேண்டும்.

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்''




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செயப்பல அன்பர் தோன்றத் தோன்றத் தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக்
கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்டக்
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழி வாழி.

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி

# அமுதசுரபி அன்னதான சபை

## விகிர்தி வருட அன்னதானப் பெருவிழா

## Regd. No.S.236

## ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்துவருகின்றது. இவ்வாண்டுடன் 51 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்துகிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவி செய்து வருவதுடன், ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப் பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியனவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த, பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாண்டு வைகாசி 29 ஆம் நாள் (12.06.2010) சனிக்கிழமை அம்பிகையின் உயர்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 7 ஆம் நாள் (21.06.2010) திங்கட்கிழமை திருமஞ்சத்திருவிழாவும் மறுநாள் (22.06.2010) செவ்வாய்க்கிழமை பூந்தண்டிகைத் திருவிழாவும், ஆனி மாதம் 10 ஆம் நாள் (24.06.2010)வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், ஆனி மாதம் 11 ஆம் நாள் (25.06.2010) வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆனி 12 ஆம் நாள் (26.06.2010)சனிக்கிழமை பூரணைத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, ஆனி மாதம் 13 ஆம் நாள் (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை தெப்பத்திருவிழாவுடன் நிறைவுபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 16 நாள்களும் இரவு, பகல் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது.

எனவே தருமகொடை வள்ளல்களான உங்களிடம் எமது சபையால் நியமிக்கப்பெற்ற உத்தமத் தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் நீங்கள் பணம், பொருள் முதலியவற்றைக் கையளித்து சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi Commercial Bank.கண. இல.1247985001, Peoples Bank கட்டடம் Pettah அல்லது B. O.C. க/கு.இல .7687836, ஊர்காவற்றுறைக் கிளை, வேலணை என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். பணம், பொருள் என்பவற்றை வழங்குவதாயின் திரு.சி.சிவகுமார், வெற்றிலை மார்க்கட், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்காக நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லம் அமைக்கப்பெற்றுள்ளதென்பதை மன மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

''மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்''

அமுதசுரபி மண்டபம்,
நயினாதீவு - 02.
தொ.பே - 021 321 3575.

கு.சாந்தலிங்கம் - கௌரவ செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி,
அமுதசுரபி அன்னதானசபை. 10.05.2010

(சி/567630)

# பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கான இலவசப் பயிற்சிப் பட்டறை



- நீங்களும் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?
- ஊடகத்துறை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதா?

உங்களுக்கான ஐந்து நாள் இலவச பயிற்சிப் பட்டறைக்கு இன்றே விண்ணப்பியுங்கள்!

காலம்-ஜூன் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை.

**விடயங்கள்:**

- செய்தி அறிதல்
- செய்தி மூலங்கள்
- புலனாய்வுச் செய்தியிடல்
- செய்தித் தலைப்புகள்
- கட்டுரை எழுதுதல்
- செய்திக் கட்டுரைகள்
- பக்க வடிவமைப்பு
- இணையத்தளச் செய்திகள்
- ஊடகத்துறையில் தொழில்நுட்பம்
- பத்திரிகைத்துறையின் சவால்கள்
- பத்திரிகையாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

பயிற்சிப்பட்டறை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

அனுமதிக்கு சுய விவரங்களை தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பவேண்டிய முகவரி:

(விண்ணப்பங்களை mediatechnic@gmail.comஎன்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்).

'பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24*03*1922

மறைவு
15*04*2010



திருமதி

## தம்பிப்பிள்ளை மகிழ்மணி

திதி: பிரதமை - 15.05.2010

கடந்த 15.04.2010 வியாழக்கிழமை எமது அன்புத் தெய்வம் காலமான செய்திகேட்டு உடன்வந்து எமக்கு ஆறுதல் கூறித் தேற்றியோருக்கும், அன்னாரது மரணச் சடங்கில் கலந்துகொண்டு, பல வகைகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.05.2010) சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

அன்போடு எங்களை அரவணைத்து ஆனந்தித்து
பண்போடும் பாசமோடும் படிக்க வைத்தும் பார்தன்னில்
வண்ணமுற வாழ வழிகாட்டி, வளர்த்தெடுத்த எம்
கண்ணான தெய்வமே! உமைக் கனவிலும் நாம் நாம் மறவோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.04.1991

★கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் கொல்லப்படும் சம்பவங்கள் அரசினால் பெரிது படுத்தப் படுவதாக பி.பி.ஸி விமர்சிப்பு.

★இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்தியஸ்த முயற்சியில் இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ ஈடுபடுவதை விடுதலைப் புலிகள் நிராகரிப்பதாகத் தெரிவிப்பு.

17.04.1991

★ தமக்கோ அல்லது தமது தலைமையிலான அரசுக்கோ யுத்தத்தில் நம்பிக்கை யில்லை. பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை அரசு கைவிடவில்லை என ஜனாதிபதி பிரேமதாஸ பகிரங்கமாக அறிவிப்பு.

★வடக்கு - கிழக்கில் இலங்கை அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருக்கும் பொதுமக்களில் பலர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆகப்பிந்திய அறிக்கையில் தெரிவிப்பு.

18.04.1991

★ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிடுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை என விடுதலைப் புலிகளின் பிரமுகர் கிட்டு தெரிவிப்பு.

★ஐக்கியதேசியக் கட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்துள்ள இலங்கை மக்கள் கட்சிக்கு அமைச்சரவை யில் இடமளிக்கப்படலாம் என கொழும்பு வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

19.04.1991

★வடக்கு - கிழக்கு மக்கள் தமிழீழத்தை விரும்புகிறார்களா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்தை இலங்கை அரசு நிராகரித்து விட்டதாகத் தெரிவிப்பு.

★இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க புதிய இந்திய - இலங்கை ஒப்பந்தமொன்று செய்யப் படுவது அவசியமாகும் என தி.மு.க தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு.

20.04.1991

★வன்முறைகளைக் கைவிடும் பிரகடனத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என ஜனாதிபதி பிரேமதாஸ நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தெரிவிப்பு.

★ மடு அகதி முகாமுக்கு கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற பத்து லொறிகள் வவுனியாவில் படையினரால் தடுத்து வைப்பு.

21.04.1991

★மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் இடம் பெற்று வரும் உக்கிர சண்டையில் நேற்று முன்தினம் மட்டும் 9 படையினர் பலியான தாக பாதுகாப்புப் படைவட்டாரங்கள் தெரிவிப்பு.

★யாழ்.மாவட்டத்தின் புதிய அரச அதிபராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் பொன்னம்பலம் நியமிப்பு.

22.04.1991

★திருகோணமலையில் புதிதாகக் குடி யேற்றப்பட்ட சிங்களவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் அரசினால் துரிதமாக முன்னெடுக்கப் படுவதாகத் தெரிவிப்பு.

★அம்பாறை மாவட்டம், ஒக்கம் பிட்டிய சிங்களக் கிராமத்தில் புகுந்த இனந் தெரியாத ஆயுததாரிகள் 22 சிங்களப் பொது மக்களை சுட்டும் வெட்டியும் கொலை செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

23.04.1991

★முன்னாள் அமைச்சரும், தற்போதைய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி திஸநாயக்கா மூன்று நாள்களுக்கு முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக அறிவிப்பு.

★ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்களில் - கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் 130 படையினர் உயிரிழந்ததாக தெரிவிப்பு.

24.04.1991

★எதிர்வரும் மேதினக் கொண்டாட்டங்கள் இடம் பெறும்வேளை கொழும்பு நகரில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழலாம் என்ற அச்சத்தில் அரசு பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்வதில் தீவிரம்.

★ கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக ஊழியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவிடம் வருத்தம் தெரிவிப்பு.

25.04.1991

★ அரசுக்குத் தான் தயாரித்துக் கொடுத்த திட்டத்தின்படி படையினரால் முன்னேற முடியவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்ததாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு.

★இலங்கை முன்னேறாமல் இருப்பதற்கு தமது தந்தை உட்பட அரசியல்வாதிகளே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தனா தெரிவிப்பு.

26.04.1991

★நேற்றுப் பிற்பகல் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் நாரந்தனையில் உள்ள ஒரு வீட்டின் மீது விழுந்து வெடித்ததில் 8 பொதுமக்கள் உயிரிழப்பு.

★ வடக்கு - கிழக்கில் தினமும் குண்டு வீசி தமிழர்களை அழித்துக் கொண்டு, மறு புறத்தில் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி பிரேமதாஸ அடிக்கடி அழைப்பு விடுப்பது வேடிக்கையான விடயமாகும் என விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு தெரிவிப்பு.

27.04.1991

★இராணுவ நடவடிக்கைகளில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் பின்னடைவு, சர்வதேச மற்றும் உள்நாட்டு அழுத்தங்கள், பொரு ளாதார நெருக்கடிகள் என்பவை காரணமாக அரசு இராணுவத் தீர்வு காணும் முயற்சிகளை கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

★குடாநாட்டுடன் காரைநகரை இணைக்கும் பொன்னாலைப் பாலம் நேற்று குண்டு வைத்துத் தகர்ப்பு.

28.04.1991

★ 1956 இல் சுதந்திரக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றிய தனிச் சிங்களச் சட்டம் தான் தமிழர்களை ஆயுதம் தூக்க வைத்தது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

★திருகோணமலை மாவட்டம், சம்பூர் பகுதியில் நான்கு நாட்களுக்கு முன்னர் 12 தமிழ்ப் பொதுமக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்று ரயர் போட்டு எரித்ததாகத் தெரிவிப்பு.

29.04.1991

★ நேற்றும், நேற்று முன்தினமும் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் இடம் பெற்ற உக்கிர சண்டையில் இராணுவ உயரதிகாரி ஒருவர் உட்பட 25இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வேதனைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என நவசமசமாயக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றத்தில் பேசுகையில் தெரிவிப்பு.

30.04.1991

★ நேற்றுக்காலை மன்னார், நானாட்டான் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் அறுபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானதாகத் தெரிவிப்பு.

★இலங்கையில் காணாமல் போனதாகக் கூறப்படும் 2 ஆயிரத்து 182 பேருக்கு நேர்ந்த கதி குறித்து விளக்கமளிக்குமாறு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு அரசிடம் விளக்கம் கோரியுள்ளதாகத் தெரிவிப்பு.

# பத்தாயிரம் முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு என்கிறார் டி.யூ.குணசேகர

## பெண் உறுப்பினர்கள் 18 இல் விடுதலை

கொழும்பு, மே 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பத்தாயிரம் பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் - என்று சிறைச்சாலைகள் அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆயிரம் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளது. குறிப்பாக முன்னாள் பெண் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மே மாதம் 18 ஆம் திகதி விடுதலை அளிக்கப்படவுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்த வெற்றியைக் கொண்டாடும் நோக்கில் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு விடுதலை அளிக்கப்படவுள்ளது.

கைதுசெய்யப்பட்ட 11000 விடுதலைப் புலி உறுப்பினர்களில் இரண்டாயிரம் பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(சி)

# சமுர்த்தி அலுவலர்களுக்கு ஓய்வூதியம்; பஸில் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

சமுர்த்தி உத்தியோகஸ்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசேட குழுவொன்றை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று பொருளாதார அபிவிருத்தியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருள்தார அபிவிருத்தி பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் உயர் அதிகாரிகளை உள்ளடக்கியதாக இக்குழு அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் சுற்றுலா ஒன்றில் கடந்த புதன்கிழமை கலந்துகொண்டபோதே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இக்குழுவினர் சிபாரிசு அறிக்கை கிடைத்ததும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (சி)

# மலேஷியாவிலுள்ள 75 ஈழத் தமிழர்களை மீட்க 'துவாரம்' மனித உரிமை அமைப்பு நடவடிக்கை

கொழும்பு, மே 15

மலேஷியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள 75 ஈழத் தமிழர்களை மீட்கும் முயற்சியில், மலேஷியாவில் உள்ள துவாரம் மனித உரிமை அமைப்பு ஈடுபட்டுள்ளது என அதன் தலைவர் சட்டத்தரணி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து அகதிகளாகப் புறப்பட்டு ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் வழியில் படகுக் கோளாறு காரணமாக மலேஷியக் கடலில் தத்தளித்த 75 ஈழத்தமிழர்களை மலேஷிய கடற்படையினர் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தனி அறைகளில் அடைக்கப்பட்டு அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

75 ஈழத்தமிழர்களை மீட்கும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும், அவர்கள் அகதிகளாக வந்துள்ளார்களா? போலி விசாவில் வந்துள்ளார்களா என மலேஷிய அரசு விசாரணை நடத்தியது எனவும், விசாரணையில் அவர் அகதிளாக வந்துள்ளமை தெரியவந்தது எனவும் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

போலி முகவர்கள் இவர்களை அழைத்துச் சென்றனரா என்பது குறித்து தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் பல விசாரணைகள் முடிந்த பின்னரே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். விசாரணை அதிகாரிகளுடன் தாம் தொடர்பில் இருக்கின்றனர் எனவும் விரைவில் ஈழத் தமிழர்கள் விடுக்கப்படுவார்கள் எனவும் சட்டத்தரணி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

(சி)

# இயங்காமல் உள்ள சனசமூக நிலையங்களை செயற்பட வைப்பதற்கு நடவடிக்கை

வேலணை, மே 15

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் தற்போது இயங்காத நிலையிலுள்ள சனசமூக நிலையங்களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் க.மார்க்கண்டு தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் கிராமங்கள் தோறும் இயங்காத நிலையிலுள்ள சனசமூக நிலையங்களை இனங்கண்டு, அதற்கான காரணங்களை நிவர்த்தி செய்து இவற்றைத் தொடர்ந்தும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தருடன் இணைந்து எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-188)

# நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஜூலையில் முழுமையான பட்ஜெட் வருட இறுதியில்

## கெஹலிய தகவல்

கொழும்பு, மே 15

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் 2011 ஆம் ஆண்டிற்காக நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் ஜூலை மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:

2010 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டத்தை அரசு சமர்ப்பிக்கவில்லை. அதனால் மூன்று மாத அரச செலவீனங்களுக்கான தொகையை ஜனாதிபதி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத் தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்து கொண் டார்.

நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கான முதலாவது வாசிப்பு ஜூலை மாதம் இறுதியில் நிறைவுபெறும் என்பதுடன் முழுமையான வரவு - செலவுத்திட்டம் வருட இறுதியில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15.05.2010 முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கட்டுகொம்பரையில் வசிக்கும்
**யோகேஸ்வரன்- பகீரதி**
தம்பதியரின் செல்வப் புதல்வன் **ஜசிந்தன்**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (15.05.2010)
சனிக்கிழமை அப்பப்பாவின் இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு மாமி, சின்னமாமி, சித்தப்பா, குட்டிச்சித்தப்பா,
குஞ்சு சித்தப்பா, பாட்டி, அப்பா, அம்மா அனைவரும்
மண்டலாய்ப் பிள்ளையார் அருள்பெற்று வாழ
வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அம்மா, அப்பா.

கட்டுக்கொம்பரை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
தொ.பே.:
021 226 3048



ஜசிந்தன்

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY


## விழிப்புணர்வுக் கருத்தரங்கும் குறுந்திரைப்படக் காட்சியும்

யாழ்ப்பாணம்,மே 15

வலிகாமம் கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் கட்டாயக்கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் குறுந்திரைப்படக்காட்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-6)

## பொலன்னறுவையில் கடந்த வருடம் 211 கோடி ரூபாவுக்கு மது விற்பனை

கொழும்பு, மே 15

பொலன்னறுவை மாவட்ட மக்கள் கடந்த வருடம் மாத்திரம் 211 கோடி ரூபாவுக்கு மதுபானம் அருந்தியுள்ளனர் என்று அம் மாவட்டச் செயலாளர் நிமால் அபயசிறி தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தொழில் முயற்சியாளர்கள் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

''பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள நாலரை லட்சம் மக்களில் அதிகமானவர்கள் விவசாயம் செய்து வாழ்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் 32 நாள்களை மாத்திரமே விவசாயத்திற்காகச் செலவிடுகின்றனர். மீதி நாள்களில் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இருப்பினும்; அவர்கள் அதிக நேரங்களை விரயம் செய்கின்றனர்'' என்று அவர் அக்கூட்டத்தில் கூறியுள்ளார்.

அந்த ஓய்வு நேரங்களை அவர்கள் மது அருந்தியே செலவிடுகின்றனர் என்றும் கடந்த வருடம் மாத்திரம் அனுமதி பெறப்பட்ட 10 வகையான மதுபானங்களை அருந்துவதற்கு 211 கோடி ரூபாவை அந்த மக்கள் செலவழித்துள்ளனர் என்றும் நிமால் அபயசிறி கூறினார். (சி)


Jaffna College Institute of Technology Vaddukoddai
உடனடியாக விண்ணப்பிக்கவும்
> **Certificate Craft Course** (தமிழ் மூலம்)
Machine shop Practice (லேத் வெல்டிங் பயிற்சிநெறி)
காலம் : 1 வருடம் (முழு நேரம்)
கல்வித்தகைமை : G.C.E. (O/L)வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்டது
பயிற்சி முடிவில் தொழில் பெற ஒழுங்கு செய்து தரப்படும்
விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
**Director**
Jaffna College Institute of Technology
Vaddukoddai.
Tel.No: 0212228275, 0213213139 Email:jcit@sltnet.lk



## யாழ்-கொழும்பு பிரயாண சேவை



★ 29 இருக்கைகள் கொண்ட
A/C மினிபஸ் 1200/-
★ டொல்பின் வான்
யாழ்-கொழும்பு மட்டும் 1100/-
புறப்படும் நேரம்: 17.05.2010 திங்கள் இரவு 7 மணி.
வீடுகளுக்கு வந்து ஏற்றி இறக்கப்படும்.
முன்கூட்டிய ஆசனப் பதிவுகளுக்கு
★ ஞானம்ஸ் ரெக்ஸ்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
0213008197, 0212225679.
★ சாருஜன்
கொமினிக்கேசன்
கொக்குவில் 0212226127
★ யோகாஸ் கொமினிக்கேசன்
வட்டுக்கோட்டை
0213215948
★ தேவி கொமினிக்கேசன்
கொழும்புத்துறை
021 2223318



பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கவும், பதவி உயர்வு பெற்றவர்கள், ஓய்வுபெற்றவர்களைக் கௌரவிக்கவும், ஞாபகக் கேடயங்களை பல்வேறு வடிவங்களில் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்...
S.S.யசோதரன் ஆட்ஸ்
381u. கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020


## கரவெட்டியில் ஞாயிறன்று நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 15

சிலேடைக்கவிமணி க.கணபதிப்பிள்ளையின் ''பைந்தமிழைப் பாதுகாப்போம்'' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நல்லதம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரையை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் நூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜாவும் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற ஆங்கில முதுநிலை விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தியும் நிகழ்த்துவர். (ஒ-10)

## சமூக, விஞ்ஞான போட்டி

பருத்தித்துறை, மே 15

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான சமூக, விஞ்ஞான போட்டிகள் இன்று சனிக்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டி தரம் 6 இல் இருந்து தரம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையே தரரீதியாக நடத்தப்படவுள்ளது. (11)


# STUDY IN INDIA
இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து
பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு
Garden City College Affiliated to Bangalore University
SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : A/L Passes in Chemistry, Physics & Maths + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : A/L Passes in Chemistry, Physics & Biology + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : A/L Passes in any TWO Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.
யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
**Scholars Information Center (Sic)**
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 ★ 01 ★ 1940



ஆண்டவன் அடியில் 25 ★ 05 ★ 2009

அமரர் **திருநாவுக்கரசு வரதராசா**
(சிவம் அங்கிள்)

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் ஆயிரம் இரவுகள் கடந்தாலும்
ஏக தந்தையே எம்மையெல்லாம் ஏங்கவைத்து எங்கு சென்றீரோ- அப்பா
ஆண்டு ஒன்று என்ன ஆண்டாண்டு போனாலும் உம் நினைவு
ஆறவில்லையே- அப்பா ஆற்றாது இருக்கின்றோம்
பெருமரம் சரிந்து நிழல் இன்றி தவிக்கின்றோம்,நிழல் படமாகி விட்டீரே!
நிஜமெதுவென அறியாது இருக்கின்றோம் நித்திய ஜோதியில் நின் முகம் காண
நித்தமும் நிறைந்து நிற்கின்றோம் நிறைவல்ல இது தொடரும் நின் நினைவுகள்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

55/4, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (98179)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

16.05.2010 16.05.2010



## அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே16

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

அட்ஷய திருதியை தினத்தில் நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

## ஸ்ரீ குமரன்ஸ் நகையகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

177G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் TP: 021 2224509



அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

## பிறேம் நகைமாடம்

## PREM NAGAI MAADAM

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்

உரிமையாளர் : இ.பிறேம்குமார்

No.171, Prem Plaza, Jaffna Road, Manipay T.P:0777241485, 0773089572

அக்ஷய திருதியை தினத்தில்..



நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

## ஸ்ரீ வாணி நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

T.P : 222 3225



ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

**வாடிக்கையாளர்களே!**

அக்ஷய திருதியை முன்னிட்டு நாளை (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை உங்கள் நன்மை கருதி எமது ஸ்தபானம் திறந்திருக்கும் என்பதனை அறியத்தருகின்றோம்.

அன்று புதிய நகைகளை கொள்வனவு செய்யும்போது புதியபொருள் சேரும் என்றும் ஒரு ஐதீகம் உண்டு. எனவே நீங்களும் அக்ஷயதிருதியையின் பலனை அடைந்து கொள்ளுங்கள்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.



## பிரசாத் நகை அகம் தங்கப்பவுண் நகை வியாபாரம்

177 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் .தொ.பே: 021 2225906

## அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

**வாடிக்கையாளர்களே!**

அக்ஷய திருதியை முன்னிட்டு நாளை (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை உங்கள் நனமை கருதி எமது ஸ்தாபனம் திறந்திருக்கும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்று புதிய நகைகளை கொள்வனவு செய்யும்போது புதியபொருள் சேரும் என்று ஒரு ஐதீகம் உண்டு. எனவே நீங்களும் அக்ஷயதிருதியின் பலனை அடைந்து கொள்ளுங்கள்.

"அசல் 22 கரட் தங்கநகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்."



## வினோ நகைப்பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5394



## பிரம்யா நகைமாடம்

முந்துங்கள்,...முந்துங்கள்,...முந்துங்கள் வாடிக்கையாளர்களே!

நாளை ஞாயிற்றுக்கிழமை (16.05.2010) அக்ஷய திருதியை தினத்தில்

ஒரு பவுனுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு பெறுமதியான இலட்சுமி தங்க நாணயம் இலவசம்.

சுபநேரம் காலை 9 - மாலை 3 பிரம்யா நகைமாடம், யாழ்.வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.



## அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 16

கிளிநொச்சி, கனகபுரம் வீதியில் **இளவரசி நகைமாடம்** என்ற பெயரில் இயங்கிய எமது நிறுவனம் தற்போது 177C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் **நித்தியா நகைமாடம்** (சதோசாவிற்கு முன்) எனும் பெயரில் இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

16.05.2010 16.05.2010

## தங்கம் வாங்கப்.... (7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்திருநாட்டில் வாழும் இந்து மதத்தவர்கள் மத்தியிலும் இத்தகைய நம்பிக்கை மேலோங்கி இருப்பதன் காரணமாக இந்த ஆண்டின் சித்திரைத் திருதியை நாளான நாளைய தினம் தத்தமது வசதி வாய்ப்புக்கு ஏற்ற விதத்தில் சிறியதோ, பெரியதோ, ஏதாவதொரு தங்க நகை வாங்கி விட வேண்டுமென்பதில் எமது இந்து மதப் பெண்கள் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது. வாழ்க்கையின் ஆதாரமே நம்பிக்கை தானே? இன்று உலகம் நவீனத்துவத்தில் எவ்வளவோ தூரம் முன்னேறிச் சென்று விட்டுள்ள போதிலும், தமது இனமத பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் கட்டிக் காத்துப் பேணிவரும் தமிழ் மக்கள் - இந்து மதத்தவர் நாளைய சித்திரைத் திருதியை தினத்தன்று தங்கம் தந்தால், திருமணத் தடை அகலும். உணவு தானியங்களை தானம் செய்தால், விபத்துகள் அகால மரணம் போன்றவை சம்பவிக்காது. கால்நடைகளுக்கு தீவனம் அளித்தால் வாழ்வு வளம் பெறும்.

அக்ஷய திருதியை தங்கத் திருநாள்
தங்கத் திருநாளாம் மே 16. அன்று தங்கத்தை கொள்வனவு செய்து உங்களின் வாழ்க்கையை ஒளிமயமாக்கிக்கொள்ளுங்கள்.
பூரணி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
வின்சர் தியேட்டர் அருகில், இல:1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஜுவல் பிளாசா
Jewel Plaza
91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 91,Power house, Road Jaffna
அக்ஷய திருதியை தங்கத் திருநாள்
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
மே 16 ஞாயிறு தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள்
இத்தினத்தில் எம்மிடம் தங்கம் வாங்கும் உங்களுக்காக விசேட விலைக்கழிவுகளும் பரிசுப்பொருள்களும் வழங்கப்படும்.
அக்ஷய தினத்தை முன்னிட்டு இன்று முதல் 15ஆம் திகதிவரை ஓடர் செய்யப்படும். தங்க நகைகளுக்கு விசேட விலைக்கழிவும் வழங்கப்படும்.
ஜுவல் பிளாசா
91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



### தங்கத் தேவதையாய் (சித்திரை வளர்பிறையில்) தரணிக்கு வரும் அக்ஷய திருதியை

அக்ஷய திருதியை
அற்புதத் திருநாள்
நாளை மலர்கின்றது.
நன்மைகளை பூமியில் படைப்பதற்கு
தங்கத் திருநாளை
தமிழர் யாம் வரவேற்போம்.
எழிலான சுபீட்சத்தை
ஏற்றதோர் செல்வமதை
மங்காப் புகழுடன்
மாண்புடன் அள்ளித்தரும்
அக்ஷய திருதியை
அகிலமெல்லாம் அரவணைப்போம்.
செல்வத்தை பெருக்கிடும்
தேவதையாய் வருகின்றாள்
தங்கம் பெறுவோர்க்கு
தாளாத கீர்த்திதனை சேர்த்திட
தரணிக்கு வருகின்றாள்
மே பதினாறு
மேதினக்கோர் உகந்தநாள்
ஐஸ்வரியம் நிறைந்தநாள்
அக்'ய பாத்திரமாய்
அமையும் இந்நாளில்
நிச்சயம் ஓர் தங்கம் பெறுவோம்
நிறைவுக்கோர்
நிலையமாய் உயர்வோம்
துறைதோறும் சோதியாய் மிளிர்வோம்.

*- மதுரகவி, காரை எம்.பி.அருளானந்தன் -*

அக்ஷய திருதியை தங்கத்திரு நாள்
கரன் நகை வாணியம்
மே 16 தங்கம் வாங்க சிறந்தநாள் இத்தினத்தில் தங்கம் வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிஷ்டத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தங்கத்திருநாள் வாழ்த்துக்கள்.
கரன் நகை வாணியம்
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
மே 16 ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் கடைதிறக்கும் TP : 021 2226083, 0714182480




அக்ஷய திருதியை தங்கத் திருநாள்
மே 16 தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள். இத்தினத்தில் தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்து தங்களின் எதிர்காலத்தை பொன்னாக்கிக்கொள்ளுங்கள்.
சாரங்கா நகை மாடம்
T.P.No: 222 6972, Fax. No: 222 8869
சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11
55, SEA STREET, COLOMBO - 11. TEL: 2434971. FAX: 0112434071



செல்வி நகை அகம்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)
அக்ஷய திருதியை தங்கத் திருவிழா மே 16
தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்
இத்தருணத்தில் விஷேட கழிவுகள் வழங்கப்படும்.
நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 16
ஐஸ்வர்யம் நிறைந்த தங்கத் திருநாளில் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும்போது தங்க ஐஸ்வர்யம் உங்களுடன் நிரந்தரமாக நிலைத்திருக்கும் அனைவரும் வருக! தங்க ஐஸ்வர்யம் பெறுக
இத்தினத்தில் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவும் பரிசுப் பொருள்களும் வழங்கப்படும்.
நிஷானந்தா ஜுவல்லறி
தொ.பே: கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய பெண் களுக்கான மரதன் ஓட்டப் போட்டியை அரச அதிபர் கே.கணேஸ் ஆரம்பித்து வைப் பதையும் மரதன் ஓட்டத்தில் கலந்து கொண்ட வீராங்கனைகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-நேசன்)

## மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு,மே 15

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் வடமாகாண மாவட்டங் களுக்கு இடையே நடைபெற்ற ஆண் களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

கே.ஜெயந்தன் (யாழ்ப்பாணம்), எம். ரகுவீரன் (வவுனியா), கே.காந்தரூபன் (மன்னார்), கே.நவநீதன் (வவுனியா), எஸ்.விஜிதரன் (யாழ்ப்பாணம்), வி.பிரதீபன் (மன்னார்), எஸ்.பிரசாத் (யாழ்ப்பாணம்), கே.எல்.கே.ஆரியரத்தினா (வவுனியா), ஆர்.ஸ்டான்ரின்(யாழ்ப்பாணம்), ஆர்.அரிகரன் (யாழ்ப்பாணம்) (6-86)

## யாழ்.மாவட்ட எல்லே போட்டிகள் 24 ஆம் திகதி

வலி.மேற்கு,மே 15

யாழ்ப்பாணம் மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே எதிர் வரும் 19ஆம் திகதி புதன்கிழமை நடை பெறுவதாக இருந்த எல்லே ஆண்கள், பெண்களுக்கான போட்டிகள் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும் இணைப்பாளருமான சண். தயாளன் அறிவித்துள்ளார். (6-86)

## மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகத்தின் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,மே 15

மூளாய் விக்ரோறி விளையாட்டக்கழகம் 'உயதன்' ஊடக அனுசரணையுன் நடத்தும் தர்மேசன் ஞாபகார்த்த மென் பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் இன்று சனிக் கிழமை பி.ப 2 மணிக்கு வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ மைதானத்தில் நடைபெற வுள்ளன.

வருடாந்தம் நடைபெறும் இப்போட்டியில் இம்முறை 64 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இன்று பி.ப 2மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சுதுமலை அம்பாள் வி.கவும் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் வி.கவும் மோதுகின்றன.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல்ஸ் வி.கவை எதிர்த்து ஆனைக்கோட்டை லெவன் ஸ்ரார் வி.க களமிறங்குகின்றது.

இறுதிப் போட்டி பி.ப 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்தேசியக் கூட்டமைப் பின்நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (6)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வலிகாமம் கல்வி வலயத்தின் மெய்வன்மை போட்டிகளின் சம்பியன்கள் தெரிவு

வலி வடக்கு,மே 15

வலிகாமம் கல்வீ வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மென்வன்மைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சம்பியனாக தெரிவு செய்யப் பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:

**11வயதுப் பிரிவு**

அன்ரனி ஜெரிஜோக் (இளவாலை மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை)

**13 வயதுப்பிரிவு**

பெனடிக் சேவியர் கனிஸ்ரன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி)

**17 வயதுப்பிரிவு**

மனோகரன் டக்சன் (மல்லாகம் மகா வித்தியாலயம்), ஜெயபாலசிங்கம் ஜெனந்தன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**19 வயதுப்பிரிவு**

செ.அகில்ராஜ்( அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)

**21 வயதுப்பிரிவு**

மகாராசா கஜதீபன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி),நவரட்ணம் நிஷாந் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி) (86)

## மாவட்ட பூப்பந்தாட்ட இறுதி ஆட்டங்கள்

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான போட்டிகள் யாழ்ப் பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்திலும் பெண்களுக் கான போட்டிகள் யாழ்ப்பாணம் சுண்டுக் குளி மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (6-86)

## தென்மராட்சிப் பிரதேச தடகளப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 15

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்று சனிக் கிழமை பி.ப. 2 மணிக்கு மட்டுவில் வளர் மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இப் போட்டி களுக்கு வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களப்பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை முதன்மை விருந்தினராகவும் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஏ.எவ். ஜே.ரூபசிங்கம், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராசமூர்த்தி, சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

அன்றைய தினம் பிரதேச மட்ட கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி யாட்டமும் நடைபெறுமென பிரதேச விளையாட்டு அலுவலர் கே.முகுந்தன் தெரிவித்தார். (50-207-288)

# ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் வலைப்பந்தாட்டப் போட்டி

## நிறுவனங்கள் விளம்பரத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயற்படக்கூடாது

விளையாட்டுப் போட்டிகளா? அவற்றினை நடத்தும் நிறுவனங்கள் வீரர்களுக்கு எவ்வித வசதியையும் செய்து கொடுக்கத் தேவையில்லை. குடிதண்ணீர் தொடக்கம் அனைத்து வசதிகளையும் வீரர்களே தேடிப்பெற்றுக் கொள்ள வேண்டும். எமது நிறுவனத்திற்கு பெயர் (விளம்பரம்) மட்டும் கிடைத்தால் போதும் என்றுதான் யாழ்ப் பாணத்தில் அண்மைக்காலத்தில் போட்டி களை நடத்தும் நிறுவனங்கள் நினைக் கின்றன என்று கருதவேண்டியுள்ளது.

ஆனால் அண்மையில் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தினால் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டி இவ்வாறுதான் விளையாட்டு நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக உள்ளது எனின் மிகையாகாது.

இந்தப் போட்டியில் ஏழு பாடசாலைகள் கலந்து கொண்டன. அவை அனைத்துமே மகிழ்வுடன் திரும்பிய விளையாட்டுப் போட்டி இதுவாகத்தான் இருக்கும் என்று கூறலாம். மற்றைய நிறுவனங்களில் வெற்றி பெற்ற அணிகளே மகிழ்வுடன் செல்லும். அவ்வாறு வெற்றிபெற்றாலும் கூட வெற்றிக்கிண்ணம் மட்டும் வழங்கப் படும். சில நிறுவனங்கள் சிறுதொகைப் பணத்தை வழங்கும்.

இதனால்தானோ என்னவோ? நிறுவனங்கள் நடத்தும் போட்டி என்றால் வீரர்கள் பங்கேற்பது என்பது மிகவும் குறைந்து விட்டது. தவிர பங்கேற்கும் வீரர்களும் இம்முறையாவது நிறுவனங்கள் சிறந்த முறையில் கவனித்துக் கொள்ளாத என்ற நப்பாசையுடனேயே கலந்து கொள்கின்றனர்.

ரெலிக்கொம்மினால் நடத்தப்பட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட பாடசாலை அணிகளுக்கு பரிசுகளாக கணிசமான அளவு பணத்தொகை வழங்கப் பட்டது. இது கலந்து கொண்ட பாடசாலை களுக்கு சந்தோஷத்தையும் அந்த பாடசாலை களின் விளையாட்டை அபிவிருத்தி செய் வதற்கும் நல்வாய்ப்பாக அமைந்திருக்கும்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங் களையும் பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களுடன் முறையே 15 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தவிர போட்டியில் பங் கேற்ற ஏனைய அணிகளுக்கு தலா 5ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளின் இறுதி யில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வு வெற்றி பெற்ற, கலந்து கொண்ட அணி களுக்கு ஒரு சலிப்பை ஏற்படுத்தும் நிகழ் வாகவே அமைவதுண்டு. ஆனால் இப்போட்டி யின் பரிசளிப்பு நிகழ்வு அவ்வாறு அமையாது உடனடியாகத் தொடங்கப்பட்டு குறுகிய நேரத்தில் முடிவடைந்தமையும் பாராட் டத்தக்கதாகும்.

தலையைப் பிளக்க வைக்கக்கூடிய இந்த உச்ச வெயிலில் விளையாடும் வீரர் கள் குடிதண்ணீருக்காக அலைந்து திரிய வேண் டிய தேவை இருந்தது. போட்டியை நடத்தும்நிறுவன அதிகாரிகள்மைதானத்தை எட்டிக் கூட பார்க்காது நிழலைமையில் [illegible]

சில நிறுவனங்கள் போட்டிகளை நடத்தியில் பரிசளிப்பு நடைபெறும் நேரத்தில் வருவார்கள். அதுவும் காலதாமத மாகத் தான். போட்டி மத்தியஸ்தர்களுக்குக் கூட எவ்வித வசதியையும் வழங்கு வதில்லை.

இப்போட்டியில் குடிதண்ணீர் வசதி செய்யப் பட்டிருந்ததுடன் குளிர்பானங்களும் வழங் கப்பட்டன. அதிகாரிகளும் போட்டியைப் பார்வையிட்டு கலந்து கொண்ட வீரர் களுக்கும்,ஆசிரியர்களுக்கும் வேண்டிய உதவிகளை நேரடியாகவே செய்துவழங்கினர்.

பரிசளிப்பு நேரம் தோல்வியடைந்த அணிகளையும், ஆசிரியர்களையும் சந்தித்து அவர்களுடன் உரையாடி அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுத்து திரும்பிச் செல்லும் எண்ணத்தையும் மழுங்கடித்து உபசரித்தனர்.

அதிகாரிகளுக்கு மொழிப்பிரச்சினை இருந்த போதும் அவர்கள் தமக்குத் தெரிந்த வகையில் அவர்களுடன் உரையாடினர். பரிசளிப்பின் போது கூட விரைவாக சான் றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கினர். வீராங்கனைகளுக்கு வழங்கப் பட்ட சான் றிதழ்களில் " உங்கள் முயற்சியை நாங் கள் மதிக்கிறோம்" என்ற வாசகம் அடை யாளப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின் முடிவில் அனைவரும் உதவியவர்களுக்கு நன்றிகூறி மகிழ் வுடனே சென்றனர். இங்கு நாம் இந்த விட யங்களை சுட்டிக்காட்டியதற்கான காரணம் பாடசாலைகளுக்கும், வீரர்களுக் கும் நன்கு தெரியும்.

விளம்பரத்தை மட்டும் செய்வதுடன் தமது பணியை நிறுத்திக் கொள் கின்றன. இந் நிறுவனங்களின் யாழ். மாவட்ட இணைப் பாளர்கள் தமது பணிகளை செவ்வனே செய்ய வேண்டிய தேவை உண்டு.

கடந்த காலங்களில் யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கித் திண்டாடிய எமது வீரர்கள் வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலையில் கூட தேசியரீதியில் சாதனைகளைத் தொடர்ந் திருந்தனர்.

ஆனால் தற்போது இங்கு ஓரளவு சுமூகநிலை ஏற்பட்டுள்ள நிலையில் விளையாட்டுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது இந்தப் போட்டிக ளினை தமது வர்த்தகத்தை பிரபல்யப்படுத்த விரும்பிய சில நிறுவனங்கள் கையாண்ட உத்தியாகவும் போட்டிகள் அமைந்தன.

### விண்ணன்

ஆனால் இப்போட்டிகளினால் வீரர்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டவில்லை. மாறாக மன உளைச்சலும், வேதனையுமே மிஞ் சின. தமது நிறுவனமே யாழ். வீரர்களுக்கு சிறந்த வாய்ப்புக்களை வழங்கியது என்று வாய்ச் சவால்விடும் நிறுவனங்களும் அதி காரிகளும் இவற்றினை உணர்ந்து கொண்டு உண்மைநிலையுடன் செயற்பட வேண்டும்.

நாம் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கு கின்றோம் எனக் கூறி யாழ்.மண்ணின் வீரர் களை அவமானத்திற்கும் ஆத்திரத்திற்கும் உள்ளாக்கும் நிறுவனங்களே இனியாவது உணர்ந்து செயற்படுவீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் கோரப்படுகொலை நினைவு நாளைக் கடைப்பிடியுங்கள்!

## உலகத் தமிழரிடம் நெடுமாறன் வேண்டுகோள்



சென்னை, மே 15

மே 17 முதல் மே 31 வரை உள்ள 15 நாள்களில் வீர வணக்கப் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தி முள்ளிவாய்க்கால் படுகொலையின் ஓராண்டு நினைவு நாளைக் கடைப் பிடிக்கும்படி உலகத் தமிழர்களிடம் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் பதறப்பதறப் படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழர்கள் மற்றும் போராளிகள் ஆகியோரின் முதலாண்டு நினைவு நாள் 17.05.10 அன்று வரவிருக்கிறது. நீண்ட நெடிய தமிழர் வரலாற்றில் இதுபோன்ற மிகக்கொடுமையான நிகழ்ச்சி நடந்ததேயில்லை. இந்த நாளை நினைவில் நிறுத்தி கொல்லப்பட்ட நமது மக்களுக்கு வீர வணக்கம் செலுத்தவேண்டிய கடமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. மே 17 முதல் மே 31 வரை உள்ள 15 நாள்களில் உலகெங்கும் உள்ள தமிழர்கள், குறிப்பாக தமிழ்நாட்டுத் தமிழர்கள் வீரவணக்கப் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தி முள்ளிவாய்க்கால் படுகொலை ஓராண்டு நினைவு நாளைக் கடைப் பிடிக்கும்படி அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

இக்கூட்டங்களில் கீழ்க்கண்டக் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டுகிறேன்.

* இலங்கை மீதான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் டப்ளின் அறிக்கையை ஏற்று அதன்மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஐ.நாவை வலியுறுத்த வேண்டும்.

* போர்க் குறித்த ஜெனீவா உடன்பாடுகளை அப்பட்டமாக மீறியும் போரின் இறுதி ஐந்து மாதங்களான ஜனவரி முதல் மே 2009 வரையிலான காலக்கட்டத்தில் கொடூரமான போர்க் குற்றங்களையும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களையும் புரிந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தளபதியாக இருந்த சரத்பொன்சேகா மற்றும் இவர்களுக்குத் துணையாக நின்றவர்கள் ஆகியோரைப் போர்க்குற்றவாளிகளாக கருதி சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும்.

* போர் முடிந்த பிறகும் ஐந்து மாதங்களுக்கு மேலாக முள்வேலி முகாம்களில் அடைபட்டுக் கிடந்த சுமார் மூன்று இலட்சம் மக்களில் ஒரு பகுதியினரை மட்டும் உலக நாடுகளின் கண்டனத்திற்கிணங்க விடுவிப்பதாக இலங்கை அரசு அறிவித்தது. ஆனால் முள்வேலி முகாம்களில் இன்னமும் அடைபட்டுக் கிடக்கும் மக்களும், தற்காலிகமாக வெளியேற்றப்பட்டவர்களும் தங்களின் சொந்த ஊர்களில் குடியேறமுடியாதபடி மீண்டும் அகதி வாழ்விலும் இடப்பெயர்வு வாழ்விலும் தவிப்பதிலிருந்து மீட்டுக் காக்க வேண்டிய கடமை ஐ.நா. பேரவைக்கு உண்டு. உடனடியாகத் தலையிட்டு இந்த மக்களைக் காக்கத் தவறினால் பேரழிவு ஏற்படும் என எச்சரிக்க வேண்டும்.

* போராளிகள் மற்றும் அரசியல் கைதிகள் என்ற பெயரால் தனி முகாம்களில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகிவரும் பன்னிரண்டாயிரம் பேரின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை ஐ.நா. பேரவைக்கு உண்டு. அதிலும் குறிப்பாக முகாம்களில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் பெண்கள் சந்திக்க நேர்ந்துள்ள பாலியல் கொடுமைகளிலிருந்து அவர்களை விடுவிப்பது சர்வதேச சமூகத்தின் நீங்காத கடமையாகும். எவ்வளவு விரைவாக இதில் செயற்பட்டு அவர்களை விடுவிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயற்படும்படி ஐ.நா. பேரவையையும் சர்வதேச சமூகத்தையும் வற்புறுத்த வேண்டும்.

* தமிழீழப் பகுதியில் பரவலாக சிங்களவர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப் படுகிறார்கள். ஏராளமான இராணுவமுகாம்களும் அமைக்கப்பட்டுள் ளன. இராணுவத்தினரின் குடும்பத்தினருக் கும் குடியேற்றப்பட்ட சிங்களவருக்கும் புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு அளிக் கப்படுகின்றன. இவற்றுக்கு நடுவே புத்தர் கோயில்களும் கட்டி எழுப்பப்படு கின்றன. தமிழர் பகுதியில் தமிழரை சிறு பான்மையினராக ஆக்கும் இம்முயற்சித் தொடருமானால் எதிர்காலத்தில் இலங்கை யில் தமிழினம் ஒடுக்கப்பட்ட இனமாக ஆகிவிடும்.

சிங்கள அரசின் இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தி தமிழ் மக்களையும் அவர்களின் பாரம்பரிய நிலப்பகுதியையும் பாதுகாத்துத் தரவேண்டிய கடமை ஐ.நாவுக்கு உண்டு என்பதை வற்புறுத்த வேண்டுகிறோம் - என்றுள்ளது.

# பார்வதி அம்மாளை நிபந்தனை இன்றி இந்தியாவுக்கு அழைத்து வரவேண்டும்

## சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு

சென்னை, மே 15

பார்வதி அம்மாளை நிபந்தனையின்றி தனி விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்து வரவேண்டும் என்றும், அவருக்கு அரசு செலவில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள், தமிழகத்தில் தங்கி சிகிச்சை பெற விரும்புகிறார் என முதல்வர் கருணாநிதிக்கு கடிதம் எழுதினார். அதை ஏற்று தமிழக அரசு பரிந்துரை செய்ததால் மத்திய அரசும் பார்வதி அம்மாள் தமிழகம் வர அனுமதி அளித்தது.

தமிழகத்தில் மருத்தவச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் மட்டும் தங்கியிருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. வேறு சில நிபந்தனைகளும் கூறப்பட்டன.



இந்நிலையில் மலேஷியாவில் விசா காலம் முடியும் தருவாயில் இருந்ததால், பார்வதி அம்மாள் திடீரென மலேஷியாவில் இருந்து கொழும்பு சென்றார். அங்கு தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள வல்வெட்டித்துறையில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். முன்னாள் எம்.பியும், அவரது உறவினருமான சிவாஜி லிங்கம் பார்வதி அம்மாளை கவனித்து வருகிறார்.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்னாள் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கருப்பன் ஒரு வழக்கை தொடர்ந்துள்ளார். அதில் பார்வதி அம்மாளுக்கு எந்த நிபந்தனைகளும் விதிக்காமல், தனி விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்து வர வேண்டும். அவர் விரும்பியமை போல் தமிழத்தில் தங்கி சிகிச்சை அளிக்க வேண்டும்.

இதற்கான செலவை அரசே ஏற்க வேண் டும் என்று தனது மனுவில் அவர் கூறியுள்ளார்.

# நளினி முறைப்பாட்டில் உண்மையில்லை; சிறப்புக் குழு விசாரணையில் தெரிவிப்பு



வேலூர், மே 15

உணவில் மருந்து கலக்கப்படுவதாக நளினி கூறிவந்த முறைப்பாட்டில் உண்மையில்லை என்று சிறைத்துறை அலுவலர்கள் கொண்ட சிறப்புக் குழு மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, வேலூர் பெண்கள் தனிச் சிறையில் உள்ளார். அவரது அறையில் கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி நடத்தப்பட்ட சோதனையில் செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. இதற்கிடையே, வேலூர் பெண்கள் தனிச்சிறையில் இருந்து தன்னை புழல் சிறைக்கு மாற்றக் கோரி சிறைத்துறை கூடுதல் இயக்குநர் ஷியாம் சுந்தருக்கு நளினி மனு அனுப்பி வருகிறார். இதுவரை அனுப்பப்பட்ட 8 மனுக்களில், 5 மனுக்கள் செல்போன் பறிமுதல் சம்பவத்துக்குப் பிறகு அனுப்பப்பட்டவை.

இறுதியாக நளினி கடந்த 28 ஆம் திகதி அனுப்பிய மனுவில், சிறையில் தனக்கு வழங்கப்படும் உணவில் சிறைத்துறையினர் மருந்து கலக்கின்றனர் எனக் கூறியுள்ளார்.

இதையடுத்து, சிறைத்துறை கூடுதல் இயக்குநர் ஷியாம் சுந்தர் உத்தரவின் பேரில், கோவை சிறைத்துறை துணைத் தலைவர் பி.கோவிந்தராஜ் தலைமையில், 3 பேர் கொண்ட சிறை அதிகாரிகள் சிறப்புக் குழு மே 4 ஆம் திகதி சிறையில் விசாரணை நடத்தியது. இதில், உணவில் மருந்து கலப்பதாக நளினி கூறிய முறைப்பாட்டில் உண்மையில்லை என்று தெரியவந்துள்ளது என சிறைத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும், இதுதொடர்பான அறிக்கை கூடுதல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

# செம்மொழி மாநாட்டுப் பாதுகாப்புக்கு 10 ஆயிரம் பொலிஸார் கடமையில்!

கோவை, மே 15

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டு பாதுகாப்புப் பணிக்கு 10 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர் - என்று கோவை மாநகர பொலிஸ் கமிஷனர் சைலேந்திர பாபு கூறினார்.

அவர் செய்தியாளர்களிடம் நேற்றுமுன் தினம் கூறியவை வருமாறு -

கோவையில் அடுத்த மாதம் நடக்கவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு ஏற்பாடுகள் வேகமாக நடக்கின்றன. இம் மாநாட்டில் பல லட்சம் பேர் பங்கேற்பர் என்பதால், பாதுகாப்புப் பணியில் 10 ஆயிரம் பொலிஸார் ஈடுபட உள்ளனர்.

வெளிமாநிலம், வெளிமாவட் டங்களில் இருந்து வரும் தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள், கட்டுரையாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் தங்குவதற்காக 70 விடுதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை, தனிப்படை பாதுகாப்பில் கொண்டுவரப் படும். இவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்ப துடன், மாநாடு நடக்கும் கொடீசியா அரங்கத்துக்கு காந்திபுரத்தில் இருந்து சத்தி வீதி, சரவணம்பட்டி வழியாக அழைத்துச் செல்லப்படுவர்.

மாநாடு நடக்கும் கொடீசியா வளாகத்தில் ஏற்கனவே ஒரு புறநகர் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது மேலும் மூன்றாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். தவிர, 24 மணி நேர பாதுகாப்புப் பணியில் அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

# இந்தியச் செய்திகள்

# ஈழத்தமிழர்களின் 'போர் முகங்கள்' ஓவியக் கண்காட்சி சென்னையில்!

சென்னை, மே 15

தமது உரிமைக்காக போராடும் ஈழத்தமிழர்களின் இன்னல்களை திரைபோடாமல் காட்டும் போர் முகங்கள் ஓவியக் கண்காட்சி சென்னையில் நடைபெற்று வருகிறது.

போர் முகங்கள் என்ற தலைப்பில் சென்னை ஓவியக் கல்லூரி ஆசிரியரும் ஓவியருமான புகழேந்தி சென்னை தி. நகரில் உள்ள செ.தெ.நாயகம் மேல் நிலைப்பள்ளியில் ஓவிய கண்காட்சிகளை நடத்தி வருகிறார். கடந்த 11ஆம் திகதி தொடங்கிய இந்த ஓவியக் கண்காட்சியில் மொத்தம் 80 படங்கள் வைக்கப்பட்டுள் ளன. ஒவ்வொரு ஓவியங்களிலும் ஈழத் தமிழனின் துன்பத்தை, ரத்தத்தை, கண்ணீரை காண முடிந்தது.

இதில் பெண்கள் பட்ட பாட்டையும் தத்ரூபமாக சில ஓவியங்கள் விளக்கின. ஒவ்வொரு ஓவியத்திற்கு கீழும் கூர்மையான கவிதை, காண்போரையும், படிப்போரையும் இலங்கைக்கே அழைத்துச் செல்லக் கூடிய வல்லமை பெற்றது.

அதேநேரம், சோகத்துடன் கண்களில் வெறியுடன் துப்பாக்கி ஏந்திய பெண், அன்றைக்கு ஒரு நாள் துப்பாக்கியை.நான் பாதுகாத்தேன் என்ற வீரவரிகள்.

ஈழம் கிடைக்காமல் போனதற்கு இனத் துரோகமும் ஒரு முக்கிய காரணம் என்பதை பறைசாற்றும் ஓவியத்தின் கீழ் துல்லியமாய் காட்டும் தொலை நோக்கில் தெரியாமல் போனவை முதுகின் பின் நின்ற துரோக முகங்கள்.

தமிழனாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக அவனுக்கு மரணம் கூட மறுக்கப் படுகிறது. இயல்பான வாழ்வு மட்டுமல்ல, இயல்பான சாவும் கூட அவனுக்கு மறுக் கப்படுகிறது என்பவற்றை சில ஓவியங்கள் கூறின.

# கொழும்புக்கு போதைப்பொருள் கடத்தல்; திருச்சிப் பயணி சென்னையில் கைது

சென்னை, மே 19

சென்னையில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் ரூபா ஒன்றரைக் கோடி போதைப்பொருளை கடத்த முயன்ற திருச்சி பயணி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் இருந்து கொழும்புக்கு நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணிக்கு விமானம் புறப்படத் தயாரானது. அப்போது அந்த விமானத்தில் கேட்டமின் என்ற போதைப்பொருள் கடத்தப்படுவதாக தகவல் வந்தது.

உடனே சுங்க இலாகா அதிகாரிகள் விமர்னத்தில் ஏறி பயணிகளிடம் சோதனை நடத்தினார்கள். அப்போது 'திருச்சியைச் சேர்ந்த விஜயகுமார் என்ற பயணி முன்னுக்குப்பின் முரனான தகவலை தெரிவித்தார். உடனே அவரது விமானப் பயணத்தை ரத்து செய்து உடைமைகளைச் சோதனையிட்டனர்.

அப்போது அவரது சூட்கேஸில் 14 கிலோ கேட்டமின் எனும் கொடிய போதைப் பொருள் இருந்தது. அதன் மதிப்பு ரூபா 1 கோடியே 40 லட்சம் ஆகும். உடனே விமானப் பயணி விஜயகுமார் கைது செய்யப்பட்டார்.

அவர் எங்கிருந்து யாருக்கு கடத்தி செல்கிறார்? கடத்தல்காரர்கள் யார்? என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## அகதிகள் முகாமில் மருத்துவ முகாம்

சிவகங்கை,மே15

இலங்கை அகதிகள் முகாம்களில், மருத்துவ முகாம் நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 115 முகாம்களில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர். இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பிறகும், தாய் நாடு செல்ல விருப்பம் இன்றி, இங்கேயே தங்கியுள்ளனர். இம்முகாம்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் வெடி விபத்து: 21 ஊழியர்கள் உயிரிழப்பு; 10 பேர் மீட்பு!

பீஜிங்,மே15

சீனாவின் தென்-மேற்கு குய்ஜு மாகாணத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 21 ஊழியர்கள் கொல்லப்பட்டார்கள். 10 ஊழியர்கள் மீட்கப்பட்டார்கள். உத்தியோகபூர்வ சின்குவா செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அன்ஷுன் நகருக்கருகில் அமைந்துள்ள இந்த நிலக்கரிச் சுரங்கம், யான்யாங் நிறுவனத்துக்கு உரியது. இது ஒரு தனியார் நிறுவனமாகும். விபத்து சம்பவித்த சமயம் அறுபதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''சுரங்கத்துக்குள் நள்ளிரவில் வெடி விபத்து சம்பவித்துள்ளது என எமக்குத் தகவல் கிடைத்தது. நாம் விரைந்துவந்து மீட்புப்பணியில் ஈடுபட்டோம்'' என மீட்புக் குழுவைச் சேர்ந்த ஊழியர் ச்ாவோ, சின்குவா செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

''நாங்கள் உள்ளே சிக்குண்டிருந்த 10 ஊழியர்களை மீட்டோம். கார்பன் மொனொக்ஸைட் வாயுவை சுவாசித்தமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் இவர்களில் ஐவர் அவதிப்பட்டனர். இவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

''தனியார் சுரங்கங்களில் பெரும்பாலான சுரங்கங்கள் பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடிப்பதில்லை. அதனால், அடிக்கடி சுரங்க விபத்துகள் ஏற்படுகின்றன. 2009 ஆம் ஆண்டில் சீனாவில் 1,616 சுரங்க விபத்துகள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 2,631 சுரங்க ஊழியர்கள் பலியாகியுள்ளார்கள்'' என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

''ஜாங்ஸி மாகாணத்தில் இவ்வருட மார்ச்சில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 115 ஊழியர்கள் மீட்கப்பட்டார்கள். சில ஊழியர்கள் ஒருவார காலம்வரை சுரங்கத்துக்குள் சிக்குண்டிருந்துள்ளார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அரங்கில்

## ஒட்டகச்சிவிங்கி உதைத்து 20 வயதுப் பெண் மரணம்

லிம்போபோ, மே 15

தென்னாபிரிக்காவில் ஒட்டகச்சிவிங்கியால் உதைக்கப்பட்ட பெண்ணொருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார்.

தென்னாபிரிக்காவிலுள்ள லிம்போபோ மாநிலத்தில் உள்ள ஒட்டகச்சிவிங்கி பண்ணையில் பெண் ஒருவர் தனது 2 நாய்களுடன் நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தார்.

அப்போது, அந்த நாய்களில் ஒன்று ஒட்டகச்சிவிங்கியின் கூட்டத்துக்குள் பாய்ந்தது. அது ஒட்டகச்சிவிங்கிகளை பயமுறுத்தியது. அந்தப் பெண் நாயை ஒட்டகச்சிவிங்கிகள் இருக்கும் பகுதியிலிருந்து மீட்பதற்காக அந்தப் பெண் சென்றார்.

அப்போது, ஓர் ஒட்டகச்சிவிங்கி அந்த பெண்ணை எட்டி உதைத்தது. அவரது கழுத்தில் அதன் கால்கள் பதிந்ததால் அவர் பலத்த காயமடைந்தார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அந்த 20 வயது பெண் இறந்து போனார்.

## பிலிப்பைன்ஸ் தேர்தலில் 80வயது இமெல்டா வெற்றி

மணிலா, மே 15



பிலிப்பைன்ஸில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் சர்வாதிகாரியான பெர்டினான்ட் மார்க்கோசின் மனைவியும் காலணிகளை அளவுக்கு அதிகமாக வாங்கிக் குவித்து வைத்திருந்தவருமான இமெல்டா வெற்றி பெற்றார்.

அவருக்கு இப்போது 80 வயது ஆகிறது. இவரது கணவர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வாதிகாரியாக இருந்து நாட்டை ஆண்டவர்.

1986ஆம் ஆண்டு அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அகினோ தலைமையில் இடம்பெற்ற புரட்சி காரணமாக மார்க்கோஸ் ஆட்சி இழந்தார்.

இதையடுத்து, அவர் தனது குடும்பத்துடன் நாட்டை விட்டு ஹவாய் தீவுக்குத் தப்பி ஓடினார். அகினோ புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். 1989ஆம் ஆண்டு மார்க்கோஸ் இறந்த பின்னர் இமெல்டா நாடு திரும்பியபோது தான் இவரது ஆடம்பர வாழ்க்கை வெளி உலகத்துக்குத் தெரியவந்தது.

இவர் தன் வீட்டில் வாங்கிக் குவித்துவைத்திருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலணிகளைப் பார்த்து உலகமே அதிசயித்தது. இவர் 1992-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். அதன் பின்னர் 1995 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார். தற்போது சமீபத்திய தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளார்.

## பாக். ஜனாதிபதிக்கு ஆதரவாக அவரது புதல்வி தேர்தல் பிரசாரம்

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்கு ஆதரவாக அவரது மகள் பக்தாவர் இணையத்தள பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். தாமாக முன்வந்து அதிகாரங்களை விட்டுக்கொடுத்த முதல் ஜனாதிபதி, எங்கள் அப்பாதான் என்று அவர் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

பெனாஸிர்-சர்தாரி தம்பதிக்கு பிலாவல் என்ற புதல்வனும், பக்தாவர், அசீபா ஆகிய 2 புதல்விகளும் இருக்கிறார்கள். பக்தாவர், பிரிட்டனில் எடின்பரோ நகரில் படித்து வருகிறார். அவரின் தங்கை அசீபாவும் அந்த நகரில் தான் படித்துவருகிறார்.

பக்தாவர் தன் தந்தை சர்தாரியைப்பற்றி பத்திரிகைகள் விமர்சிப்பதை நினைத்து மிகுந்த வருத்தம் அடைந்துள்ளார். அந்த விமர்சனத்துக்கு பதில் அளிக்கும் பொருட்டும், அவர் புகழைக் காக்கும் முகமாகவும் இணையத்தளத்தில் பக்தாவர் எழுதியுள்ளார்.

'பாகிஸ்தான் பத்திரிகைகள் என் தந்தையை மிஸ்டர் 10 சதவீதம் (பெனாஸிர் பிரதமராக இருந்தபோது, அவர் அரசில் ஏதா வது காரியம் ஆகவேண்டும் என்றால் அதற்கு 10 சதவீதம் கமிஷன் வாங்கிக் கொண்டு காரியத்தை முடித்துக்கொடுப்பார். இதனால்தான் பத்திரிகைகள் அவரை அப்படிக் கேலி செய்தன) என்று கேலி செய்தன. ஆனால் மிஸ்டர் 10 சதவீதம்தான் இந்த நாட்டுக்கு 110 சதவீதத்தைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

''பாகிஸ்தானில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஒருவர் தாமாக முன்வந்து அதிகாரங்களை விட்டுக்கொடுத்திருக்கிறார். பாகிஸ்தான் வரலாற்றில் முதன் முறையாக இப்படிச் செய்த முதல் ஜனாதிபதி, எங்கள் அப்பாதான்'' என்றும் அந்த இணையத்தளத்தில் பக்தாவர் எழுதியுள்ளார்.

## ஆஸி.விஸா கட்டுப்பாட்டால் மாணவர் வரவில் வீழ்ச்சி

மெல்போர்ன், மே 15


ஆஸ்திரேலியாவில் அண்மையில் கொண்டுவரப்பட்ட விஸா கட்டுப்பாட்டால், அங்கு பயில வெளிநாடுகளிலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 40 சதவீதம் குறைந்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் சமீபகாலமாக இந்திய மாணவர்கள் தாக்கப்படுவதால் அரசு, மாணவர்களுக்கான விஸாவில் சில மாற்றங்களைக் கொண்டுவந்தது.

இதனால் இந்தியா, சீனா, வியட்நாம் ஆகியவை உள்ளிட்ட நாடுகளிலிருந்து உயர் கல்விக்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 40 சதவீதம் குறைந்துள்ளது.

இது குறித்து கல்வி அதிகாரி டோனி பொல்லாக் கூறுகையில், ''அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கையால் சுமார் 180 கோடி வரை நட்டம் ஏற்பட்டுள்ளது'' என்றார்.

## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை கந்தசாமி

(முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கந்தசாமி நேற்று(14.05.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கைதடி வடக்கு, கந்தையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணிதேவியின் பாசமிகு கணவரும் குகாந்தகி (லண்டன்), குகாமினி(கைதடி), குகாயினி(சுவிஸ்), குகந்தன்(கனடா), குயிதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீஸ் கந்தராஜா (லண்டன்) பார்த்தீபன்(கமநல நிலையம், உரும்பிராய்), சிறிதரன் (சுவிஸ்), ஜீவிகா (கனடா), மகிந்தினி(கைதடி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பத்மஜன் (லண்டன்), லக்சிகா(லண்டன்), கோபிசன்(கைதடி), அபிராமி (சுவிஸ்), ஆகாஷ்(சுவிஸ்), பமிக்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் விஜயரட்ணம், கமலாதேவி ஆகியோரின் சகோதரனும் அருணாசலம், செல்வமலர், சத்தியதேவி(லண்டன்), குருபரன்(கொழும்பு), காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் இராஜகீதா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கைலாயபிள்ளையின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*''குக கிரி''*
*கைதடி கிழக்கு, கைதடி.*
0212225747

(98286)

தகவல் :
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 ★ 04 ★ 1959



ஆண்டவன் மடியில் 15 ★ 05 ★ 2009

அமரர் **மனுவல் சில்வெஸ்டர்** *(றஞ்சன்)*

**''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்**
**விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''**

*எம் அருமை அப்பாவே! எங்கிருந்தோ வந்த எறிகணை*
*உம் உயிரை குடித்ததுவே*
*வெள்ளாம் முள்ளிவாய்க்கால் மண் மீது*
*முத்தமிட்டீரே! சத்தமிட்டுக் கத்துகிறோம்*
*மீண்டும் ஒரு முறை வருவீரோ? ஓராண்டு என்ன ஓராயிரம்*
*ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவுகள் என்றும் எங்கள்*
*உயிர் மூச்சாய் கலந்திருக்கும்.*

*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

(98262)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.


## Cisco-CCNA பயிற்சிப்பட்டறை

கணினி வலையமைப்பு ஒழுங்கமைப்பு (Cisco-Router-Configuration) சம்பந்தமான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் விடுமுறைக் காலத்தில் (27-30.மே) வரையும் Cisco-CCNA விரிவுரையாளர்களினால் நடைபெற உள்ளது. இது அரசின் ICTA அனுசரணையுடன் CCNA பரீட்சைக்குத் தயார்படுத்தும் நோக்குடன் நடைபெறுகிறது. தகவல் தொழில் நுட்ப உயர் தொழில் வாய்ப்புக்களை இலங்கை இளைஞர்களும் பெறும் நோக்குடன் ICTA இதற்கான கட்டணங்களின் ஒருபகுதியை வழங்குகின்றது. கணினி வலையமைப்பில் ஆவம் உடையர்களும், வெளிநாடு செல்லவிருப்போரும், புதிதாக தொழில் தேடுவோரும் தமது தொழில் நிலையை மேம்படுத்த விரும்பும் அனைவரும் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை இல. 324 பலாலி வீதி, பல்கலைக்கழக சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ் தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் விநியோகம் தொடர்பான விசேட சந்திப்பு

மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக மணலினை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் கூட்டுறவுச் சங்கங்களினால் தற்போதைய புதிய பட்டியலினூடாக சேவையில் ஈடுபடுபவர்கள் நாளை (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் தற்போதைய மணல் விநியோகச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை மாற்றங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாட வேண்டியுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

த. றஜீவ்,
இணைப்பாளர், மகேஸ்வரி நிதியம். (98122)

# மரண அறிவித்தல்கள்

## திருநாவுக்கரசு திருக்கமலன்

(தங்கோடை, காரைநகர்)



யாழ்ப்பாணம், காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு திருக்கமலன் 09.05.2010 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இறைவனடி எய்தினார்.

அன்னார் திருநாவுக்கரசு - கமலாம்பாள் தம்பதியரின் (கனடா) அன்பு மகனும் காலஞ்சென்றவரான வல்லிபுரம் ஐயாத்துரை மற்றும் அமிர்தாம்பிகை ஐயாத்துரை (லண்டன்) தம்பதியரின் அருமை மருமகனும் சுவர்ணாவின் (லண்டன்) அன்புக் கணவரும் கைலா, கயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கவிதா (கனடா), செல்லப்பா (அப்பி -கனடா), முகுந்தன் (கனடா) ஆகியோரின் அருமை அண்ணனும் மணிவண்ணன் (கனடா), சர்மிளா (கனடா), அஜந்தன் ஐயாத்துரை(லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் செல்லப்பா வேலுப்பிள்ளை - நாகேஸ்வரி, காலஞ்சென்றவரான இராமலிங்கம் வைத்திலிங்கம் (மிருதங்கவித்துவான்) மற்றும் வைத்திலிங்கம் சௌந்தராம்பிகை ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கனடா: 4162997272
647 - 404 - 8027
காரைநகர்: 0779651273 (98265)

தகவல்:
வே.சிற்சபேசன்,
செல்லப்பா ஸ்ரோர்ஸ்,
காரைநகர்.

## திருமதி பொன்னுத்துரை சிவபாக்கியம்



தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தவசிகுளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவபாக்கியம் 12.05.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் தேவராஜா, கந்தசாமி, திருச்செல்வம், அம்பிகாவதி, சோதிமணி, நாகேஸ்வரி, நகுலேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் மாலினிதேவி, தவஞானேஸ்வரி, நளாயினி, காலஞ்சென்ற இராசையா மற்றும் கோவிந்தசாமி, காலஞ்சென்ற அரியராஜா மற்றும் சுந்தரராஜா, சிவனடியான், தவராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தவசிகுளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிகுளம்,
வவுனியா. (98263)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா சத்தியசீலன் (மாறன், அப்பன்)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் சென்னை, இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சத்தியசீலன் நேற்றுமுன்தினம் (13.05.2010) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கந்தையா - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் திரு.திருமதி நவரத்தினம் தம்பதியரின் மருமகனும் விஜிதாவின் (நீர்வேலி) அன்புக் கணவரும் இந்துஜன், தனுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராஜா, ராசமோகன் மற்றும் செந்தில்நாதன் (சுகா தார பணிமனை, சாவகச்சேரி), சறோஜினிதேவி (சுவிஸ்), பவளராணி (கைதடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மல்லிகா தேவி, ஈஸ்வரன் (சுவிஸ்), பத்மாதேவி, செல்வரட்ணம் (தபால் ஊழியர், வேலணை), கயேந்திரன் (கைதடி), தர்மி (இந்தியா), நிது (இந்தியா), மயூரன் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னை, இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி ச. விஜிதா,
19/1, திருவள்ளுவர் காலனி,
64 ஆம் தெரு பந்து செர்ச்,
கே.கே.நகர், 678000
சென்னை.
தொ.பே.: 00919884317512
(98268)

தகவல்:
இ.கந்தையா குடும்பத்தினர்
(கைதடி தெற்கு)
0776147823


## வேலை ஆள் தேவை

ரிறிய டிங்கரிங் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு: இல.284, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778285872

## நாஹா மருத்துவ நிலையம்

அதிக அவஸ்த்தைகளை தரும் பாரிசவாதம், ஆஸ்துமா, நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், குழந்தைகளின் நோய்களை துல்லியமாக பரிசீலிக்கும் நிபுணத்துவ வைத்தியம்.

கிழமை நாள் 3.30 p.m.- 7 p.m
சனி, ஞாயிறு 8.30 a.m - 2 p.m

பலாலி வீதி,
பெற்றோல் செற் அருகில்
உரும்பிராய்.
(98281)

## தவறிவிட்டது

வியாபாரிமூலை, பருத்தித்துறை என்னும் முகவரியுடைய கணபதிப்பிள்ளை ரங்கநாதன் என்பவரது தே.அ.அட்டை (782614630v) தும்பளைக்கும் வியாபாரி மூலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0214901116

## LAP TOP விற்பனைக்குண்டு

வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய LAP TOP மற்றும் P4 கணனி உத்தரவாதமுடையது. விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774744644

## டிராக்டர் விற்பனைக்குண்டு

RA - xxxx , MF 240 டிராக்டர் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779174953

## காணி விற்பனைக்கு

சங்குவேலி மத்தியில் வீட்டு கட்டடத்துடனும் கிணற்றுடனுமான 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
021 222 3578
0773963284
(Vavuniya)
(98266)


## ஹொக்கிச் சங்க பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கழகங்களின் இரு பிரதிநிதிகளைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ஆர். குகன் கேட்டுள்ளார். (ஒ-1)

## வெட்டுப்புள்ளி ஜூன் முதல் வாரத்தில்?

இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரங்களை ஜூன் முதல் வாரத்தில் வெளியிட எதிர்பார்க்கிறது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை மீள் திருத்தப் பெறுபேறுகள் இன்னும் தமக்குக் கிடைக்கவில்லை யெனவும் மீள்திருத்தப் பெறுபேறுகள் கிடைத்தவுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளை வெளியிட முடியுமெனவும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## இராசநாயகம் சண்முகபாலன்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும், கல்கிசையை (Templers Road) தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் சண்முகபாலன் 07.05.2010 (வெள்ளிக்கிழமை) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் இராசநாயகம் - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைசாமி - சின்னதவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனசுந்தரியின் அன்புக் கணவரும், திலீபன், பார்த்தீபன், சஜித்தா, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரோஜினி, தேவன், ஷர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனிஷ்கா, ஷோபிகா, ஜீவிகா, பிருந்தாபன், அனுஜன், அபிஷ்கா, அஷ்பிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தனஞ்சயன், கமலா மகாதேவன், கனகரட்ணம், லீலா சிவக்கொழுந்து, தனபாலன், தனலக்ஷ்மி மற்றும் இராமச்சந்திரன், இந்திராணி, சரஸ்வதி, ஸ்ரீமதி, Lion ரஞ்சன், ராதா, ரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.05.2010 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1, BA தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0212223579 / 0773053018

தகவல் :
Lion B.R.ரஞ்சன்
(சகோதரன்).
(98269)

## ஆறுமுகம் அம்பலவாணர்



கல்வத்தை, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஆறுமுகம் அம்பலவாணர் (ஓய்வுபெற்ற பொது நூலகர், நெல்லியடி பட்டினசபை) 12.05.2010 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அறுமுகம் - நீலாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும், அபர்ணா (ஜேர்மனி), Dr.அமுதா, காலஞ்சென்ற அங்கயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சகுந்தலாதேவி, இராஜரட்ணம் (கனடா), நவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாஸ்கரவேல் (ஜேர்மனி), Dr.கிருசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வேலாயுதம், கணேஷ், காலஞ்சென்ற வேலும்மயிலும் மற்றும் இராஜரட்ணம், சுந்தரவதனா, நந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லிபிகா (ஜேர்மனி), கிறிஸ்ரீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2010) சனிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்வத்தை, வதிரி, கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் வதிரி, ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வத்தை,
வதிரி, கரவெட்டி. (சி/567652)

தகவல்:
குடும்பத்தினர்.


யாழ்.அரச ஊழியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்...

நீங்களும் தரம்மிக்க புதிய கணனி ஒன்றினை வங்கிக்கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

ADVANCED TECHNOLOGY SOLUTIONS
N0-370, Point Pedro Road, Jaffna.
(வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு அருகாமை)
T.P: 0213207295, Mob: 0773779465

யாழ்.நகரில் இப்பொழுது....
HP World

HP ELITE BOOK 6930P
INTEL CORE 2 PRO 2.53GHZ
2GB RAM, 320 HDD, 14.1" HDSCREEN
FINGER PRINT, DVD WRITER,
2 MEGAPIXEL WEB CAM
WI-FI, BLUETOOTH, WATER PROOF,
WINDOWS VISTA BUSINESS
RS. 153,000

HP PAVILION DV4-1059TX
INTEL CORE 2 DUO 2.2GHZ
2GB RAM, 320 GB HDD
512MB GEFORCE FINER PRINT
DVD WRITER, 2 MEGAPIXEL WEB CAM
WI-FI, BLUETOOTH, 14.1 HD SCREEN
WINDOWS 7HOME PREMIUM
RS. 110,000

HP PAVILION DV4-2124TX
INTEL CORE I3 330M 2.13 GHZ
2GB RAM, 320 GB HDD, 512 MB GEFORCE
FINGER PRINT, DVD WRITER,
2 MEGAPIXEL WEB CAM
WI-FI, BLUETOOTH, 14.1 HD SCREEN
WINDOWS 7HOME PREMIUM
RS. 139,000

OFFICEJET PRO 8000
PRINT SPEED: 35PPM BLACK& 34PPM COLOR
PRINT RESOLUTION: 4800X1200 DPI
MEMORY: 32MB,
DUPLEX PRINTING AUTOMATIC
RS 22,500

HPCOMPAQ CQ40 627TU
INTEL DUAL CORE 2.2GHZ
2GB RAM, 320 GB HDD
DVD WRITER, 2 MEGAPIXEL WEB CAM
WI-FI, BLUETOOTH, 14.1 HD SCREEN
OS DOS
RS.73,000

CQ 41 - 208TU
INTEL CORE I3 330M 2.13 GHZ
2GB RAM, 320 GB HDD
DVD WRITER, 14.1 HD SCREEN
WI-FI, BLUETOOTH,
2 MEGAPIXEL WEB CAM OS DOS
RS.96,000

CQ41 - 209TU
INTEL CORE I5 430M 2.2 GHZ
WITH TURBOBOOST UP TO 2.53GZZ
2GB 320 HDD 14.1 HD SCREEN
DVD WRITER, WI-FI, BLUETOOTH,
2 MEGAPIXEL WEB CAM OS DOS
RS.103,000

OFFICEJET PRO 6000
PRINT SPEED: 35PPM BLACK&
34PPM COLOR
PRINT RESOLUTION: 4800X1200 DPI
250 SHEET INPUT TRAY
1USB 2.0, 1 ETHERNET
RS.19,000

DESKJET F2480
ALL IN ONE: PRINT, SCAN & COPY
20 PPM BLACK &16 PPM .COLOR
4800X1200 DPI
80 SHEET INPUT TRAY
RS. 11,750

Authorized Business Partner
DESKIET 5560
RS.11,250

TECHNOLOGIES (Pvt) Ltd
N0-370, Point Pedro Road, Jaffna.
Mob: 0773435349, 0773779465


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்குள் நுழைந்தது அவுஸ்திரேலியா; போராடித் தோற்றது பாகிஸ்தான்!

## வீணானது அக்மல் சகோதரர்களின் அதிரடி

செனல்லூசியா, மே 14

மைக்கல் ஹசி- வைற் இணையின் அதிரடியான ஆட்டத்தினால் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது அவுஸ்திரேலியா.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி.யின் மூன்றாவது ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நேற்று செனல்லூசியாவில் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக கம்ரல் அக்மல் - சல்மான் பட் இணை களமிறங்கி வலுவான அடித்தளம் ஒன்றை இட்டது. இருவரும் இணைப்பாட்டமாக 80 ஓட்டங்களைப் பெற்றனர்.

6 பௌண்டறிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 33 பந்துகளில் அரைச்சதத்தைத் தொட்ட கம்ரன் அக்மல் ஜோன்சன் வீசிய பந்தில் வோர்னரிடம் பிடிகொடுத்து 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய உமர் அக்மல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் அடித்தாடினார். இந்நிலையில் பட் 4 பௌண்டறிகளுடன் 30 பந்துகளில் 32 ஓட்டங்களைப் பெற்று ஸ்மித்தின் பந்தில் வோர்னரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

உமர் அக்மலுடன் அப்ரிடி ஜோடி சேர்ந்தபோதும் அப்ரிடியால் 8 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. டேவிட் ஹசியின் பந்தை அடித்தபோது ஹடினால் பிடி எடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

லதீப் 6 பந்துகளில் ஒரு பௌண்டறி ஒரு சிக்ஸர் அடங்கலாக 13 ஓட்டங்களைப் பெற்று நானெஸின் பந்தில் வோர்னரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அப்துல் ரஸாக் 12 ஓட்டங்களுடனும் மிஸ்பா -உல்- ஹக் ஓட்டம் எதனையும் பெறாமலும் 'ரன் அவுட்' ஆகினர்.

அதிரடியாக ஆடிய உமர் அக்மல் ஆட்டம் இழக்காமல் 2 பௌண்டறிகள் 4 சிக்ஸர்களுடன் 35 பந்துகளில் 56 ஓட்டங்களைக் குவித்தார்.

பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைக் குவித்தது. அவுஸ்திரேலியா சார்பில் பந்து வீசிய நானெஸ், ஜோன்சன், ஸ்மித், டேவிட் ஹசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணியின் தொடக்க வீரர்களாக வோர்னர் - வட்சன் ஜோடி களமிறங்கியது.

அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பெரிதளவில் சோபிக்கவில்லை. வோர்னர் ஓட்டம் எதனையும் பெறாமலேயே ஆமெரின் பந்தில் உமர் அக்மலிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

ஷேன் வட்சன் 16 ஓட்டங்களுடன் ஆமெரின் பந்தில் ரஹ்மானிடம் பிடிகொடுத்து வெளியேறினார். ஹடின் 20 பந்துகளில் 2 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 25 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

மைக்கல் கிளாக் 17 ஓட்டங்களுடன் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். டேவிட் ஹசி 13 ஓட்டங்களுடன் ரஹ்மானின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்துப் பெவிலியன் திரும்பினார்.

தோல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த



அணிக்குக் கைகொடுத்தது வைற் மைக்கல் ஹசி இணை. விளாசலில் இறங்கிய வைற் 5 சிக்ஸர்களுடன் .31 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அனல் பறக்கும் ஆட்டத்தை வெளிப்படுத்திய மைக்கல் ஹசி, பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களின் பந்துகளை எல்லைக்கோட்டுக்கு வெளியே சிக்ஸர்களாகப் பறக்கச் செய்தார். ஸ்மித் 5 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 24 பந்துகளில் 3 பௌண்டறிகள் 6 சிக்ஸர்களுடன் 6 0 ஓட்டங்களைக் குவித்தார்.

ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களைப் பெற்றார்.

அவுஸ்திரேலிய அணி 19 .5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழிசமைத்த மைக்கல் ஹசி தெரிவானார்.

நாளை இரவு நடைபெறும் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா இங்கிலாந்தை எதிர்கொள்கின்றது.

இம்முறை இறுதிப்போட்டியில் மோதவுள்ள இரு அணிகளும் முதன்முறையாக உலகக் கிண்ண ருவென்ரி - 20 போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

**போட்டி இல.13**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

★அனுப்புபவர் பெயர் :.......................................

★ முகவரி :.......................................

★ தொ.பே.இல. :.......................................

**கேள்வி:**

1. 2 ஆவது ரி - 20 உலகக்கிண்ணப் போட்டியின் தொடர்நாயகன் யார்?

.......................................

2. 3 ஆவது உலகக்கிண்ண ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணிக்காக விளையாடி வரும் மோர்கன் சென்றமுறை எந்த அணிக்காக விளையாடினார்?

.......................................

3. 3 ஆவது உலகக்கிண்ணப் போட்டியின் போது இறுதிப் போட்டிக்கு முன்னதாக எத்தனை சதங்கள் பெறப்பட்டன?

.......................................

**போட்டி இலக்கம் 13 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள கிருபா லேணர்ஸ் சார்பாக ரூபா 2,000/- பெறுமதியான பரிசுப்பொதி வழங்கப்படும்.**

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

NALIN இன் காட்சியறையில் INTEL CORE i3 DESKTOP & LAPTOP அறிமுகம்
2.7 DUAL CORE/ ASUS G31 MB/ 1GB KINGSTON (800)/ 320 SAMSUNG HDD/ DVD WRITER SAMSUNG/
19' AOC/ 19' IG LCD 17' DELL GLOSY/ CASING POWERLOQIC/ POWERLOQIC KEYBORD MOUSE (BRANDED)/
LUMINOUS UPS (3 OUT)BRANDED FREE COMPUTER TABLE (BLACK)
PRO,LCD,HDD,RAM,DVD WRITER,CASING,WEB CAM, HEAD PHONE,HSDPA,ROUTER,UPS,PRINTER,SCANNER.
52,000 மட்டும்
1.6 ATOM/ 2.93 CORE DUO கணனிகள் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது | மூன்று வருட உத்தர வாதத்துடன் எங்கள் கணனிகள் உங்களுக்காக
195/4 Parameswarra Junction TP / Fax : 0212221166, 0777667974
NALIN Information Technologies Pvt Ltd

## மாலை நேரத்தில் நாடாளுமன்ற நிகழ்வுகள்; ஐ.தே.க. திங்களன்று முடிவு செய்யும்

கொழும்பு, மே 15

நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறுகின்ற நேரத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவது குறித்து ஐ.தே.க. எதிர்வரும் திங்கட்கிழமை இறுதி முடிவு எடுக்கின்றது.

சபை அமர்வுகளை இனிமேல் மதியம் 2 மணி முதல் இரவு 7 மணி வரை நடத்த வேண்டும் என்று அரசுத் தரப்பு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

நாடாளுமன்ற அமர்வுகள் இப்போது காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராய்ந்து இது குறித்து இறுதித் தீர்மானத்தை எடுப்பார்கள் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

ஆயினும், இவ்விடயத்தில் ஐ.தே.கவால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அரசிடம் இருந்து சாதகமான பதில் வரவேஇல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற அமர்வுகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஐ.தே.க. தனது யோசனையில் பிரதானமாக வலியுறுத்தியிருந்தது. ஆனால், அரசுத் தரப்புக்கு அந்த யோசனை சரியாகப்படவே இல்லை.

இது குறித்தும் கருத்துத் தெரிவித்த ஜோன் அமரதுங்க எம்.பி., பெரும்பாலான நாடுகளில் நாடாளுமன்ற அமர்வுகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன என்று கோடிகாட்டினார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், ''மக்களுக்கு அவர்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் என்ன செய்கின்றார்கள் என்பது நிச்சயம் தெரிந்திருக்கவேண்டும். அது அவர்களின் உரிமை ஆகும். ஆகவே, நாடாளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சியில் ஒளிபரப் பப்பட வேண்டும். அதற்கான அனுமதி ஊடகங்களுக்கு வழங்கப்படவேண்டும்'' என்றார்.

## ஓட்டோ சாரதிகளுக்கும் ஓய்வூதியம்; போக்குவரத்து அமைச்சு திட்டம்

கொழும்பு, மே 15

நாட்டிலுள்ள ஓட்டோ சாரதிகளுக்கு ஓய்வூதியத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஓட்டோ சாரதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் நாட்டில் இதுவரை 4 லட்சத்து 44ஆயிரத்து 551 ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ரோஹண திஸநாயக்க தெரிவித்தார்.

சகலருக்கும் ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்கப்படுமென கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி அறிவித்தமைக்கு அமைய நிதியமைச்சின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்துடன் இணைந்து போக்குவரத்து அமைச்சு இந்தத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளது என்றும் பிரதி போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தில் ஓட்டோ சாரதி கள் மற்றும், உரிமையாளர்கள் உள்ளடக் கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

## கொழும்பில்இன்று நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளில் இன்று காலை 9 மணி தொடக்கம் நாளை காலை 9 மணிவரையான 24 மணிநேரத்துக்கு நீர்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்திருக்கிறது.

நீர்விநியோகக் குழாய்களில் திருத்தவேலைகள் இடம்பெறவுள்ளதாலேயே.

நுகேகொட, கொஹுவல, ஜம்புக முல்ல, கவுடான, அத்திடிய, தெஹிவளை, கல்கிஸை, இரத்மலானை, சொய்சாபுர, கொலன்னாவை மாநகர சபை பிரதேசம், மொரகஸ்முல்ல, ராஜகிரிய, கொட்டிகா வத்தை, முல்லேரியா, நாவல, கொஸ் வத்தை வீதி மற்றும் மதினாகொட ஆகிய பகுதிகளில் நீர்வெட்டு அமுலில் இருக் கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 5,300 குடும்பங்களுக்கு இவ்வருட இறுதிக்குள் நிரந்தர வீடுகள்

இவ்வருட இறுதிக்குள் கிளிநொச்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள ஐயாயிரத்து 300 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உலகவங்கி, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் முற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன இது தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

மூவாயிரத்து 640 வீடுகள் உலகவங்கியின் நிதியுதவியுடனும், 100 வீடுகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடனும் புதிதாக அமைக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினால் ஆயிரத்து 600 வீடுகள் முழுமையாக புனரமைக்கபடவுள்ளன என்றும்-

இவ்வருட இறுதிக்குள் இந்த நிர்மாணப்பணிகள் நிறைவுபெறும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜி-15இன் தலைமைப் பொறுப்பு

கொழும்பு, மே 15

ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்ற ஜி-15 நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஈரானிய ஜனாதிபதி மஹ்மூட் அஹமதினியாட்டிடமிருந்து பொறுப்பேற்பார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஜி-15 நாடுகள் உலகின் மூன்றிலொரு சனத்தொகையைக் கொண்டுள்ளதுடன் இது உலகின் பெரும் பொருளாதாரங்கள் சிலவற்றை உள்ளடக்கியுள்ளது. இதில் ஆர்ஜென்ரினா, பிரேஸில், சிலி, எகிப்து, இந்தியா, இந்தோனேஷியா, ஈரானிய இஸ்லாமியக் குடியரசு, ஜமைக்கா, கென்யா, மலேசியா, மெக்சிக்கோ, நைஜீரியா, செனகல், இலங்கை, வெனிசூலா மற்றும் சிம்பாப்வே ஆகிய 17 வளர்முக நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

1989 செப்டெம்பர் மாதம் பெல்கிறேட்டில் 9ஆவது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின்போது இக்குழு ஸ்தாபிக்கப்பட்டதுடன் வளர்முக நாடுகளிடையே வலுவானதும் பரஸ்பர நன்மை பயக்கக் கூடியதுமான மேம்பாட்டிற்கான குறிக்கோளைக் கொண்டுள்ளது.

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியிருக்கிறேன். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி மக்களின் அச்சநிலையைப் போக்கி அவர்கள் சுமுகமான இயல்பு வாழ்க்கையை வாழ ஏற்பாடு செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அவரது வழிகாட்டலில் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

பொலிஸார் தீவிரமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பலரை அவர்கள் கைது செய்து நீதிமன்றங்களில் நிறுத்தியதுடன், தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதாவிட்டால், மேலும் கடும் நடவடிக்கைகளை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது. எப்படியாவது மக்கள் மத்தியில் நிலவும் அச்சத்தையும் பதற்றத்தையும் நீக்கி நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களைப் போன்று சுமுகமான இயல்பு வாழ்க்கையை குடாநாட்டு மக்களுக்கும் உறுதிப்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் பாதுகாப்பு வழங்கப்படும்

பல வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்கள் இன்னமும் அச்சத்துடன் வாழும் நிலைக்கு இடமளிக்கக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் எமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அவரது வழிகாட்டலில் சுமுகமான, அச்சமற்ற, வாழ்வை மக்கள் அனுபவிக்க ஏற்பாடு செய்வோம்.

நீதிபதிகளுக்கோ, சட்டத்தரணிகளுக்கோ, வேறு எவருக்கோ அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை நாம் வழங்குவோம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பங்காளிகளாக இருக்கும் நீதித்துறையினரும் சட்டத்தரணிகளும் அந்தப் பணியை செம்மையாக முன்னெடுக்க உதவவேண்டும்.

சட்டத்தரணிகள் தமது பகிஷ்கரிப்பை நிறுத்தி சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தங்கள் பங்களிப்பை வழங்கவேண்டும். இந்தச் செய்தியை உங்களிடம் விடுக்குமாறு பாதுகாப்புச் செயலர் என்னைப் பணித்தார். அதன் பிரகாரம் உங்களைச் சந்தித்து அச்செய்தியை விடுக்கிறேன்" - என்றார். (அ-1)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிச் சென்றவர்களால் தமிழ்நாட்டில் அவ்வமைப்பைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களையும் கருத்தில்கொண்டே அவ்வியக்கத்துக்கான தடை நீடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் கடந்த 1992ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியா தடை விதித்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் புலிகளுக்குத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

# படகில் ஆஸ்திரேலியா சென்றோரின் விவரம் கோருகின்றது இலங்கை அரசு

கொழும்பு, மே 15

சட்டவிரோதமாகக் கடல் வழியாக ஆஸ்திரேலியா நோக்கி சென்றுகொண்டிருந்த படகு விபத்திற்குள்ளானதில் காணாமல் போன ஐந்து இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை ஆஸ்திரேலிய அதிகாரிகளிடம் கோரியிருப்பதாக அங்குள்ள இலங்கையின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக ஆஸ்திரேலியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் சேனக்க வல்கம்பாய தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா நோக்கி சென்ற 60 இலங்கை அகதிகளை ஏற்றிய படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதில் பயணித்த ஐந்து பேர் காணாமல் போயினர் என ஆஸ்திரேலிய பாதுகாப்புப் பிரிவினர் கடந்த 10ஆம் திகதி அறிவித்திருந்தனர். சேதமடைந்த நிலையில் காணப்பட்ட படகிலிருந்த ஏனையோர் கிறிஸ்மஸ் தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என வலகம்பாய கூறியுள்ளார்.

காணாமல் போனவர்களைத் தேடுவதற்காக ஆஸ்திரேலிய அதிகாரிகள் மூன்று தினங்களாக சுழியோடிகளை ஈடுபடுத்திய போதிலும் சடலங்கள் எவையும் மீட்கப்படவில்லை. இதனால் தேடும் முயற்சியை ஆஸ்திரேலிய பாதுகாப்புத் தரப்பினர் கைவிட்டுள்ளனர்.

இதேவேளை படகு மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது கடலில் மூழ்கி உயிரிழந்தவர்கள் இளைஞர்களா என்பது குறித்து உறுதியாகக் கூற முடியாது என ஆஸ்திரேலிய அதிகாரிகள் இலங்கைக்கு அறிவித்துள்ளனர்.

# இலங்கை - பிரிட்டனுக்கிடையே உறவைப் பலப்படுத்த வேண்டும்

## அந்நாட்டுப் பிரதமரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 15

இலங்கை மற்றும் பிரிட்டன் நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் பலப்படுத்த வேண்டும் என அந்நாட்டு புதிய பிரதமர் டேவிட் கமரூனிடம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் டேவிட் கமரூனுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே, அவர் இதனைக் கூறினார்.

பலமானதும், ஸ்திரமானதுமான வழிகாட்டலை பிரிட்டனின் புதிய பிரதமர் அமைப்பார் என தான் நம்புகிறார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்திருக்கும் நிலையில் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள், மீள்கட்டுமாணம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு வருகின்றன எனவும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இடம்பெற்றிருந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றின்போது, இலங்கை அரசிற்கு மக்களால் ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கமையவே பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள், மீள்கட்டுமாணம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுவருகிறது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம், லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து பணிப்புறக்கணிப்பைக் கைவிடுவது குறித்து எமது சங்க உறுப்பினர்களுடன் எதிர்வரும் திங்கள் அல்லது செவ்வாய் ஆராயவிருக்கிறோம். அதன்பின் வழமையான பணியைத் தொடருவோம் - என்றார். (ஒ-1)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"தற்போது இடைக்காலப் பருவப் பெயர்ச்சி மழை காலமாகும். இருப்பினும், தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சிக்காலம் எம்மை அண்மித்து விட்டது." என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்தகம - அளுத்கம வீதி, ஜாவத்தை வீதி ஆகியவற்றில் வெள்ளத்தால் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. கொழும்பில் புறக்கோட்டை, ஆமர் வீதி, கொட்டஹேனப் பகுதி வீதிகளும் நேற்று போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காட்சியளித்தன. வத்தளையில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்தனர்.


CHEMISTRY=>S.Vasy
A/L 2011 — d தொகுப்பு மூலகங்கள் (Sat.Sun 11.45 - 12.45pm)
ஆரம்பம் 15.05.2010(இன்று)
A/L 2010 & Day — Paper Class
கடந்த கால கட்டுரை வினாக்கள் 2000-2009 வரையான
மிகவிரைவான மீட்டல் (Sat,Sun 1.00 - 2.00pm)
NEC ClockTower Road, Jaffna.

Networking Engineer
Government Scholarship
①System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
①வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
①USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
*Carrier Guidance, Student Visa, Work Permit
①செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்
Per Module- ~~15000~~/= 4800/=
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
Free Diploma in Hardware Technology-DHT, Diploma in English, COMPUTER DRIVING LICENCE-ICDL
இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே
MCS 324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
T.P-772395895

CHEMISTRY=>S.Vasy
A/L 2011 — அசேதன இரசாயனவியல்
ஆரம்பம் : 15.05.2010 (Sat) இன்று (Sat,Sun 4.45 - 5.45pm)
NAVALAR Jaffna

SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA
GCE O/L English: C or IELTS உடன் இலகுவாக உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும்
விண்ணப்பிக்க தகமைஉள்ளோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
அனுபவம் வாய்ந்த பிரபல விரிவுரையாளர்களால் இலாப நோக்கின்றி மிகக்குறைந்த கட்டணத்தில் IELTS வகுப்புக்கள் கொழும்பில் எம்மால் நடாத்தப்படுகிறது.
STUDY IN UKRAINE
Lungansk & Crimea State Medical University-(Ukraine)
இல் இணைந்து சிறீலங்கா medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக விரும்பினால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
STUDY IN POLAND
போலந்து (POLAND) நாட்டிற்கு வேலை வாய்ப்புடன் கல்வி பயிலக்கூடிய ஒழுங்குகள் ஆரம்பமாகியுள்ளன.
விண்ணப்பிக்க விரும்புவோர் எம்முடன் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
ஏற்கனவே தொடர்புகொண்டவர்கள் விபரங்களுடன் வருகை தரவும்.
அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 800 மணிமுதல் மாலை 500 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.
☎ 021 222 3818
☎ 021 567 3818
☎ 077 452 8818
தொடர்புகளிற்கு:
E-mail: mg1404_2009@yahoo.com
இல: 148,கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

விளையாட்டு உபகரணங்களின் மாபெரும் விலைக்குறைப்பு
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய காலணிகளின் விற்பனை
Football Boots
HARA ~~3400/=~~ 2750/-
PAN ~~3500/=~~ 2750/-
NIVIA ~~2400/=~~ 2000/-
Volleyball Shoe
ACE ~~2400/=~~ 2000/-
Running Spike
Sub Wind ~~3250/=~~ 2800/-
Health ~~3400/=~~ 2800/-
தேவையான அளவுகளில்.. தேவையான நிறங்களில்...
உடன் நாடவேண்டிய இடம்
New Power World Sports
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.
T.P. 0217913051


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமி[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org